விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஆனி 02 ஞாயிற்றுக்கிழமை (16.06.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 179

# யுத்தத்திற்கு 30 ஆண்டுகள்; அபிவிருத்திக்கு 4 ஆண்டுகள்

## ஜனாதிபதி பெருமிதம்

(கிளிநொச்சி), கடந்த 30 ஆண்டுகளில் அழிக்கப்பட்டவற்றை நாம் மீளப் பெற்றுக்கொண்டு வருகிறோம். அவற்றைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். யுத்தம் 30 ஆண்டுகள் நடைபெற்றது. ஆனால் அபிவிருத்தி 4 ஆண்டுகளில் நடைபெற்றுள்ளது. வித்தியாசத்தை நீங்களே பாருங்கள்; உங்கள் பிராந்தியம் துரிதமாக அபிவிருத்தியடைகிறது. அது மேலும் அபிவிருத்தியடைய வேண்டும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். (23ஆம் பக்கம் பார்க்க)



## ஒரு மீற்றருக்கு ஒரு இலட்சம்!

(யாழ்ப்பாணம்)

புனரமைக்கப்பட்ட ஏ-9 வீதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் உத்தியோக பூர்வமாக திறந்துவைக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு விடப்பட்டது. கண்டியிலிருந்து யாழ்ப்பாணம் வரை 153 கிலோ மீற்றர் நீளமுள்ள இவ் வீதியைப் புனரமைப்பதற்காக ஒப்பந்தத் தொகையாக 19ஆயிரத்து 125 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது.

30 மாதங்களை ஒப்பந்த காலமாகக் கொண்டு கடந்த 2011-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 7-ம் திகதி ஆரம்பிக்கப்பட்ட (24ஆம் பக்கம் பார்க்க)

## கிளி. நகரில் தீவிர பாதுகாப்பு

(கிளிநொச்சி)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் நேற்றைய கிளிநொச்சி விஜயத்தை முன்னிட்டு நகர் முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டிருந்தன.

பொலிஸார்,இராணுவத்தினர்,விசேட அதிரடிப் படையினர், ஜனாதிபதி பாதுகாப்பு படையினர் என தீவிர கண்காணிப்புடன் ஏழு அடுக்கு பாதுகாப்பு அங்கு போடப்பட்டிருந்தது.

இதைவிட மக்கள் வங்கியின் கிளிநொச்சி கிளைக்கு அருகில் பிரமாண்டமாக அமைக்கப்பட்டிருந்த நிகழ்வு மண்டபமும் மோப்ப நாய்கள மற்றும் இலத்திரனியல் கருவிகள் மூலம் (23ஆம் பக்கம் பார்க்க)

# தமிழக முதலமைச்சரால் இலங்கைக்கு அச்சுறுத்தல்

## பாதுகாப்பு செயலர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா இந்திய மத்திய அரசுக்கு கொடுத்து வரும் அழுத்தங்கள் இலங்கையின் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளதாக பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொத்தலாவல படைத்துறைக் கல்லூரியில் முதுமாணி மற்றும் கலாநிதிப் பட்டப் படிப்புகளைத் ஆரம்பித்து வைத்து உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"இலங்கையின் நிலைமைகளை இந்தியா (23ஆம் பக்கம் பார்க்க)

## பேராசிரியர் பாலகிருஷ்ணன் காலமானார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஓய்வுபெற்ற பொருளியல் துறைத் தலைவரும் கலைப் பீடா



திபதியும் வவுனியா வளாகத் தலைவருமான பேராசிரியர் என்.பாலகிருஷ்ணன் நேற்று கொழும்பில் காலமானார். அவருக்கு வயது 75.

1959-ம் ஆண்டு பேராதனைப் (23ஆம் பக்கம் பார்க்க)

## மணிவண்ணன் காலமானார்; கடைசி ஆசை நிறைவேறியது

(சென்னை)

பிரபல தமிழ்த் திரைப்பட இயக்குநரும் நடிகருமான மணிவண்ணன மாரடைப்பால் காலமானார். அவருக்குவயது 58.



நெசப்பாக்கத்தில் உள்ள தனது வீட்டில் அவரது உயிர் பிரிந்தது.

மணிவண்ணனுக்கு மனைவியும் மகனும், ஒரு மகளும் உள்ளனர்.

மணிவண்ணன் இயக்கத்தில் உருவான ஐம்பதாவது படமான நாகராஜசோழன் எம்.எல்.ஏ. அண்மையில்தான் வெளிவந்திருந்ததென்பது குறிப்பிடத்தக்கது.

இயக்குநராகவும் திரை எழுத்தாளரா (23ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்புக் குழுவினர் இன்று புதுடில்லி பயணம்

இந்திய அரசின் அவசர அழைப்பின் பேரிலேயே இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆறு பேர் அடங்கிய குழு இன்று ஞாயிற்றுக்கிழமை புதுடில்லி செல்லவுள்ளது.

இந்தக் குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரா.சம்பந்தன், மாவை சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன், சுரேஸ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், பொன். செல்வராசா ஆகியோர் இடம்பெறவுள்ளனர்.

இவர்களை புதுடில்லியில், இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தி, வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித், நிதி அமைச்சர் ப.சிதம்பரம் உள்ளிட்ட அரசியல் தலைவர்கள் சந்தித்துப் பேசவுள்ளனர்.

குறிப்பாக, 13வது அரசியலமைப்புத் திருத்தத்தை பலவீனப்படுத்தும இலங்கை அரசின் முயற்சிகள குறித்தே இந்தச் சந்திப்புகளில் முக்கியமாகக் கலந்துரையாடப்படவுள்ளதாக கூறப்படுகிறது.

அதேவேளை, புதுடில்லியின் முக்கிய அதிகாரிகள், (23ஆம் பக்கம் பார்க்க)

(அ-3621)
அண்ணா உற்பத்திப் பொருட்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
சகலபொருட்களையும் குறைவான விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்
அண்ணா சுப்பர் இன்
கே.கே.எஸ்.வீதி, இணுவில்.
தொ.பே: 021 321 8143




சிங்கர் வழங்கும் இன்னுமோர் புதிய சேவை
அனைத்து நாடுகளுக்குமான விமானப் பயணச் சீட்டுக்களை நொடிப்பொழுதில் பெற்றுக்கொள்ளலாம்
மேலும் கடவுச்சீட்டு,வீசா, சம்பந்தமான உதவிகளை பெற்றுக்கொள்ளலாம்.
நம்பிக்கை, உத்தரவாதம், விரைவு
இன்றே நாடுங்கள் அருகிலுள்ள SINGER PIUS SINGER காட்சியறைகளை
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 5408
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4389
சுன்னாகம். 021 224 0555
கொடிகாமம் 0776433888.
சங்கானை 077 2208232
மானிப்பாய். 021 225 5343
நெல்லியடி. 021 226 4937
பருத்தித்துறை 021 226 3411
கிளிநொச்சி 077 4685771
சாவகச்சேரி 021 227 0197
பிரதான வீதி முல்லைத்தீவு 0772475151
(C-3654)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு**

தொ.பே. : 021 321 0815,021 567 1540

E-mail : valampurii@yahoo.com,
valampuriijaffna@gmail.com


# இலங்கை இராணுவத்தினருக்கு தமிழ்நாட்டில் பயிற்சி ஆரம்பம்

## எதிர்ப்புகளுக்கு அஞ்சி பாதுகாப்பு தீவிரம்

இலங்கை அதிகாரிகளுக்கு பல்வேறு அமைப்புக்களின் எதிர்ப்பை மீறி பயிற்சி அளிக்கப்பட்டு வருவதால், தமிழ் நாட்டில் வெலிங்டன் இராணுவ முகாம் பகுதியில் 3 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளதுடன், சுற்றுலா பயணிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டம், குன்னூர் அடுத்த வெலிங்டன் கன்டோன்மெண்ட் பகுதியில் இராணுவ முகாம், இராணுவ பயிற்சி மையம் மற்றும் 27 கிராமங்கள் உள்ளன. 7 ஆயிரம் மக்கள் வசிக்கின்றனர். இராணுவ பயிற்சி மையத்தில் இந்திய உட்பட பல்வேறு நாடுகளை சேர்ந்த இராணுவத்தினருக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

இங்கு பயிற்சி பெற கடந்த 27 ஆம் திகதி இலங்கையை சேர்ந்த விங் கமாண்டர் எம்.எஸ்.பந்தாரா தசநாயக்க, மேஜர் சி.எஸ். ஹரிஷ் சந்திரா ஹெட்டியராச்சி ஆகியோர் வந்தனர். இவர்களுக்கு பயிற்சி அளிக்க முதல்வர் ஜெயலலிதா, தி.மு.க தலைவர் கருணாநிதி உள்ளிட்டோர் எதிர்ப்பு தெரிவித்திருந்தனர்.

இராணுவ முகாமை முற்றுகையிட முயன்ற பல அமைப்புகளை சேர்ந்தவர்கள் கைதாகினர். இந்நிலையில், முகாமிலுள்ள இலங்கை இராணுவ அதிகாரிகளுக்கான 10 மாத பயிற்சி திட்டமிட்டபடி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. இதற்கு இடையூறு ஏற்படாத வகையில் வெலிங்டன் பகுதியில் 3 அடுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளது.

வெலிங்டன் நுழைவாயில் பகுதியான பிளாக்பிரிட்ஜ், சப்ளை டெப்போ, சின்ன வண்டிச் சோலை, சிங்காரதோப்பு ஆகிய இடங்களில் இராணுவ வீரர்கள் குவிக்கப்பட்டு துப்பாக்கி ஏந்தி பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். மினி பஸ், அரசு பஸ், உள்ளூர் வாகனங்கள் மட்டும் தணிக்கைக்கு பின் அனுமதிக்கப்படுகின்றன. வெளி மாவட்ட வாகனங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. சுற்றுலா பயணிகள் நுழைய தடை விதிக்கப்பட்டுள்ளது. (எ-11)

## வாழ வைத்த தெய்வத்திற்கு இதய அஞ்சலி

### பேராசிரியர்.N. பாலகிருஷ்ணன்



வடமராட்சியைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலியை வசிப்பிடமாகவும் தற்போது தெஹிவளையில் வசித்து வந்தவருமான மூத்த பொருளியல் பேராசிரியரும் பண்பாளரும் நல்வழிகாட்டியும் பலரை வாழ வைத்தவருமான பேராதனைப் பல்கலைக் கழகம், யாழ் பல்கலைக்கழகங்களில் பல நிலை உயர் பதவிகள் வகித்தவருமான **பேராசிரியர் N. பாலகிருஷ்ணன்** அவர்கள் 14.06.2013 அன்று கொழும்பில் இறைபதமடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியும் கவலையுமடைகின்றோம்.

இவரது இறுதிக்கிரியைகள் 16.06.2013 மாலை கொழும்பில் நடைபெறுமென்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரின் குடும்பத்தாரின் துயரில் நாமும் பங்கு கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**திரு.இ.இரட்ணம் குடும்பத்தினரும் சக பணியாளர்களும்**
**தலைவர், சந்தைப்படுத்தல் துறை**
**யாழ். பல்கலைக்கழகம்.** T.P.No:- 077 3867367

(3056)


## Optimo group Sri lanka

எமது Optimo group Sri lanka Company க்கு துடிப்பும், ஆர்வமும், தன்னம்பிக்கையும் கொண்ட இளைஞர், யுவதிகள் இந்த வருடத்தின் நடுப்பகுதியில் தேவைப்படுகின்றனர்

அனுபவம் தேவையில்லை, நாங்கள் பயிற்சி வழங்குவோம்

- முகாமைத்துவ பயிற்சியாளர்
- மேற்பார்வையாளர்
- அலுவலக உதவியாளர்
- கிளை முகாமையாளர்
- உதவியாளர்

பயிற்சிக் காலத்தில் 10,000 - 30,000மும் பின்னர் 50,000/= பெறலாம். + (EPF, ETF, Insurance, Medical) & Permanant Job

Call Now: Jaffna, Kilinochi, Mullaitivu, Vavuniya, Mannar, Chavakachcheri
0778920777, 0715158815, 0217201521 Hot Number:0777009820

(3032)

மின்னிணைப்பாளராவதற்கான ...

## தொழிற் பயிற்சி கற்கை நெறி



வீடு மற்றும் நிறுவன மின் இணைப்புத் துறையில் பெறுமதியான சான்றிதழ் தகைமைக்கு இட்டுச் செல்லும் பாடநெறி.

**3 phase & 1 phase and many more...**

## Diploma in Electrical Wiring

நவீன மின்னிணைப்பு நுணுக்கங்களுடன் முறையான பாடநெறி மூலம் தெளிவான விளக்கங்களுடன் தனித்தோ, நிறுவனங்களிலோ 100% தொழில் புரிவதற்கான உத்தரவாதம்.

உங்களுக்கு வசதியான நேரங்களில் குறுகிய காலத்தில் நிறைவு செய்ய முடியும்.

கட்டணம் 14 500/=
முதல் 10 பேருக்கு
ரூபா 3000 விசேட கழிவு
077 444 225

வயது வேறுபாடின்றி தொழில் புரிவோரும் பகுதிநேரமாக அதிகவருவாயைப் பெற்றுக் கொள்ளக்கூடிய தொழிற்துறை

**IiSEEES NALLUR CAMPUS**
762, பருத்தித்துறை வீதி, நல்லூர். 021 222 4728

(C-3660)

## 100% SUCCESS...

போதும் போதும் என்று ஆங்கிலம் சரளமாக பேசிடுங்கள்

யாழில் நம்பிக்கையான கல்விநிறுவனம்

## DIPLOMA IN ENGLISH

NEW BATCHES START

| SAT/SUN | MON/WEN |
| --- | --- |
| 3.30 - 6.00 P.M | 4.15 - 6.15 P.M |
| 15.06.2013 @ 3.30 | 17.06.2013 @ 4.00 |

IELTS REGISTRATION CENTRE
Preparations classes Sat/Sun 11.00 -02.00

FRENCH/DUTCHSPOKEN SINHALA
A1,B1,B2 Classes, Registration & Exams

தற்போது மேலும் புதிய அம்சங்கள்

**E-CITY**
**College of English & IT**
இல-372D, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
0774924166 / 0770610271

## வைத்திய சேவை

- On Call Doctor சேவை
- வீடுகளுக்கு வந்து நோயாளிகளை பார்வையிடும்சேவை Home Visit
- உடற்பருமன் குறைத்தல் /கூட்டுதல் தொடர்பான சிகிச்சைகள்
- முடியுதிர்தலுக்கான சிகிச்சைகள்
- முகப்பருக்களுக்கான சிகிச்சைகள்

} பிரதி சனிக்கிழமைகளில்

மேலதிக விபரங்களுக்கு : குளோபல் கிளினிக்
இல.769, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 0773179062

(3005)



பெற்றோர்களே உங்கள் பிள்ளைகளின் உயர்தரமான பட்டப்படிப்பினை இன்றே உறுதி செய்யுங்கள்

## LL.B (UK) கற்கைநெறி

(சி-3641)

யாழில் சட்டக் கல்வியை வழங்கும் ஒரே கல்வி நிறுவனம்
**Prince City Campus** இன்
EdHat IHD in Law leading to LL.B (UK)

Batch 5 இற்கான பதிவுகள் நடைபெறுகின்றன.

- உலகத் தரம் வாய்ந்த கற்கை நெறி
- இலங்கை மற்றும் UK பாட விதானங்களை உள்ளடக்கியது
- யாழ்ப்பாணத்தில் 3 வருடங்களையும் பூர்த்தி செய்யலாம்
- இலகு தவணை கொடுப்பனவு முறை
- இலவசமான ஆங்கிலம் மற்றும் தகவல் தொழில்நுட்ப கற்கை திட்டங்கள்

University of Wolverhampton | EDhat International | bucks new university United Kingdom

**Prince City Campus**
இல.275, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 4923855, HotLine: 0775949272

## வாகனம் விற்பனைக்கு

Isuzu 250 வெள்ளை நிறம்
(கம்பனி ஒன்றில் மாத வருமானத்துக்கு சேவையில் உள்ளது)

தொடர்புகளுக்கு:- 077 3655257

(சி-3659)

## விற்பனைக்கு

சுழிபுரம் மத்தியில் அமைந்துள்ள 2பரப்புக் காணியில் புதிதாக அமைத்த 2கடையும், வீடும் விற்பனைக்கு உண்டு.
கீரிமலை வீதி விளானில் அமைந்துள்ள கடையும் வாடகைக்கு உண்டு.
தொடர்புக்கு: 0772236014, 0213002442

(3026)

## செல்லா சினிமா யாழ்ப்பாணம்




## நாகம்ஸ் சினிமா சுன்னாகம்




## கடை வாடகைக்கு

யாழ்ப்பாணம்-நெல்லியடி பிரதான வீதியில் (சுப்பி புடைவையகத்துக்கு அருகாமையில்) அமைந்துள்ள கடை வாடகைக்கு கொடுக்கப்படும்.

தொடர்பு:-
021 2263293
077 6179191
077 2721216

(சி-3647)

## பெயர் மாற்றம்

காரைநகர் கிழக்கு கொட்டைப்புளம் எனும் முகவரி உடைய வேலுப்பிள்ளை ராசமலர் ஆகிய நான் 16.06.2013 முதல் என் சார்ந்த சகல ஆவணங்களிலும் வேலுப்பிள்ளை இராசேஸ்வரி எனும் பெயரையே பயன்படுத்துவேன் என இத்தால் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

வே.இராசேஸ்வரி

(3048)

சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை தினங்களிலும் எமது சேவையினைப் பெற்றுக்கொள்ளலாம்

விரைவு ! பாதுகாப்பு ! நம்பகத்தன்மை!

## உள்நாடு வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

உங்கள் இல்லங்களில் இருந்தவண்ணமே சகல நாடுகளுக்குமான பொதிகள் பொறுப்பேற்கப்பட்டு குறித்த முகவரியில் ஒப்படைக்கப்படும். (Pickup Service) உங்கள் உறவுகளின் கைகளில் 3 – 5 வேலை நாட்களில் ஒப்படைக்கப்படும்.

20 வருடங்களுக்கு மேல் எமது நிறுவனம் பொதிகள் சேவையில் முன்னிலையில் திகழ்ந்து நேரடி முகவராக தனி இடம் பிடித்துள்ளது.

- 11 Kg இக்கு மேற்பட்ட பொதிகளுக்கும் மிக குறைந்த கட்டணம் அறவிடப்படும்
- தற்பொழுது இலங்கையில் எங்கும் இல்லாதவாறு மிகக்குறைந்த கட்டணத்தில் உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள் அன்பளிப்பு பொருள்கள் புடைவைகள் CD, VCD கள் என்பன மிக விரைவாக அனுப்பி வைக்கப்படும்.
- 220 நாடுகளுக்கான கட்டணங்களும் குறைக்கப்பட்டுள்ளன.
- கூடுதலான கட்டணங்கள் செலுத்தி ஏமாறாதீர்கள்

DHL

குறிப்பு : இந்த சலுகை திருமுருகன் கொம்நெற் இல் மட்டுமே

**திருமுருகன் கொம்நெற்** ... வீதி, யாழ்ப்பாணம். 021 222 7835
(பழைய கடைக்கு முன்பாகவும், ஆல் சிலோனிற்கு அருகிலும் அமைந்துள்ளது)
இல. 19, பிரதான வீதி, நெல்லியடி. இல. 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

TCN Express
இல. 2 B, நெல்சன் பிளேஸ், கொழும்பு - 2

(சி-3655)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NVQ கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கலாம்

இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையினால் NVQ கற்கை நெறிகளுக்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி கற்கை நெறியில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்(NVQ மட்டம் 4), வீட்டு மின்னிணைப்பு (NVQ மட்டம் 3), முக அலங்காரம் (NVQ மட்டம் 3), அலுமினியம் பொருத்துநர் ஆகிய பயிற்சி நெறிகள் சுன்னாகம் மற்றும் பிரான்பற்று, கரவெட்டி தொழிற்பயிற்சி நிலையங்களில் ஜுலை மாதம் ஆரம்பமாகவுள்ளன.

இக் கற்கை நெறியை தொடர விரும்புபவர்கள் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் முழுப்பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், கல்வித் தகைமை, கற்கை நெறி ஆகியவற்றைக் குறிப்பிட்ட சுயவிபரக் கோவையை தொழிற்பயிற்சி அதிகார சபை, மின்சார நிலைய வீதி, சுன்னாகம் என்ற முகவரிக்கு கிடைக்குமாறு தபால் மூலமோ, அல்லது நேரடியாகவோ ஒப்படைக்க முடியும் எனவும் அல்லது பெயர், முகவரி, கற்கை நெறி ஆகியவற்றை குறிப்பிட்டு 0750435 971 இலக் கத்திற்கு குறுஞ்செய்தி அனுப்புவதன் மூலமும் பதிவு செய்துகொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.(அ-5)

# நினைவுப் பேருரையும் நூல் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

தெய்வத்திருமகள், சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி நினைவுப் பேருரையும், ஓய்வு நிலை உச்ச நீதிமன்ற நீதியரசர் சத்தியவித்தகர் க.வி. விக்கினேஸ்வரன் ஆற்றிய சொற்பொழிவுகளின் தொகுப்புகளான இந்து சமய சிந்தனைகள் என்னும் தமிழ், ஆங்கில மொழி மூல நூல் வெளியீட்டு நிகழ்வும் எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் கோவில் வீதியில் அமைந்துள்ள அகில இலங்கை இந்து மன்ற யாழ். பணிமனையில் நடைபெறவுள்ளது.

அகில இலங்கை இந்து மாமன்ற நம்பிக்கைப் பொறுப்பாளர், சபைத் தலைவர், இந்து சிரோரத்தினம்,மனித நேயமாமணி வி.கயிலாசப் பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் ஆசிச் செய்தியை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் வழங்கவுள்ளார்.

அகில இலங்கை இந்துமாமன்றம் குமரன் புத்தக இல்லத்துடன் இணைந்து வெளியிட்டு வைக்கும் இந்து சமய சிந்தனைகள் என்ற நூல் வெளியீட்டுரையை இந்து ஆராய்ச்சி நிலைய இயக்குநர் கலாநிதி ஆறு திருமுருகன் வழங்கவுள்ளார்.

சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் நினைவுப் பேருரையினை ஒட்டுறவும் ஒருமைப்பாடும் எனும் கருப் பொருளில் முன்னாள் நீதியரசர் க.வி. விக்கினேஸ்வரன் வழங்கவுள்ளார்.

மேற்படி நிகழ்வுகளில் தெரிவுசெய்யப்பட்ட யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுக்கு மடிக்கணனிகள் வழங்கப்படவுள்ளது. அத்துடன் தெரிவு செய்யப்பட்ட பன்னிரு திருமுறைகள் ஓதும் ஆலயங்களுக்கு பன்னிருதிருமுறைகள் வழங்கப்படவுள்ளன. (அ-5)

# மூத்த பத்திரிகையாளருக்கு இன்று கௌரவிப்பு

எழுத்துப் பணியில் 60 ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ள மூத்த பத்திரிகையாளர் எஸ்.எம். கோபாலரத்தினத்தின் பாராட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு சேர்.பொன் இராமலிங்க நாதன் வீதியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் வண்ணைக் கலைவாணர் நாடகமன்றத்தால் முன்னெடுக்கப்படவுள்ளது.

வாழ்நாள் பேராசிரியரும் முன்னாள் துணை வேந்தருமான பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் ஈழநாடு பத்திரிகையின் முன்னாள் துணை ஆசிரியர் எஸ்.பெருமாள், யாழ். தினக்குரல் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் வி.அற்புதானந்தன், வலம்புரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரம், ஈழநாடு பத்திரிகையின் முன்னாள் துணை ஆசிரியர் திருமதி. கே.சண்முகடாஸ் ஆகியோர் சிறப்புரையாற்றவுள்ளனர். (அ்-5)

# கட்டடங்கள் அமைப்பதற்கான விரைவு அனுமதி வழங்கல்

யாழ். மாநகர சபையினால் கூட்டங்கள் அமைப்பதற்கான விரைவு அனுமதி வழங்கும் சேவைப் பிரிவு அமைக்கப்படவுள்ளதாக யாழ். மாநகர ஆணையாளர் செ. பிரணவன் தெரிவித்துள்ளார்.

மேற்படி சேவைப் பிரிவு நகர அபிவிருத்தி அதிகார சபையின் அறிவுறுத்தலுக்கமைய நாளை திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதன் மூலம் கட்ட விண்ணப்பங்கள் சட்ட விதிகளுக்கமைய சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில் ஏழு நாட்களுக்குள் அனுமதி வழங்கப்படும் எனவும், இச் சேவையை பெற்றுக் கொள்வதற்கு விசேட கட்டணங்கள் அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

# கண்காட்சியும் படக்காட்சியும்

நல்லூர் பிரதேச சபையின் கீழ் இயங்கும் கொக்குவில் பொது நூலகத்தினரால் நூல்களின் கண்காட்சியும், மழலைகளுக்கான வீடியோ படக்காட்சியும் இன்று ஞாயிற்றுக்கிழமையும் நாளை திங்கட்கிழமையும் காலை 10 மணி முதல் மாலை 4 மணிவரை கொக்குவில் வளர்மதி சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வுகளை நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் ப.வசந்தகுமார் ஆரம்பித்து வைக்கவுள்ளார். (அ)

# இராசி பலன்

16.06.2013
(ஆனி02,ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.55 மணிக்கு
சப்தமி காலை 6.46 மணிவரை
அட்டமி காலை 4.47 மணி தொடக்கம்
பூரம் முற்பகல் 9.58 மணிவரை
இராகுகாலம் 4.23-5.53 மணிவரை
சுபநேரம் 8.53-10.23 மணிவரை

**மேடம்** பிறருக்கு உதவி செய்யும் எண்ணம் உருவாகும், பிள்ளைகளின் கல்வி நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு, சில காரிய இடையூறுகள் ஏற்படலாம்.

**இடபம்** ரோக பயமுண்டு, கல்வியில் நாட்டம் காட்டுவீர்கள், நண்பர்கள் மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**மிதுனம்** வாக்கு மேன்மையுண்டு, கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், அந்நியர் சந்திப்புண்டு, உறவினர் உங்கள் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர், போசன நன்மையுண்டு.

**கடகம்** மாதர் நட்புண்டு, கண்ணன் வழிபாடு காரிய வெற்றி தரும், சுப செலவுகள் அதிகரிக்கும், கடின வார்த்தைகள் இடம் பெறலாம், முயற்சிகளில் சில தாமதங்கள் ஏற்படலாம்.

**சிங்கம்** ஆழ்ந்த சிந்தையுண்டு, சயன சுகம் கிடைக்கும், புதிய பொருட்கள் வந்து சேரலாம், நண்பர்கள் உதவி செய்ய முன் வரலாம், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**கன்னி** சிலர் மீது காரணமில்லாமல் கோபம் ஏற்படலாம், தந்தை வழி உறவினர்களால் நன்மையுண்டு, காரிய அலைச்சல்கள் அதிகரிக்கும், சுப செலவுகள் கூடும், வேலைச்சுமை கூடும்.

**துலாம்** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், மதிப்பும் மரியாதையும் உயர்வடையும், ஆரோக்கியம் சீராகி ஆனந்தமடைவீர்கள், வருமானம் திருப்தி தரும்.

**விருச்சிகம்** எதிலும் அதிக பிரயாசை காட்டுவீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, மற்றவர்களின் உதவிகள், ஒத்தாசைகள் என்பன எளிதில் கிடைக்கும்.

**தனுசு** புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், மனதில் அச்சமான நிலைகள் ஏற்பட்டு மறையும், பிறருக்கு கட்டுப்படும் சூழ்நிலை உருவாகும், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**மகரம்** வீண் தொல்லைகள் ஏற்பட்டு சமாளிப்பீர்கள், போசன சுகமுண்டு, உடல் நலனில் கவனம் தேவை, தடைப்பட்ட காரியங்கள் மாலை நேரம் கைகூடும் வாய்ப்புண்டு.

**கும்பம்** கௌரவமான நாள், அபூர்வமான சந்திப்புண்டு, போசன நன்மையுண்டு, பொருட்சேர்க்கையுண்டு, தன்னம்பிக்கையும் துணிவும் ஏற்படும் நாள், களஸ்திர நன்மையுண்டு.

**மீனம்** பகைவர்கள் விலகுவர், தொழில் முன்னேற்றம் கருதி அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள், உற்சாகமான நாள், காரிய அனுகூலமுண்டு.

வளவன்

# வாரம் ஒரு தகவல்

## தூங்கமுடியவில்லை

"டாக்டர் நீங்கள்தான் என்னைக் காப்பாற்ற வேண்டும்"

"என்ன பிரச்சினை உங்களுக்கு?"

"மனுசன் நிம்மதியாகத் தூங்கமுடியவில்லை"

"ஒருமனிதன் தன் வாழ்நாளில் மூன்றில் ஒரு பகுதியை தூங்கியேதான் கழிக்கின்றான். தெரியும் அல்லவா?"

"அவர்கள் எல்லாம் கொடுத்து வைத்தவர்கள்"

"அது இருக்கட்டும்... ஒருவன் எப்படி தூங்குகிறான் என்பதை வைத்துக்கூட அவனுடைய மனதைப் புரிந்து கொள்ளலாம்."

"அது எப்படி?"

"ஒரு காலை நிமிர்த்தியும் இன்னொரு காலை மடக்கியும் வைத்துக்கொண்டு தூங்குபவர்கள் இரண்டுவிதமான குணங்களை உடையவர்கள். இவர்கள் எல்லாம் சில நேரங் களில் தங்களைப் பலசாலிகளாக காட்டிக்கொள்வார்களா? ஆனால் அவர்களுடைய குணம் இல்லையாம். மனதிற்குள் ளேயே பதுங்குவார்களாம்"

"அப்படியா!"

"ஆமாம்! மனதுக்குள் ஒரு தவிப்பு அல்லது பயம் உள்ளவர்கள் பந்துமாதிரி சுருண்டு படுத்துக்கொண்டு போர்வைக் குள் பதுங்கிக்கொள்வார்கள். அந்தப் பயம் போனதற்குப்பின் நன்றாக படுத்துத் தூங்குவார்களாம்"

"டாக்டர் நீங்கள் சொல்வதெல்லாம் தூங்குபவர்களைப் பற்றி. என்னைப்போல் தூங்கமுடியாதவனுக்கு ஏதாவது வழி யுண்டா... அதைச்சொல்லுங்கள்"

"உங்களால் ஏன் தூங்கமுடியவில்லை". "மனைவி தொண தொண என்று பேசிக்கொண்டிருந்தால் எப்படித் தூங்க முடியும்"

"எங்கள் வீட்டிலும் அதே பிரச்சினைதான். அதற்கு வழி இது தான் இந்தாங்க"

"என்ன இது?"

"தூக்கமாத்திரை"

"ரொம்ப நன்றி டாக்டர். இதை நான் எப்படி பாவிக்கவேண்டும்"

"இது உங்களுக்கு அல்ல. உங்கள் மனைவிக்கு"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி ரூபா | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 30 | 40 | 40 | 40 |
| உருளைக்கிழங்கு | 90 | 80-160 | 80 | 120 |
| பச்சைமிளகாய் | 120 | 100 | 120 | 120 |
| தக்காளி | 140 | 120 | 120 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 50 | 60 |
| கோவா | 120 | 160 | 120 | 120 |
| கரட் | 140 | 120 | 140 | 160 |
| பூசணி | 140 | 40 | 40 | 50 |
| புடோல் | 40 | 60 | 60 | 50 |
| வாழைக்காய் | 60 | 30 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 40 | 120-160 | 140-180 | 120-180 |
| பெரிய வெங்காயம் | 190-200 | 90 | 90 | 80 |
| பாகற்காய் | 90 | 120 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | -- | 70 | -- | 100 |
| பயற்றங்காய் | 80 | 100 | 80 | 80 |
| லீக்ஸ் | 150 | 160 | 160 | 160 |
| பீற்றூட் | 80 | 70 | 100 | 120 |
| கறிமிளகாய் | 140 | 160 | 120 | 240 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 400 | 400 |
| போஞ்சி | 120 | 160 | 120 | 160 |
| கத்தரிதம்புள்ள | 20 | 30 | 30 | -- |
| கீரை - 1 பிடி | 20 | 10 | 30 | 20 |
| தேசிக்காய் | 120 | 80 | 120 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40 | 35 | 35-40 |
| இராசவள்ளி | -- | 100 | 120 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதி நாள் நிகழ்வும் பரிசளிப்பு விழாவும்

(மானிப்பாய்)


வலிகாமம் தென் மேற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் நடத்தும் வருடாந்த விளையாட்டு விழாவின் இறுதி நிகழ்வுகளும் பரிசளிப்பு நிகழ்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 2.30 மணியளவில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

வலிகாமம் தென்மேற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனத் தலைவர் பே.சுபாகர் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்விற்கு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வட மாகாணப் பணிப்பாளர் சரத் சந்திரபால பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் சு.முரளிதரனும் கௌரவ விருந்தினர்களாக இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி முதல்வர் வண அருட் தந்தை ஜேசுதாஸன் அடிகளாரும் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற வடமாகாணக் கணக்காளர் எஸ். ரட்ணகுமாரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் இரு பிரிவுகளையும் சேர்ந்த ஆண், பெண் இருபாலாருக்குமான 100 மீற்றர் இறுதி நிகழ்வு 4X100 அஞ்சலோட்டம், கயிறிழுத்தல், இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மாணவர்களின் உடற்பயிற்சி நிகழ்வு என்பன இடம்பெறவுள்ளன.

யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகத் தை எதிர்த்து இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி இளைஞர் கழக அணி மோதும் உதைபந்தாட்ட இறுதியாட்டமும் இடம்பெறவுள்ளது. (அ-3-23)




# பாற்தொழிற்சாலை திறந்து வைப்பு

(கரணவாய்)

உலக வங்கியின் அனுசரணையுடன் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பாற்தொழிற்சாலையொன்று கரவெட்டி நாவலர் மடத்தடிப் பகுதியில் நேற்று உலக வங்கியின் நிறைவேற்று உத்தியோகத்தர் லிணயக்கினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் பொருளாதார அமைச்சிலிருந்து வருகைதந்த என்.ஸ்ரீ.விஜயசிறி, யாழ். மாவட்ட செயலக உத்தியோகத்தர், கரவெட்டி கால்நடை சபைத் தலைவர் கணபதிப்பிள்ளை, பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ-60)

# ப.நோ.கூ.ச.உடைத்து பொருட்கள் திருட்டு


(கரணவாய்)

நெல்லியடி நாவலர் மடத்தடியில் அமைந்துள்ள உடுப்பிட்டி பலநோக்கு கூட்டுறவு சங்கத்திற்கு சொந்தமான கிளைச்சங்கம் உடைக்கப்பட்டு திருட்டுச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமைஇரவு இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவது, மேற்குறித்த சங்கத்தின் அருகில் உள்ள வீட்டுக் கம்பிகள் ஊடாக சங்கத்திற்குள் சென்று இரும்புக் கதவை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் பால்மா வகைகளைத் திருடிச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்ட வேளை



பாதுகாப்பு உத்தியோகத்தர் அங்கு இல்லையென்பதும் அங்குள்ள கதவுகள் உறுதியானதாக இல்லையென்பதும் தெரிய வந்துள்ளன.

மேற்குறித்த சங்க முகாமையாளரை பொலிஸார் விசாரணைக்காக அழைத்துச் சென்றுள்ளனர். (அ-3-24-60)

# முன்பள்ளி வருடாந்த விளையாட்டு விழா

(கரணவாய்)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட வதிரி முன்பள்ளி வருடாந்த விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வதிரி முன்பள்ளி விளையாட்டு மைதானத்தில் இரா.பிறபெஸ் கண்ணன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை தவிசாளர் போ.வியாகேசு கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

கௌரவ விருந்தினராக வடமராட்சி தெ ற்கு மேற்கு பிரதேச சபை செயலாளர் சி.அன்ன லிங்கமும் கலந்து கொள்ளவுள்ளதுடன் வட மராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை உறுப் பினர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-3-60)




# கடன் உதவித்திட்ட கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

பொருளாதார அமைச்சின் உதவியுடன் பான் ஏசியா வங்கி வழங்கும் ஓய்வூதியம் பெற்றவர்களுக்கான கடன் உதவித்திட்டம் தொடர்பான கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச செயலாளர் பி.செந்தில்நந்தனன், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண ஓய்வூதிய சங்க தலைவர் வி.சிறிசக்திவேல், நல்லூர் ஓய்வூதிய சங்கத் தலைவர் வி.எம் சுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-5)

# திருமுழுக்கு யோவானின் வருடாந்த பெருவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சுண்டுக்குழியில் அமைந்துள்ள புனித திருமுழுக்கு யோவான் ஆலய 125 ஆவது ஆண்டு யூபிலிப் பெருவிழா எதிர்வரும் 24 ஆம் திகதி திங்கட்கிழமை கொண்டாடப்படவுள்ளது.

இதற்கான நவநாள் வழிபாடுகள் நேற்றைய தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளன.

தினமும் மாலை 5.30 மணிக்குத் திருச்செபமாலைத் தியானத்துடன் திருப்பலி இடம்பெறவுள்ளது.

நவநாள் வழிபாடுகளின் போது மறையுரையாற்ற இந்தியாவின் பாளையங்கோட்டை மறைமாவட்டத்தில் இருந்து அருட்பணி இராஜ்யேஸ்குமார் வருகை தந்துள்ளார்.

எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணிக்கு முதன்நன்மை திருவிழா திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை மாலை 5.15 மணிக்கு நற்கருணை விழா இடம்பெறவுள்ளது.

புனித திருமுழுக்கு யோவான் ஆலயப் பெருவிழா திருப்பலியை எதிர்வரும் 24 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6.15 மணிக்கு யாழ். மாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை, மன்னார் மறை மாவ ட்ட ஆயர் மேதகு இராயப்பு யோசப் ஆண்டகை ஆகியோர் இணைந்து ஒப்புக் கொடுப்பார்கள்

எனவே குடும்ப அங்கத்தவர்கள் இணைந்து திருமுழுக்கு யோவானின் ஆசீரை பெறுமாறு பங்குத்தந்தையும் பங்கு மக்களும் கேட்டுள்ளனர். (அ-2)

# கிரிக்கெட் போட்டியில் பங்குபற்றலாம்

(கரவெட்டி)

குரும்பை சிட்டி உதய சூரியன் விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ். மாவட்ட ரீதியிலான அணிக்கு5 ஓவர் 6 பேர் கொண்ட கிரிக்கெட் போட்டிகள் இன்று கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் போட்டி நடைபெறும் தினங்களில் காலை 8 மணிக்கு முன்னர் சமுகம் தந்துபோட்டியில் கலந்து கொள்ளலாம் என கழகத்தினர் அறிவித்துள்ளனர்.

போட்டி தொடர்பான மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ள 0778217853 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.(அ-24)





வேலணைதுறை ஐயனார் விளையாட்டுக்கழகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட படகோட்டும் போட்டி (வள்ளம் தாங்குதல்) இடம் பெற்றது. இப்போட்டியை வேலணை பிரதேச சபையின் தவிசாளர் சி.சிவராசா ஆரம்பித்து வைத்தார். வேலணை துறையூர் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விளையாட்டுவிழா பண்டைய காலத்துப் பாரம்பரிய விளையாட்டாக மேற்படி போட்டி இடம்பெற்று வருகின்றது. இந்நிகழ்வில் வேலணை பிரதேச சபையின் உப தவிசாளர் சி.கார்த்திகேயன் ஜே-14 கிராம சேவையாளர் இ.குலசிங்கம் மற்றும் பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிப்பாய் புனித அந்தோனியார்

## யாத்திரைத் ஸ்தல விழா சிறப்புமலர் 17.06.2012

### மானிப்பாய் அந்தோனியார் ஆலய திருவிழா

யாழ்ப்பாணக் குடாநாட்டிலே இயற்கை எழில் நிறைந்த இடமான மானிப்பாய் பதியிலே கோவில்கொண்டு பக்தர்களைத் தன்பால் ஈர்ப்பவரும் தலைசிறந்த போதகருமாகிய கோடி அற்புதராம் புனித அந்தோனியார் திருவிழாவை இன்றைய நாளில் பக்தகோடிகள் வெகுவிமரிசையாக கொண்டாடுகின்றார்கள். மானியம் பதியில் புனித அந்தோனியார் திருத்தலத்திற்கு மலர்ந்த மலர்களில் மறைந்துள்ள் தேனை நாடி வண்டுகள் வருவதுபோல மக்கள் கூட்டம் அலையலையாக அணிதிரண்டு கோடி அற்புதரின் வரங்களைப் பெற்று சந்தோசமாகவும் நிம்மதியாகவும் வாழ்ந்துவரும் பெருமைக் குரிய இடமாக இத்திருத்தலம் அமைந்துள்ளது.

புனித அந்தோனியார் கத்தோலிக்க திருமறை பொலிவுடன் திகழும் போர்த்துக்கல் தேசத்தின் தலைநகராம் லிஸ்பனில் 1195 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 15ஆம் திகதி இவ்வுலகில் அவதரித்தார். இவர் தனது திருமுழுக்கின் போது பேர்டினட் எனும் நாமம் பெற்று துறவறம் கொண்டபின் அந்தோனி என்னும் பெயர் சூட்டப்பட்டார். இவர் இவ்வுலகில் மிகவும் குறுகிய காலமாகிய 36 ஆண்டுகள் வாழ்ந்தார். இவ்வாறு தன் 36ஆம் அகவையில் இவ்வுலக இறைவாழ்வுப் பயணத்தை நிறைவுசெய்து 1231ஆம் ஆண்டு ஆனி 13 ஆம் திகதி விண்ணக இறைவனின் தரிசனமாட்சியில் பங்கெடுத்தார். அந்தநாளையே நாம் புனித அந்தோனியாரின் பெருநாளாக கொண்டாடிவருகிறோம். இவர் இறந்த 4ஆம் நாள் செவ்வாயன்று கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டதால் செவ்வாய்க்கிழமை அவரது மதிப்புக்குரிய நாளாக அவரின் பக்தர்களால் நினைவுகூரப்பட்டு வருகின்றது.

கோடி அற்புதர் என்று அழைக்கப்படும் தூய அந்தோனியார் தம்மிடம் அருள்வரங்களை பெறுவதற்காக அண்டி வருபவரை அரவணைப்பவராக விளங்குகிறார். இறை வல்லமையைப் பெற்ற இவர் பேய்களை ஓட்டுவதிலும் ஊமைகளுக்கு வார்த்தை அளிப்பதிலும் குருடர்களுக்கு பார்வை அளிப்பதிலும் முடவரை நடக்கச் செய்வதிலும் மரித்தவரை உயிர்ப்பிப்பதிலும் காணாமற் போன பொருட்களை கண்டெடுக்கச் செய்வதிலும் வல்லவராகத் திகழ்ந்தார்.

இவர் இறந்து சுமார் 36 வருடத்தின்பின்னர் இவரது கல்லறையைத் திறந்து பார்வையிட்டபோது நா மட்டும் அழியாது காணப்பட்டது. இதனால் புனித அந்தோனியார் நா அழியா வரத்தை இறைவனிடம் பெற்றது; இவ்வுலகில் வாழ்ந்த போது என்றும் இறைவனையே தம் வாயில் உச்சரித்தவராக இருந்தமையால் இறைவன் அந்நாவிற்கு தம் பாதுகாப்பை வழங்கினார்.

இன்று மானிப்பாய் புனித அந்தோனியார் விழா கொண்டாடப்படுகிறது. இவ்வாலயத்திற்கு வருபவர்கள் தமது ஆன்மீக சரீர சேவைகளை நிறைவு செய்து செல்கிறார்கள். அந்தோனியார் இத்தலத்திற்கு வரும் மக்கள் அவரது அருள் வரங்களை பெறுவதோடு மட்டும் நின்று விடாது அதற்கு மேலாக அவருடைய போதனையையும் நல்வாழ்வையும் பின்பற்றி இறைவனுக்கு சாட்சிகளாக மலர வேண்டும்.

புனித அந்தோனியார் திருப்பண்டம் அவரது திருத்தலத்திலே வைக்க பாக்கியம் பெற்ற தலமாக அமைந்திருக்கிறது. மானிப்பாய் பதியின் புனித அந்தோனியாரின் திருவிழாவைக் கொண்டாடும் அனைவரும் இறைவனின் நிறைவான ஆசியும் தூய அந்தோனியாரின் பரிந்துரையும் பெற்று வாழ்வை நிறைவாக்குவார்களாக.

**தயானந்தி, மயூறி**





### கோடிவரங்களை அள்ளி வழங்குபவர்

பதுவை நகர் புனித அந்தோனியார் நாவழியா அற்புதர், கோடிவரங்களை அள்ளி வழங்குபவர். இறைவன் இயேசுவிடம் இருந்து தினம் தினம் அற்புதங்களைப் பெற்று தருபவர். இவரின் பெருவிழாவை மானியம் பதியிலே கொண்டாடி மகிழ்வது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். தனது வாழ்வாலும் பணியாலும் நற்செய்தி அறிவிப்பாலும் பல்லாயிரக்கணக்கான மக்களை இயேசுவின்பால் கொண்டுவந்தவர் புனித அந்தோனியார். சத்திய வேதத்திற்கு சாட்சியாக நின்று நித்திய இயேசுவை தனது வாழ்வாக்கி உத்தமமான புனிதராக திகழ்பவர்தான் புனித அந்தோனியார்.

தனது புதுமை செய்யும் வரங்களினாலே இன, மத, மொழி, சாதி என்ற எல்லைகளைக் கடந்து புனித அந்தோனியார் ஆற்றி வரும் இறைஊழியம் எம் கிறிஸ்தவ வாழ்விற்கு ஒரு உதாரணமாகும். இவரது வாழ்வு எம்மை வாழவைக்கவேண்டும். இவரது சாட்சியம் எமக்கு சிந்தனையாகவேண்டும்.

இவரது அர்ப்பணம் எம்மை பாதிக்கவேண்டும். வாழ்வது நானல்ல ; என்னில் கிறிஸ்துவே வாழ்கின்றார் என்ற புனித பவுலின் வாழ்வின் பகிர்வு புனித அந்தோனியார் வாழ்விலே நிதர்சனமாகியது. யதார்த்தமாகியது. எனவே புனித அந்தோனியாரின் உதாரணமான, உன்னத மான, எளிமையான வாழ்வை நாமும் பின்பற்றி இயேசுவின் இனிய சாட்சிகளாக மாறுவோம்.

இந்த இனிமையான நல்ல நாளிலே சிறப்பாக புனித அந்தோனியாருடைய பரிந்துரை நிறைவாக உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் கிடைக்கவும் வல்லமையுள்ள இறைவன் இயேசுவின் அன்பும் அருளும் ஆசீர்வாதமும் எம் அனைவரையும் நிரப்ப ஆசித்து நிற்கின்றேன்.

**அருட்திரு எக்ஸ்.டபிள்யூ ஜேம்ஸ்,**
**பரிபாலகர்**



### யாழ்.ஆயரின் ஆசியுரை

**உன்னதரின் புனிதர்கள் அரசுரிமை பெறுவர். அந்த அரசுரிமையை எங்கும் ஊழ்ஊழிக் காலமும் கொண்டிருப்பர்.**

எம்மீட்பராம் இயேசு கிறிஸ்துவின் குருத்துவத்தில் பங்கு கொண்டு தந்தையின் அரவணைப்பில் புனிதர்களுக்கேயுரிய சிறப்பை, மாண்பை பெற்று விளங்கும் கற்பில் உத்தமர் என்றும் எளிமைத்தனத்தின் ஆபரணம், திருச்சபையின் தூண், அருட் கொடைகளின் போதகர், காமத்தை அடக்குபவர், புண்ணி யங்களை விதைப்பவர், தேவரீருடைய திருக்கரங்களின் இறை வனின் திருமகனையே தாங்குகின்றவர் என எல்லோராலும் புகழப்படும் எம் புனிதரின் மானிப்பாய் பதியிலே கோயில் கொண் டிருக்கும் தூய அந்தோனியார் விழாவை இன்று மானிப்பாய் மக்கள் கொண்டாடி மகிழ்வதையிட்டு நான் அகமகிழ்கின்றேன்.

மானிப்பாய் தூய அந்தோனியார் ஆலயமானது யாழ்.மறைமாவட்டத்திலே ஓர் முக்கிய யாத்திரைத் ஸ்தலமாக இருக்கின்றது. எல்லா மத மக்களும் இவ்விடத்தில் ஒன்றுகூடி அந்தோனியாரின் விழாவைக் கொண்டாடுவது இவ்வாலயத்தின் ஒரு சிறப்பம்சமாகும். நாவழியா வரம் பெற்றவர் எம் புனிதர். தன் நாவால் சத்திய மறையை போதித்தவர் மட்டுமல்ல தன் வாழ்வாலும் செப போக்காலும் பலருக்கு உண்மை இறைவனைக்காட்டி நிற்பவர் தான் தூய அந்தோனியார். இன்று உலகெங்கும் அவரது பெயர் கொண்ட ஆலயங்கள் அவரது சீடத்துவ வாழ்வுக்கு சான்று பகர்கின்றன. பரிசுத்த நற் கருணைமேல் கொண்ட அவரது மதிப்பும் மரியாதையும் குறிப்பாக தேவதாயின் மேல் அவர் கொண்ட ஆழ்ந்த சேய்க்குரிய பாசமுமே அவரைப் புனித நிலைக்கு உயர்த்தியது.

எனவே இத்தகைய மகிமை பெற்ற தூய அந்தோனியாரை கத்தோலிக்கர்கள் மட்டுமல்ல இந்து சகோதரர்களும் ஏனைய மதச் சகோதரர்களும் நாடி ஓடி வருவது அவரின் மேல்கொண்ட நம்பிக்கையும் அவரிடம் பெற்ற வரங்களுமேயாகும்.

இந்த வகையில் இத்தலைசிறந்த புனிதரை தம் பாதுகாவலராகக் கொண்டு அவரது பரிந்துரையால் வளம்பெறும் மக்களை மென்மேலும் கோடி அற்புதரின் ஆசீரால் சத்தியவேதத்தில் உறுதியுடன் நிலைத்து இறைவனுக்கு மகிமை சேர்க்க உங்கள் எல்லோரையும் வாழ்த்தி ஆசிகூறுகின்றேன்.

**பேரருட் இ.தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை,**
**யாழ்.ஆயர், ஆயர் இல்லம்,யாழ்ப்பாணம்.**

### தேர்ப்பவனி காணும் அந்தோனி!

பொன் பொருளைக் கேட்டேனா உன்னை, எனக்கு
புகழ்மயக்கம் பதவியைத் தான் கோரினேனா
தன்னடக்கம் கருணையுடன் தரணி வாழ்வில்
தேடும் ஒரு அமைதி தந்து கலகம் விளைக்கும்
வன்நெஞ்சு என்னிடத்தில் பிடுங்கி எடுத்து
வற்றாத அன்பில் இந்த ஓடம் செல்ல
உன்னடியைச் சரணடைந்தேன் ஏழை உய்ய
அந்தோனி! ஒருவரமே தாருமய்யா!
நோயாலே படுத்துநானே ஏங்கி இளைத்து
நொந்துவிழி கழுவியோட அழுதேன் வாழ்வில்
வாயாலே ஓர் உண்மை பேசி அறியா
வஞ்சகனாய் இங்கு வாழ்ந்து விட்டேன் அன்புத்
தாயாலே கை நெகிழ்ந்த குழந்தைபோலத்
தஞ்சமென்று கயவனெங்கு ஆறப்போவேன்
தூயவனே அந்தோனி! தங்கத் தேரில்
திருப்பவனி வந்தருளை பொழியும் ஐயா!

**சிங்கராயர் வசீகரன்**

மலரமைப்பு: கே.விஜயகாந்தன்

யாத்திரை ஸ்தலவிழா
சிறப்புற பிரார்த்திப்போர்

PC SYSTEMS
Total IT Solution Providers
Alady Junction, Manipay
T.P: 021 2255445, 021 7391070
Photo Copy · Internet Browsing · Printing · Skype Call

UNI - ICT Campus
Jaffna Road, Manipay
(மானிப்பாய் பிரதேச சபை முன்பாக)
தொ.பே: 0777 110 862, 021 321 6433

சியாட் ரயர் தயாரிப்புக்களின் ஏக விநியோகஸ்தர்
ஐங்கரன் மோட்டோர்ஸ்
மானிப்பாய், தொ.பே: 021 225 5150

பலசரக்குப் பொருட்களை மலிவான விலையில் பெற்றுக்கொள்ள
V.S.M. ஸ்ரோர்ஸ்
மானிப்பாய்

பமிலி சுப்பர் ஸ்பொட்
சந்தைக்கு அருகாமை, மானிப்பாய்.
(பால்மா வகை, பிஸ்கேற்வகை, பலசரக்கு பொருட்கள் மலிவாக பெற்றுக்கொள்ள முடியும்)

யாழ்.மண்ணில் சகல விதமான இலத்திரனியல் பொருட்களை நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்
சுந்தர்சன்
யாழ்.வீதி, மானிப்பாய்.

அரச அங்கீகாரம் பெற்ற
A தர சாரதிப். பயிற்சிப் பாடசாலை
கிருபா லேணர்ஸ்
தலைமைக் காரியாலயம்
226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 4353

BRS Motor Engineers · BAJAJ
றஞ்சிற் மோட்டோர்ஸ்
றிப்பயரிங் சேவிஸ் சென்ரர்
286 யாழ்.வீதி, மானிப்பாய்.
T.P: 0773107549, 0772269883,
Service Station: 021 373 7808 Spare Parts: 021 2255228

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2 ஆவது சர்வதேச விமான நிலையமாக இந்திராகாந்தி விமான நிலையம்




உலகின் 2 ஆவது தலைசிறந்த சர்வதேச விமான நிலையமாக டில்லி இந்திராகாந்தி சர்வதேச விமான நிலையம் தேர்வு செய்யப் பட்டுள்ளது. 2006 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட சர்வதேச விமான நிலைய மன்றம் ஆண்டு தோறும் உலகில் உள்ள அனைத்து சர்வதேச விமான நிலையங்களை ஆய்வு செய்து சிறந்த விமான நிலையங் களுக்கு கௌரவம் வழங்கி வருகிறது.

அதன் 2012ஆம் ஆண்டு இந்த மன்றம் உலகிலுள்ள 199 விமான நிலையங்களை ஆய்வு செய்தது. இதில் உலகின் 2 ஆவது தலைசிறந்த சர்வதேச விமான நிலையமாக டில்லி இந்திராகாந்தி சர்வதேச விமான நிலையம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. 25 தொடக் கம் 40 மில்லியன் பயணிகளுக்கு அளிக்கப்படும் சேவைகள் பிரிவில் இந்த பாராட்டும் கிடைத்துள்ளது.

இது தவிர ஏனைய அனைத்து பொதுப் பிரிவுகளிலும் நான்காவது இடத்தைப் பெற்றுள்ளது. டில்லி விமான நிலையத்தின் மொத்தப் பயணாளர்கள் ஆண்டுக்கு 60 மில்லியன் பயணிகள் ஆகும். சென்ற வருடம் 34.2 மில்லியன் மக்கள் இந்த விமான நிலையத்தைப் பயன் படுத்தியுள்ளனர். அதேபோல் 5 இலட்சத்து 50 ஆயிரம் தொன் எடை கொண்ட சரக்கு பொருட்கள் இந்த விமான நிலையத்தில் கையாளப்ப ட்டுள்ளன. 3 இலட்சத்திற்கும் மேற்பட்ட விமானங்கள் இங்கு போக் குவரத்தில் ஈடுபட்டுள்ளன என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. (அ-2)


SUNJEYS TOURISM தின் யாத்திரை
வவுனியாவிற்கு அப்பால் உள்ள கோயில்களுக்கான யாத்திரை

5 நாட்களுக்கு ஒரு நபருக்கு 11900/=மட்டுமே
20 பேர் மட்டும்
ஆரம்பம்: 21.06.2013
காலை 7.00 மணிக்கு
இக்கட்டணம் முதன்முறை மட்டுமே

SUNJEYS TOURISM ஊடாக 40 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான சுற்றுலா யாத்திரை. யாத்திரிகர்களின் வேண்டுகோளுக்கிணங்க 21.06.2013 இற்கு பிற்போடப்பட்டுள்ளது. பதிவு செய்தவர்கள் தவிர ஏனையவர்களுக்கான ஆசனப் பதிவுகள் முந்துவோருக்கு முன்னுரிமை. இவ்வரிய சந்தர்ப்பத்தை நழுவவிடாதீர்.



உணவு, தங்குமிடம், போக்குவரத்து (குளிரூட்டப்பட்ட, தொலைக்காட்சி, adjustable Seat) போன்ற சகல வசதிகளுடனும் கீழ்க்காணும் இடங்களை சுற்றிப்பார்க்க ஓர் அரிய சந்தர்ப்பம்.

மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, கதிர்காமம், நுவரெலியா, கண்டி

மேற்குறிப்பிட்ட இடங்களிலுள்ள முக்கிய வணக்க ஸ்தலங்களுக்கும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்கும் செல்லலாம்

தொடர்புகளுக்கு:
Sunjeys Tourism
713, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P:0777474111, 0212217070



வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு:
T.P: 021 321 0815, 021 567 1540



New Yarl Hospital
315, Palaly Road, Parameswara Junction, Thirunelvely, Jaffna

நியூ யாழ் வைத்தியசாலை

சிறிய கால இடைவெளிக்குப் பின் புதிய யாழ்.வைத்தியசாலையின் காது, மூக்கு, தொண்டை, சத்திரசிகிச்சை நிபுணரின் வைத்திய ஆலோசனையும் சத்திர சிகிச்சைகளும் மீண்டும் ஆரம்பித்துள்ளோம்.





ஏனைய சேவைகள்...

- பெண் நோயியல் நிபுணரின் லப்ரஸ் கொப்பி சத்திர சிகிச்சையும் திறந்த சத்திர சிகிச்சையும்
- லப்ரஸ் கொப்பி சத்திர சிகிச்சை, கேணியா, அப்பென்டிசைட், பித்தப்பை கல் அகற்றல்
- லப்ரஸ் கொப்பியின் நோயைக் கண்டறியும் பரிசோதனை
- வைத்திய நிபுணர்களின் வைத்திய ஆலோசனையும் 24 மணிநேர வெளிநோயாளர் பிரிவுச் சேவையும்
- வீடியோ முறையிலான என்டஸ்கொப்பி பரிசோதனை
- காது கேட்கும் கருவிகளின் விற்பனையும் திருத்த வேலைகளும்
- காது கேட்கும் திறன் அறியும் பரிசோதனைகள்

புதிய யாழ்.வைத்தியசாலை
315, பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 3533,
0777781005, 021 2221011
(சி-3656)



கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து(V)<br>நட்சத்திரம்: உத்தரம் 3<br>உயரம்: 5’4”<br>கி.பா:. 47.25 4இல் செவ்<br>தகைமை/தொழில்:A/L<br>முகாமையாளர்(தனியார்)<br>தொ.இ:B1904 | பிறப்பு: 1986 இந்து(குருகுலம்)<br>நட்சத்திரம்: அவிட்டம் 2<br>உயரம்: 5’10”<br>தகைமை/தொழில்: CIMA<br>தொ.இ:G1930 |
| பிறப்பு: 1980 இந்து(V)<br>நட்சத்திரம்: கேட்டை 4<br>கி.பா: 12<br>உயரம்: 5’9”<br>தகைமை/தொழில்:A/L,Post office<br>அரச Australia விவாகரத்து பெற்றவர்<br>தொ.இ:B1906 | பிறப்பு: 1976 இந்து(V)<br>நட்சத்திரம்: திருவாதிரை 2<br>கி.பா: 20<br>உயரம்: 5’3”<br>தகைமை/தொழில்: BSc.EngCivil Engineer (சைவபோசனம்)<br>தொ.இ:G1931 |
| பிறப்பு: 1981 இந்து(V)<br>நட்சத்திரம்: புனர்பூசம் 4<br>கி.பா:43.25 4இல் செவ்<br>உயரம்: 5’9’.<br>தகைமை/தொழில்- BA<br>பட்டதாரி பயிலுனர்<br>தொ.இ:B1907 | பிறப்பு: 1984 இந்து(V)<br>நட்சத்திரம்: பூராடம் 3<br>கி.பா:35உயரம்: 4’7”<br>தகைமை/தொழில்:BA,ICT Diploma<br>தொ.இ:G1932 |
| பிறப்பு: 1980 இந்து(V)<br>நட்சத்திரம்: அவிட்டம் 1<br>கி.பா:122 1இல் செவ்<br>உயரம்: 5’8’<br>தகைமை/தொழில்-HNDM ,MCOM நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்<br>தொ.இ:B1947 | பிறப்பு: 1981 இந்து(V)<br>நட்சத்திரம்: ஆயிலியம் 1<br>கி.பா: 16.5<br>உயரம்: 5’ 5.5”<br>தகைமை/தொழில்:Degree in IT Software Analyzer (Australia PR)<br>தொ.இ:G1935 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
(ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்)
ஊடக அனுசரணை வலம்புரி



சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை தினங்களிலும் எமது சேவையினைப் பெற்றுக்கொள்ளலாம்

விரைவு ! பாதுகாப்பு ! நம்பகத்தன்மை!

உள்நாடு வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

உங்கள் இல்லங்களில் இருந்தவண்ணமே சகல நாடுகளுக்குமான பொதிகள் பொறுப்பேற்கப்பட்டு குறித்த முகவரியில் ஒப்படைக்கப்படும். (Pickup Service) உங்கள் உறவுகளின் கைகளில் 3 – 5 வேலை நாட்களில் ஒப்படைக்கப்படும்.
20 வருடங்களுக்கு மேல் எமது நிறுவனம் பொதிகள் சேவையில் முன்னிலையில் திகழ்ந்து நேரடி முகவராக தனி இடம் பிடித்துள்ளது.

- 11 Kg இக்கு மேற்பட்ட பொதிகளுக்கும் மிக குறைந்த கட்டணம் அறவிடப்படும்
- தற்பொழுது இலங்கையில் எங்கும் இல்லாதவாறு மிகக்குறைந்த கட்டணத்தில் உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள் அன்பளிப்பு பொருள்கள் புடைவைகள் CD, VCD கள் என்பன மிக விரைவாக அனுப்பி வைக்கப்படும்.
- 220 நாடுகளுக்கான கட்டணங்களும் குறைக்கப்பட்டுள்ளன.
- கூடுதலான கட்டணங்கள் செலுத்தி ஏமாறாதீர்கள்

DHL

குறிப்பு : இந்த சலுகை திருமுருகன் கொம்னெற் இல் மட்டுமே

திருமுருகன் கொம் நெற்
இல. 228 A, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். 021 222 7835
(விஜய நகைக்கு முன்பாகவும், ஆல் சிலோனிற்கு அருகிலும் அமைந்துள்ளது)
இல. 18, பிரதான வீதி, நெல்லியடி. இல. 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
TCN E xpress
இல. 28, நெல்சன் பிளேஸ், கொழும்பு - 2
(சி-3508)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது சுகாதார அணியினர் திடீர் பரிசோதனை பலர் சிக்கினர்

கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவால் ஒன்றிணைந்த சகல பொது சுகாதார அணியினர் இரவு வேளையில் திடீர் பரிசோதனை ஒன்றை மேற்கொண்டனர்.

இந்த அதிரடி நடவடிக்கையாக கடந்த 10 ஆம் திகதி கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள அச்சுவேலி, சிறுப்பிட்டி, நீர்வேலி, இருபாலை, கோப்பாய், உரும்பிராய் பகுதிகளில் உள்ள உணவு கையாளும் நிலையங்களான வெதுப்பகம், ஹோட்டல் போன்றவற்றில் மாலை 6 மணிஇருந்து இரவு 12 மணி வரை இடம்பெற்றது. இதன் போது 38 வழக்குகள் வெதுப்பகம், ஹோட்டல் போன்றவற்றுக்கு எதிராக பதிவு செய்யப்பட்டுள் ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன் அடிப்படையில் அச்சுவேலியில் 13 உம் சிறுப்பிட்டி பொது சுகாதாரப் பிரிவில் 12 உம் உரும் பிராயில் 9 உம் இருபாலை, நீர்வேலியில் தலா 2 வழக்குகளும் பதிவு செய்யப்பட் டுள்ளன. இவற்றில் அதிகளவானவை வெதுப்பகங்களில் சுகாதாரத் தன்மை பேணப்படாமை காரணமாக வெதுப்பக உற்பத்திகள் மேற்கொள்வது கண்டறிப்பட்டுள்ளமை சார்ந்த ஆகுமென பொதுச் சுகா தார பரிசோதகர் ஒருவர் தெரிவித்தார். மேலும் இக்கடை உரிமையாளர் களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குகள்தொடரப்பட்டுள்ளன.(அ-3)


## அபிவிருத்தி சங்க விசேட பொதுக் கூட்டம்

(சித்தன்கேணி)

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் அபிவிருத்திச் சங்க விசேட பொதுக்கூட்டம் கல்லூரி மண்டபத்தில் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2.15 மணிக்கு நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் தனஞ்சயன் தலைமையில் இடம்பெறவுள்ள இக்கூட்டத்தில் செயலாளர், பொருளாளர் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

அத்துடன், ஆசிரியர் பற்றாக் குறை நிவர்த்தி செய்தல் மற்றும் மாணவர்களின் கல்வி அபிவிருத்தி பற்றிய விடயங்களும் கலந்தாலோசிக்கப்படவுள்ளதாக அறிவிக் கப்பட்டுள்ளது. (அ-17)



## ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலயம்

**இன்று ஐந்தாம் திருவிழா**

வேரோடு வினைகளை நீக்கிடுவாய் ஐங்கரனே

தீராத வினை தீர்க்கும் நீராவியடி விநாயகனே வாராயோ
எம்முன்னே நல்வளமான வாழ்வருள
ஓராறு முகனின் அண்ணனே ஒய்யாரக் காட்சிதந்து
மாறாத நின் கருணை மழை பொழிய வேண்டும்
வேரோடு வினை களையும் வேழ முகத்தவனே!
தாராயோ நின்னருளை வணங்கி நிற்கும் எம்மையே
பாராயோ கடைக்கண்ணால் பரம கருணா நிதியே
அடியார்க்கருள் புரியும் வீரகத்தி விநாயகனே! சரணம்!

கலாபூஷணம் இராசையா ஸ்ரீதரன்

# மின்சாரம் தடைப்படும்

வீதிஅகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடம் நகர்த்த வேண்டியிருப்பதாலும் புதிய உயர் அழுத்த மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளைச் செய்ய வேண்டியிருப்பதாலும் காலை 8.30 மணியில் இருந்து மாலை 5.30 மணிவரையும் மின்விநியோகம் தடைப் பட்டிருக்குமென யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதன்படி இன்று ஞாயிற்றுக் கிழமை குஞ் சர் கடைப் பிரதேசத்தின் ஒருபகுதி, உடுப்பிட்டி, தொண்டைமானாறு, வல்வெட்டித்துறை, வல்வெட்டி, நவிண்டில், உரும்பிராய், கோண்டாவில், மருத்துவ பீடப் பிரதேசம் திருநெல்வேலிப் பிர தேசம், பட்டணப் பகுதி நீங்கலாக யாழ் மாநகர சபைப் பகுதி, ஸ்ரா ன்லி வீதி, பிறவுண்வீதி, கஸ்தூரியார் வீதி , கன்னாதிட்டி, தட்டார்தெரு தொடக்கம் முட்டாஸ்கடைச் சந்தி வரையான பிரதேசம், மனோகரா பிரதேசம், ஈஞ்சை வைரவர் பிரதேசம், சோரன்பற்று, புதுக்காடு ஆகிய இடங்களிலும்நாளை திங்கட்கிழமை சோரன்பற்று, புதுக்காடு ஆகிய இடங்களிலும் எதிர்வரும் 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை குஞ்சர் கடைப் பிரதேசத்தின் ஒரு பகுதி, உடுப்பிட்டி தொண்டைமானாறு, வல்வெட்டித்து றை, வல்வெட்டி, நவிண்டில், ஈஞ்சை வைரவர் பிரதேசம், சோரன்பற்று, புதுக்காடு ஆகிய இடங்களிலும் எதிர்வரும் புதன்கிழமை நெல்லியடிப் பிரதேசத்தின் ஒரு பகுதி, வதிரி, அல்வாய்ப் பிரதேசத்தின் ஒரு பகுதி, திக்கம், சோரன் பற்று, புதுக்காடுஆகிய இடங்களிலும் எதிர்வரும்வியாழக்கிழமை அச்சுவேலி இடைக்காடு, பத்தமேனி, வளலாய், தொண்டைமானாறு, வதிரிப் பிரதேசம், ஈஞ்சை வைரவர்பிரதேசம், சோரன் பற்று, புதுக்காடு ஆகிய இடங்களி லும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்குமென அவர் குறிப்பிட்டுள்ளார்.(அ-2)

## சீரற்ற கால நிலையால் 250 இலட்சம் ரூபாவுக்கு மேல் மின்சார சபைக்கு நட்டம்

சீரற்ற காலநிலை காரணமாக மின்சார சபைக்கு 250 இலட்சம் ரூபாவுக்கு மேல் நட்டம் ஏற்பட்டுள்ளதாக மின் சக்தி எரிசக்தி அமை ச்சு கூறி யது.

கடும் காற்று காரணமாக நாட்டின் பல பகுதிகளில் கடந்த தினங்களில் மின் துண்டிப்பு இடம்பெற்றுள்ளது.

கடும் காற்றினால் நுவரெலியா மாவட்டத்திலே கூடுதலான சேதம் ஏற்பட்டுள்ளது. அதிசக்தி வாய்ந்த மின் கம்பங்களின் மீது மரங்கள் வீழ்ந்தமையால் 250 இலட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.


இதனால் சில பகுதிகளில் மின்சாரம்துண்டிக்கப்பட்டுள்ளது. இவற்றைத் துரிதமாக திருத்தி வழமை நிலைக்கு மாற்றுமாறு அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி மின்சார சபை அதிகாரிகளுக்கு பணித்துள்ளார். (அ-2)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சுட்டிப்பயல் பாலு



சீனுவும், பாலுவும் உடன் பிறந்த சகோதராகள். இருவருமே பள்ளி செல்லும் மாணவர்கள். சீனுதன் வயதையொத்த மற்ற பிள்ளைகளைப்போல் இருக்க, பாலு அளவுக்கு மீறி சுறுசுறுப்பாக இருந்தான். பல விடயங்களில் அவன் அவசரக் குடுக்கையாக இருந்து தானும் சங்கடத்தில் மாட்டிக் கொண்டு, மற்றவர்களையும் அவன் கஷ்டப் படுத்தியதுண்டு.


விடுமுறைக்கு தாத்தா வீட்டுக்கு வந்திருந்த இருவரும் மகிழ்ச்சியுடன் பொழுது போக்கினர். சீனு தாத்தா, பாட்டிக்குப் பிடித்தவாறு பயனுள்ள வேலைகளைச்

**அம்புலிமாமா கதைகள்**


செய்வதுடன், அவர்கள் சொல்வதைக் கேட்டுக் கீழ்ப் படிந்து நடப்பான். ஆனால், பாலு வேண்டாத விடயங்களில் தலையிட்டு எப்போதும் ஏதாவது விஷமம் செய்து சிக்கலில் மாட்டிக் கொள்வான், தொல்லைப் படுத்துவான்.

ஒருநாள் காலையில், பாலு எழுந்து பார்த்தால், சீனு தோட்டத்தில் தாத்தாவுடன் வேலை செய்துகொண்டிருந்தான். தோட்டத்துச் செடிகளுக்குத் தண்ணீர் பாயும் வண்ணம் கால்வாய் வெட்டியிருந்தனர். அந்தக் கால்வாயில் ஏகப்பட்ட களைச்செடிகள் வளர்ந்து தண்ணீர் சீராகப் பாயாமல் தடுத்தன. தாத்தா கால்வாயை மராமத்து செய்யும் வேலையை சீனுவிடம் ஒப்படைக்க, அவன் மண் வெட்டியினால் களைச் செடிகளை அப்புறப்படுத்தியது உடன், கால்வாயை ஆழமாகத் தோண்டித் தண்ணீர் பாயும் ப்டி செய்தான்.

அதை பாலுவுக்குக் காட்டிய தாத்தா, பார்! உன் அண்ணன் உருப்படியாக வேலை செய்கிறான். நீ விஷமம் செய்யத்தான் லாயக்கு! என்று கேலி செய்யபாலுவுக்கு ரோசம் ஏற்பட்டது. உருப்படியாகத் தானும் ஏதாவது வேலை செய்துகாட்ட வேண்டும் என்ற உத்வேகம் பிறக்க, தாத்தாவின் அறைக்குள் புகுந்து என்ன செய்யலாம் என்று யோசித்தான்.



உடனே பாலுவுக்கு ஓர் அபார யோசனை தோன்றியது. தன் வீட்டில் அம்மா பழைய புத்தகங்களைப் பேப்பர்க்காரனிடம் போட்டு காசு வாங்குவாள். அதை இப்போது தான் செய்தால் என்ன என்று தோன்றியது. உடனே ஒரு பெரிய சாக்குப் பையில் தாத்தாவுடைய நூலகப் புத்தகங்களைத் திணித்து எடுத்துக் கொண்டு பழைய புத்தகக் கடைக்குச்சென்று கிலோ ஐந்து ரூபாய்க்கு விற்று வெற்றி வீரனாகத் திரும்பினான். தாத்தா! என்று கொக்கரித்த பாலு சீனுவைப் போல் கால் காசுக்குப் பிரயோசனம் இல்லாத வேலை செய்யவில்லை இந்த பாலு! இதோ பார் நான் சம்பாதித்தது! என்று ரூபாய் நோட்டுக்களை விசிறி போல் அடுக்கி வைத்து ஆட்டினான்.



எப்படிடா சம்பாதித்தாய்? என்று தாத்தா கேட்க, பழைய புத்தகக் கடைக்காரனிடம் நம் வீட்டுக் குப்பையைப் போட்டேன். பணம் கிடைத்தது. இதை நீயே வைத்துக்கொள்! என்று பெருந்தன்மையுடன் நோட்டுக்களை நீட்ட குப்பை ஏது என் ரூமில்? என்று தாத்தா கேட்க, அதுதான் புத்தக அலுமாரியில் வரிசையாக அடுக்கி வைத்திருந்தாயே? இதை எல்லாம் விலைக்குப் போட்டேன். என்று சொல்லி முடிப்பதற்குள் தாத்தா ஆ! என்று அலற ஐயோ! போச்சே! என் நூலகம் போச்சே! என்று கூச்சலிட பாட்டியும் சீனுவும் அங்கு ஓடி வந்தனர்.

இது நடந்து சில நாட்களுக்குப் பின் அவர்களுடைய உறவினர் ஒருவர் வீட்டுக்கு வர எல்லோரும் தோட்டத்தில் நாற்காலி போட்டு உட்கார்ந்து பேசிக்கொண்டு இருந்தனர். அப்போது தாத்தா தன் பேரன் சீனுவைப் பற்றி புகழ்ந்து பேச, பதிலுக்குப் பாட்டி மற்றொரு பேரன் பாலுவின் புத்தக விற்பனை வரலாற்றைப் புட்டுப் புட்டு வைக்க, வந்த உறவினர் ஓஹோ! ஓஹோ! என்று விழுந்து விழுந்து சிரிக்க, பாலுவுக்கு ரோசம் வர, அவன் வீட்டுக்குள் சென்று விட்டான்.

உறவினர் சென்றபின் பார்த்தால் வீட்டுக்குள் பாலுவைக்காணவில்லை. எல்லோரும் வெலவெலத்துப்போய் தேடினர். பாலுவை எங்குமே காணவில்லை. தாங்கள் மிக அதிகமாக அவனை கேலி செய்து விட்டதனால் கோபித்துக் கொண்டுவீட்டை விட்டு ஓடி விட்டானோ என்று பரிதவித்துப்போயினர். கடைசியில் படுக்கையறை பரணின் மேல் பாலுவின் கால்கள் தெரிய, எம்பிப் பார்த்ததில் பாலு பரணின் மீது ஸ்டூல் போட்டு ஏறியவன்.

அங்கேயே தூங்கிப்போய் விட்டதைப் பார்த்தனர். மிகப்பெரிய பரண் என்பதால் அவன் அன்றிரவு அங்கேயே தூங்கட்டும் என்று விட்டுவிட்டு அவன் விழாமல் இருக்க, முன்னால் தலையணைகளை வைத்தனர்.

அன்றிரவு இரண்டு திருடர்கள் தாத்தாவின் வீட்டுக்குள் புகுந்து விட்டனர். ஒருவன் பாட்டியின் தங்கக் காசுமாலையைக் கழற்ற முயற்சிக்க மற்றொருவன் பாட்டியை நோக்கிக் கத்தியை நீட்டினான். தாத்தாவும் சீனுவும் செய்வதறியாமல் திகைக்க, பாட்டியின் கூச்சலில் விழித்துக் கொண்ட பாலு பரணிலிருந்த ஊறுகாய் ஜாடியைத் தூக்கி கத்தி பிடித்த திருடனின் தலையில் போட அவன் மயக்கமுற்று கீழேவிட உடனே மற்றவனை தாத்தாவும் சீனுவும் அமுக்கிப் பிடித்துக்கொள்ள கீழே மளமளவென இறங்கிய பாலு திருடன் திருடன் என தெருவுக்குச் சென்று கூச்சலிட, அக்கம் பக்கத்தார் ஓடிவந்து இரண்டு திருடர்களையும் பிடித்து பொலிஸில் ஒப்படைத்தனர். அதுவரை பாலுவைக் கேலி செய்து வந்த தாத்தாவும் பாட்டியும் அவனை திடீரென ஹீரோ ரேஞ்சுக்கு வானாளாவ உயர்த்திப் பேச அக்கம் பக்கத்துக்காரர்களும் பாலுவை புகழ்ந்துதள்ள, அன்று முதல் பாலு ஸ்பைடர் மேன் ரேஞ்சுக்குப் போய் விட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழர்களுக்கு ஜெயலலிதா ஆதரவு; இலங்கை அரசாங்கத்திற்கு அச்சுறுத்தல்

## பாதுகாப்பு செயலாளர் கோத்தா தெரிவிப்பு

(கொழும்பு)

ஈழத்தமிழர்களுக்கு தமிழக முதல்வர் ஜெயலலிதா ஆதரவளித்து வருவது இலங்கை அரசை கலக்கமடையச் செய்துள்ளது என பாதுகாப்புச் செயலரான கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். கொழும்பில் உள்ள கொத்தலாவல இரா ணுவ பல்கலைக்கழகத்தில் அண்மையில் அவர் உரையாற்றியபோது, ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக தமிழக முதல்வர் ஜெயலலிதா இருப்பது இலங்கை யின் பாதுகாப்பு மற்றும் இறையாண்மைக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந் துள்ளது.

இலங்கையில் என்ன நடக்கிறது என்பதை இந்தியா உன்னிப்பாகக் கவனித்து வருகிறது. இதற்கு முக் கிய காரணமே தமிழக அரசியலில் இலங்கை தமிழர் விவகாரம் மிக முக்கியமான அம்சமாக இருப்பது தான். குறிப்பாக தேர்தல் சமயத்தில் இலங்கை விவகாரம் மிக முக்கிய மான இடத்தைப் பிடித்தது.

சமீபகாலமாக இலங்கை அரசை சர்வதேச தளத்தில் எதிர்க்க வேண் டும் என்று தமிழக முதல்வர் ஜெயல லிதா மத்திய அரசுக்கு நெருக்குதல் அளித்து வருகிறார். இது இலங்கை யின் பாதுகாப்பு மற்றும் இறை யாண்மைக்குப் பெரும் அச்சுறுத் தலாகும்.

இலங்கையில் வாழும் சில தமிழர் கள் தங்களுக்குள்ள நெருக்கத்தின் மூலம் தமிழகம் வழியாக வெளி நாடுகளில் வாழும் தமிழர் ஆதரவு அமைப்புகள் மூலம் தனித்தமிழ் ஈழக் கோரிக்கையைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.

இதனால் கடல் மார்க்கமாக இலங்கைக்கு ஆயுதம் கடத்தப்படும் அச்சுறுத்தலும் உள்ளது. இலங் கையில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் ஆதரவு இயக்கத்துக்கு குறிப்பாக தமிழ்நாட்டிலிருந்து கிடைக் கும் ஆதரவு மூலம் கடல் மார்க்கமாக ஆயுதம் கடத்துவதற்கான வாய்ப்பை பிரகாசப்படுத்தியுள்ளது.

இது இலங்கை அரசுக்குப் பெரும் அச்சுறுத்தலாகும் என்று அவர் குறிப்பிட்டார்.

தமிழக மீனவர்கள் இலங்கை கடல் எல்லையில் நுழைவதைத் தடுப்பதில் தீவிரம் காட்டுவதன் நோக் கமே இத்தகையோர் மூலம் போதைப் பொருள் கடத்தப்படுவதற் கான வாய்ப்பு பிரகாசமாக இருப் பதே என்றார்.

இந்திய எல்லையில் சீனாவின் அச்சுறுத்தல் இலங்கைக்கு மறைமுக ஆபத்தாக அமையும் என்று குறிப்பிட்டார். மிகப் பெரும் பொருளாதார வல்லரசாக சீனா உருவாகி வருகிறது.

அதன் அச்சுறுத்தலைச் சமா ளிக்க அமெரிக்காவின் தயவை இந்தியா நாட வேண்டியிருக்கும். அத்தகைய நிலையில் இப்பிராந்தி யத்தில் உள்ள இலங்கைக்கு அது பெரும் பாதிப்பாக அமையும் என்று குறிப்பிட்டார். மாலைதீவில் தளம் அமைக்க நடக்கும் முயற்சி இப் பிராந்தியத்தில் அமைதியற்ற சூழலை உருவாக்கிவிடும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (அ-2)

# காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் கூட்டமைப்புக்கு கிடைப்பது அசாத்தியம்

## எதிர்வுகூறுகிறார் அமைச்சர் திஸ்ஸ விதாரண

(கொழும்பு)

13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் தேவையற்ற பீதி நிலவிவ ருவதாக விஞ்ஞான மற்றும் தொழில் நுட்ப அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

இவ் விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

13ஆவது திருத்தச்சட்டத்தின் முழு அதிகாரங்களும் தற்போதைய மாகாணசபைகளுக்கு வழங்கப் படவில்லை.

13 ஆவது திருத்தச் சட்டத்தை ஓர் பலவீனமான சட்டமாகவே கருது கின்றேன். வட மாகாணசபைத் தேர் தலில் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு வெற்றியீட்டினாலும் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப் படக் கூடிய சாத்தியம் கிடையாது.

அனைத்து கொள்கை விவகாரங் களிலும் இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவிடமே காணப்படுகின்றது.

இவ்வாறான பின்னணியில் 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் சில தரப்பினர் தேவையற்ற பீதி யைக் கிளப்பி வருவதாகத் தெரிவித் துள்ளார்.

தற்போதைய சட்டத்தின் அடிப் படையில் வட மாகாணசபைத் தேர் தல் நடத்தப்பட வேண்டியது அவசிய மானது என அவர் சுட்டிக்காட்டி யுள்ளார். (அ-2)

# கிரிக்கெட் இறுதியாட்டத்தில் இன்று பலமான அணிகள் மோதுகின்றன


கரவெட்டி ஞானம்ஸ் அணி


மாலுசந்தி மைக்கல் அணி

(கரவெட்டி)

வதிரி டயமன்ஸ் விளையாட்டு கழகத்தின் நூற்றாண்டு விழாவை யொட்டி அணிக்கு 10 ஓவர் 11 பேர் கொண்ட கிரிக்கெட் இறுதி ஆட்டத் தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு டயமன்ஸ் விளையாட்டு கழக மைதானத்தில் வட மராட்சியில் இரு பலம் வாய்ந்த அணிகள் மோத வுள்ளன.

கரவெட்டி ஞானம்ஸ் அணியை எதிர்த்து மாலுசந்தி மைக்கல் அணி மோதவுள்ளது.

இச்சுற்றுப் போட்டியின் முதலா வது அரை இறுதி ஆட்டத்தில் வல் வெட்டித்துறை கழுகு அணியைத் தோற்கடித்து மாலுசந்தி மைக்கல் அணியும், இரண்டாவது அரையி றுதி ஆட்டத்தில் வதிரி ஸ்ரீமுருகன் அணியைத் தோற்கடித்து கரவெட்டி ஞானம்ஸ் அணியும், இறுதி ஆட் டத்திற்கு தெரிவாகின.

இவ் இறுதியாட்ட நிகழ்வு வதிரி டயமன்ஸ் கழகத்தின் தலைவர் தி.வரதராஜா தலைமையில் நடை பெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தின ராக முன்னாள் பாராளுமன்ற உறுப் பினர் எம்.கே. சிவாஜிலிங்கம், சிறப்பு விருந்தினராக வல்வெட்டித்துறை நகரசபையின் உபதலைவர் க.சதீஸ் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள் ளனர். (அ-3-24)

# மணிபல்லவத்தில் மஹோற்சவம்




## இன்று எட்டாம் நாள் திருவிழா

### நெய்தலின் நாயகி

அன்னையே உன்னை
அலைகடலும் தாலாட்டுகிறது
உனையறியாது
உலகத்தில் எவருண்டு

எண்ணமெல்லாம் தாயாய்
என் மனதினுள் நினைவாய்
உறைந்தவளே
அபிராமி, சிவகாமி
அனைத்து பெயர்களும்
உனக்குண்டு

வீரம் தரும் தேவியாய்
அருளாட்சி அமைக்கும்
நெய்தலின் நாயகி
என்றும் நீதான்

வே.வே. அகிலேஸ்வரன், மருதங்கேணியூர்.

### பூஷணியின் அருளோ குறைவதில்லை

மனிதம் என்றும் தோற்பதில்லை
மதத்தில் நம்பிக்கை வைத்தால்;
மானிடம் என்றும் தோற்பதில்லை
மதத்தின் தாற்பரியம் தெரிந்தால்;

கனியும் சுவை குறைவதில்லை
கடவுளின் கிருபை நிறைவதினால்
காணியில் அறுவடை குறைவதில்லை
கடவுளே எனத் தொடங்குவதால்;

சனியும் தீங்கு செய்வதில்லை
சந்நிதிகள் தோறும் வணங்குவதால்;
சாபங்கள் என்றும் தொடர்வதில்லை
சக்தி பீடங்கள் அருள்வதனால்;

புனிதம் நாட்டில் கெடுவதில்லை
பூமாதேவி பொறுமை காப்பதனால்;
பூஷணியின் அருளோ குறைவதில்லை
பேறாகும் திருவிழா சிறப்பதனால்

கே.எஸ்.சிவஞானராஜா, கொக்குவில்.

### நயினையின் நாகம்மா

நயினையின் நாகம்மா நாற்புறமும் நீயம்மா
நலமின்றி நாமம்மா உலகெங்கும் ஏனம்மா
கருணையில் கடலம்மா காட்சியெல்லாம் நீயம்மா
கலங்குகிறோம் விதியம்மா காலனவன் சதியம்மா

வீணையின் இசையம்மா வீணாகாணி நீயம்மா
விசையின்றி நாமம்மா விம்பங்கள் தொடருதம்மா
வேப்பிலையில் நீயம்மா வேதநாயகியும் நீயம்மா
வேதனைகள் தீருமம்மா நயினையின் நாகம்மா

கோ.சதீஸ், இராஜகிராமம்.

கஜமுகன் ஹாட்வெயர்

147,149, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 021 222 2833
021 222 9733
Fax-021 222 2368
E.mail- kajamuganhw@hotmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இமயம் தொட...

நடை உடை பாவனையில்
நீ நீயாய் இரு
நடைபெறும் தீமை கண்டு
நீ தீயாகிடு
புடைக்கும் சுளகுகளில்
நீ உமியாகிடு
பறந்து விளைநிலம் தேடி
நீ விதையாகிடு
விதைதான் நீ உமியல்ல
உலகிற்கு உன்னை விதையாக்க
நீ உமியாகி முளைத்தெழு

மாவைநா.கஜேந்திரன்

## அழுக்கானது இயற்கை மட்டுமல்ல

மண்ணே நாட்டின் வளமாகும்
கண்போல் காப்பது கடனாகும்
உணவுப் பயிரும் படிமரமும்
செடியும் கொடியும் வளர்ந்திடவும்
ஆறும் குளமும் நீர்நிலையும்
பருகும் நீரை தந்திடவும்
கனிய வளமும் இரத்தினமும்
மனிதவாழ்வை உயர்த்திடவும்
மண்ணை மாசுபடுத்தாமல்
வளத்தைப் பெருகச் செய்திடுவோம்
மனிதன் தனது வளம் பெருக்கும்
தன்னலத்தால் இயற்கை வளம்கெடுத்தான்
காட்டை அழித்து மழை குறைத்தான்
பவளப்பாறை குடைந்து கடலை
கரையைக் கடந்தும் தவழவிட்டான்
புகையால் காற்றையும் கெடுத்தாச்சு
ஓசோன் போர்வையையும் கிழித்தாச்சு
ஆனால் மனிதா! உனக்கு பெரிய மனசு
எல்லாவற்றோடும் சேர்ந்து
நீயும் தான் அழுக்காகிவிட்டாய்


சு.சிவராசா, நாவற்குழி

## விண்ணுலக வேங்கையே!

விண்ணுலகில் வீற்றிருக்கும் மண்ணுலக மறவனே
நீ மறைந்து விட்டாய் என்பதற்காய் நாம் மறக்கவில்லை
நீ மறைந்து போகவில்லை எங்கும் செறிந்து வாழ்கிறாய்
உன் அஸ்தமன அதிர்வால் உருவாகிய உதயங்களே அதிகம்
உன் மறைவால் உருவானது வெற்றிடம் அல்ல...
மிகை நிரம்பல்...
ஒருவர் உன்னிடம் வருகையில் ஓராயிரம்பேர்
எம்மிடம் வருகின்றனர்
ஒன்று மட்டும் உண்மை...!
நாளைய சுதந்திர வருகைக்காக
இன்று காற்றில் பறக்கும்...
கறுப்புக்கொடிகளே அதிகம்
ஆனாலும்...
உங்கள் கல்லறையில் மண்டியிட்டு கண்ணீர்
வடிக்கவில்லை!
சபதம் எடுத்து...
இலட்சியப் பணி தொடர்கின்றோம்
எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றி
என்றோ ஒருநாள்...
நிச்சயம் வருவோம்
அதுவரை...
மறைந்திருந்து உன்னையும்
உன்னைச்சார்ந்தவர்களையும்
வாழ்த்துவோம்

ஜெ.பகத்சிங், வாதவூர்

## என்னை தொலைத்துவிட்டாள்



கனவுகாணும்போது
கண்கள்மூடி விழியை ரசித்தேன்
கண்கள் திறக்கும்போது
உன் விழிகளை காணாது துடித்தேன்
எல்லோரும் என்னுடன் நடக்கும்போது
உன் பாதம் தேடி திரிந்தேன்
என் பாதம் அருகில் உன் பாதம்
காணாது இப்போது தவிக்கிறேன்
நான் உன்னைதானே சுவாசித்தேன்
என்பதை அறியாதவளாய் என்னை தூக்கி
எறிந்துவிட்டு சென்றாயே நியாயமா?
இப்போ என்னை நானே தொலைத்துவிட்டேன்
எனக்குள்ளே என்னை தேடவிட்டாயே

எம்.சுயித் , பருத்தித்துறை

# கவிதைக் கலசம்

# மௌனத்தின் தேடல் - 158



### பகிர்வு

ஏக்கங்கள் பல நிறைந்த இந்த
பிஞ்சுகளின் நெஞ்சத்திலே
பால் வார்க்கிறாள் இந்தப் பாலகி
கள்ளங்கபடமில்லாத இந்த
பிஞ்சுகளை ஏனோ இந்த
மானிடம் தவிக்கவிடுகிறது
ஒருவேளை கஞ்சிக்காக...!

உதயம் ரூபன்
நயினை

### தவறில்லைதானே...

மழலைகளே மற்றைய சிறுசுகளை
அழவைக்காது ஒழுங்காய் இருந்து
ஊற்றும் கஞ்சியை உவகையோடு
பெறநினைக்கும் நற்பண்பு- நாளை
நம் எல்லோர்க்கும் வந்துவிட்டால்
துன்பம் இல்லா நல்வாழ்வு...
தூரத்தில் இல்லை என்று
துணிந்து கூறினால்
தவறில்லைதானே...!

வ.ச.செல்வராசா
திருநாவலூர்

### புரியாதவர்களாய் நாம்

நீயார் என்று கூட
கேட்க முடியாமல்
உன்னைப் பார்த்ததும்
ஒன்று சேர்ந்து ஒரு
தாய் பிள்ளையாய்
இணைந்துள்ளோம்
என்றென்றும் நினைவுகளில்
பிரியாது இருப்போம்

செ.மிதுஷா

### அநாதையானேன் அம்மா

சின்னஞ்சிறு வயதினிலே
அநாதையாகினேன் அம்மா
என் உறவுகளே
அநாதை சிறார்கள்தான் அம்மா
அவர்களே எனக்கு
உதவி அம்மா

ச,புவித்ரா
சாவகச்சேரி

### நாளைய விடியல்கள்

தன் தாகத்தைகூட
பொருட்படுத்தாமல்
பிறர் தாகம் தீர்க்கும்
உத்தமியே!
சாதிமத பேதம் பார்க்கும்
இவ்வுலகில்
அதனையும் தாண்டிய
உன் செயல்
என்னை மெய்குளிர
வைக்கின்றது
இந்நாட்டின் நாளை
பிரஜைகள்
நீங்கள் என்பதே
என் நம்பிக்கை

ம.அ.மரிய ஜெனிற்றா
சாவகச்சேரி

### பாராட்டுகிறோம்

சின்னஞ் சிறுவர்கள்
ஒன்றாய் கூடி நீங்கள்
ஒருவருக்கு ஒருவர் உதவிடும்
உங்கள் பண்பினை நாங்கள்
பாராட்டுகின்றோம்

யாழ்ப்பாணம்

### ஒன்றிணைவோம்

உருவில் சிறியராய்
குணத்தில் பெரியராய்
பிறப்பினால் பல இனமாய்
உறவினால் ஓரினமாய்
அன்புடன் நாம்
ஒற்றுமையுடன்
கைகொடுத்து

சிவனுசன்

### அநாதை அல்ல

போரில் ஓர் அநாதை
பெற்றதாயின் பேரில் ஓர் அநாதை
இதில் எவ்வகையானாலும்
தம் பசி போக்க ஒற்றுமை காக்கும்
இச்சிறார்கள் அநாதை அல்ல

செ.வர்மினி
மந்துவில்

### பகிர்ந்துண்ணும் பண்பு

பிஞ்சு மழலைகளே!
சிறு வயதில் உங்களுக்கு
பகிர்ந்துண்ணும் பண்பை
யார்? சொல்லி தந்தார்கள்
எங்களுக்கும்
சொல்லித் தாருங்கள்
அன்பு உள்ளங்களே

ஆ.உசாந்தினி
சாவகச்சேரி

### பாராட்டுக்கள்

பாலகர்களே!
பாலக வயதிலும்
பங்கிடும் பண்பு
வரவேற்கத்தக்கது

வி.நிவேதா
யாழ்ப்பாணம்

### நீ மட்டுமே

எனக்கென்ற உறவுகள் எத்தனையோ
என்னைச் சுற்றி வட்டமிட்டன
இப்பூமியிலே
சொந்தமென்று சொல்லி அத்தனையும்
இன்று அலைகடலோடு அடித்துச்
சொல்லப்பட்டுவிட்டதோ அல்லது
அணுகுண்டு வீச்சிலே அடியற்ற மரமாகி
போய்விட்டதோ தெரியவில்லை
இப்போது இருப்பது நீ மட்டுமே
உன்னை என் உயிர் பிரியும் வரை
சுமையாக அன்று சுமக்கிறேன்
உறவென்று சொல்லி!

எஸ்.பாஸ்கரன்
சண்டிலிப்பாய்

### புரியாத புதிர்

பார்த்ததும் பரவசமூட்டும்
பச்சிளம் பாலகரின் இந்தப்
பகிர்ந்துண்ணும் பண்பு
படித்துப் பட்டங்கள்
பல பெற்ற மாந்தருக்கும்
புரியாத புதிர் அன்றோ!

சி.சியாமளா
நெல்லியடி

# சங்குநாதம் மௌனத்தின் தேடல் -159



### அன்பு வாசகர்களே !

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.



எனும் முகவரிக்கு 20.06.2013 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “எனது கேள்விகளுக்கு சித்தர் அளித்த பதில்கள்”




## ஆன்மீகம் 34

### அன்னை சித்தர் இராஜ்குமார் குருஜி

சித்தர்:-நீ சொல்வதை அவன் நிச்சயம் கேட்பான். அன்னதானம் செய்து அவன் ஆனந்தம் பெறுவான். இதை நீயே நாளடைவில் அனுபவத்தில் காண்பாய்! நீ சாதாரண மனிதனல்ல. அன்னதானத்தை அதன் பெருமையைக் கூறி அவர்களை நல்வழிப்படுத்தவே நீ பிறந்து இருக்கிறாய். அதோடு என் வ்ழியில் நடந்து நோயுற்றோருக்கு நோய் தீர்த்து அதன் வழி வரும் பொருள் கொண்டு பசிப்பிணி தீர்க்கும் தெய்வீகப்பணியாம் அன்னதானத்தை செய்வதே உன் பிறவியின் நோக்கம்! நீ இதை பல பிறவிகளில் தொடர்ந்து செய்துவரும் தேவ தூதன்- தெய்வபலம் விரைவில் உன்னை அடையும். ஆதலால் அந்தக் கவலையை விடு.

உன் மூலமாக தைலமும் பல்பொடியும் ஞானத்தை தேடிடும் ஞானிகளுக்கு சஞ்சீவிலேகியம் உலகம் முழுவதும் வந்து வாங்கி போட்டி போட்டுக்கொண்டு உன்மக்கள் 20 லட்சம் பேர்கள் உன்னைத்தேடி ஓடி வருவார்கள். நானும் பார்க்கத்தானே போகிறேன்.

இதைக் கேட்டவுடன் என் மனம் அமைதி அடைந்தது. இதற்கிடையே எங்கள் பயணம் வந்த வழியே திரும்பிக் கொண்டிருந்தது. எட்டெருமை பாழியெல்லாம் கடந்து வரும்போது ஏறத்திணறிய அந்த செங்குத்து மலைப் பகுதியை அடைந்தோம். மேலிருந்து கீழே நோக்கினால் தலைசுற்றுகிறது. முதலில் சித்தர்கள் ஏதோ மாடிப்படி இறங்குவது போல இறங்க துவங்கினர். அவர்களை தொடர்ந்து மற்றவர்களும் ஒருவர் பின் ஒருவராக இறங்கத் துவங்கினர். நா்னும் இறங்கத் துவங்கினேன். என் கால்கள் சமதரையில் பட்டபோது தான் மீண்டும் பிறந்ததுபோல் இருந்தது. என்னைத் தொடர்ந்து இறங்கிக் கொண்டிருந்த அந்தப் பதினெட்டு வயது இளைஞன் சம தளத்தில் கால் ஊன்றும்போது உடைந்த சிறு மலைப்பாறை ஒன்று அவன் தலையைத் தாக்கியது. அம்மா என அவன் அலறினான். தலைப் பகுதியிலிருந்து



[illegible] அன்னதானம்

ரத்தம் முகத்தில் வழிந்து கொண்டிருந்தது. அருகிலிருந்த நான் அவனைப் பிடித்துக் கொண்டேன்! மண்டையில் ஒருசிறு பிளவு அதன் வழியாக இரத்தம் குமுழியிட நான் இரத்தத்தை வெளியே விடாமல் கையால் அழுத்திப்பிடித்தும் நிற்கவில்லை. என் கைவிரல்களின் இடுக்கின் வழியாக வழிந்து வந்தது. சிறுவனைத் தொடர்ந்து அடுத்து இறங்கியவரின் கால்பட்டு, தான் அந்த நண்பர் அதிர்ச்சிக்குள்ளானார். இரத்தம் பீறிடுவதைக் கண்டதும் அவருக்கு அச்சம் பீறிட்டது! பையனுக்கு ஏதாவது ஏடாகூடமாகிவிட்டால் பழி தன் மீது சாருமே என்ற பீதியில் அவர் அந்தப்பையனை உடனே மருத்துவமனைக்கு கொண்டு செல்லவேண்டும் என்று அவசரப்பட்டார். நாங்கள் கூடி நிற்பதைக் கண்ட சித்தர் வந்து என்ன என்று கேட்டவாறு சிறுவனை பார்க்க குற்ற உணர்வால் குலை நடுங்கிப்போயிருந்த அந்த நண்பர் என் கால்பட்டு பாறைப் பகுதியில் ஒரு சிறுபகுதி பையன் தலையில் விழுந்துவிட்டது.

தொடரும்

---

# அடிமைக் கூண்டில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ்ப் பறவைகள்



பேராசிரியர் மின்னூர் சீனிவாசனின் தமிழ்- கொள்ளையழகு! உணர்ச்சிப் பெருக்குடன் கவிதைகளைச் சொல்கிற போது, அந்த மனிதரின் விழிகள் தெறித்து வெளியே விழுந்துவிடுமா என்ற அச்சத்துடனேயேதான் பார்த்துக் கொண்டிருப்பேன் அவரை!

மின்னூரரார் சொன்ன எத்தனையோ கவிதைகள் நினைவிருக்கிறது இன்னும்.

பானைச்சோற்றுக்குப் பதமாக ஒரே ஒரு பருக்கை... கூண்டைப்பார்.

என் கிளியென்றான்...
பேசும் பேசும்
கேள் என்றான்...
பறவை என்றால்
பறப்பது என்னும்
பாடம் முதலில்
படி என்றேன்!

இதுவரை போய்வந்த எந்த கோஷ்டியும், பாலியல் வன்முறைக்கு உள்ளான ஆயிரக்கணக்கான சகோதரிகளில் ஒரே ஒருவரைக்கூட நேரில் போய்ப் பார்த்தில்லை. விரட்டி விரட்டிக் கொல்லப்பட்ட ஒன்றரை லட்சம் பேரில் ஒரே ஒருவரின் குடும்பத்தைகூட நேரில் பார்த்துப் பேசியதில்லை. எங்கள் உறவுகளின் இரத்தத்தால் நனைந்த முள்ளிவாய்க்கால் மண்ணைப் பார்த்தே ஆகவேண்டும் என்கிற எண்ணம் இவர்களில் எவருக்கும் வந்ததில்லை. பாதுகாப்புச் செயலாளர் கோதபாய ராஜபக்சவுடன் இரவுவிருந்து, ஜனாதி பதி மஹிந்த ராஜபக்ஷவுடன் மதிய விருந்து- என்கிற டைட் ஷெட்யூலுக்கு இடையில், அற்பப்புழுக்களான தமிழர்களைப் பார்க்க எப்படி நேரம் இருக்கும்? ரவி சங்கர் பிரசாத் தலைமையில் இப்ஆோது போய்வந்த குழுவும் இதற்கு விதிவிலக்காக இருந்திருக்க முடியாது.

ரவிசங்கர் பிரசாத் கோஷ்டியாகட்டும் வேறெந்த கோஷ்டியாகட்டும், எதை அவர்களுக்கு காட்டவேண்டும் என்பதை பாதுகாப்புச செயலர் கோதபாயதான் முடிவெடுக்கின்றார். அதைத்தான் காட்டுகிறார், வடக்குமாகாண ஆளுநர் சந்திரசிறி. அந்த மாஜி போர்க்குற்றவாளி, “கூண்டைப் பார் என் கிளி,” என்கிறார், “பேசும் பேசும் கேள்,” என்கிறார். இங்கேயிருந்து போகிற யோக்கிய சிகாமணிகள், கிளிகளைப் பார்த்த கையோடு [illegible] பரிசுப் பொருளை வாங்கிக் கொண்டு பத்திரமாகத் திரும்பிவிடுகிறார்கள், “பறவை என்றால் பறப்பது,” என்னும் பாடத்தை இவர்களில் யாரும் அவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பதில்லை.

சிவில் சொசைட்டியைச் சேர்ந்தவர்கள் ரவிசங்கர் குழுவைச் சந்திப்பதற்கான கூட்டம், யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியதூதர் மகாலிங்கம் வீட்டில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்தக் கூட்டத்துக்கு இராணுவ- உளவுத்துறை அதிகாரிகளுக்கும் தெரிந்து, பலர் அதில் கலந்து கொள்வதைத் தவிர்த்துவிட்டனர்.

மகாலிங்கம் வீட்டில் நடந்த கூட்டத்தில் கலந்துகொண்ட சிவில் சொசைட்டியைச் சேர்ந்த ஓரிருவர், நடந்தது இனப்படுகொலை என்பதை அழுத்தம் திருத்தமாக எடுத்துச் சொல்ல, அதைக் கேட்டு கொதித்துப் போனாராம், இந்தியக் குழுவைச் சேர்ந்த ஒருவர்! இனப்படுகொலைக்காக கொதித்தார் - என்று நினைக்கிறீர்களா? இல்லை இப்படியெல்லாம்? பேசக்கூடாது என்று கண்டித்ததுடன், இனப்படுகொலையை நியாயப்படுத்தியும் பேசினாராம் அவர்.

அத்துடன் நில்லாது, “தமிழாகளும், முஸ்லிம்களும், சிங்களவர்களுடன் ஒற்றுமையாக வாழவேண்டும்,” என்றும் போதித்திருக்கிறார் அந்தப் போதிதர்மர்., “தமிழர்களும், முஸ்லிம்களும், சிங்களவர்களுக்கு அடிமைகளாய் வாழவேண்டும்,” என்கிற பௌத்த வெறியர்களின் பேராசைதான் ஒற்றுமைக்கு உலைவைத்தது என்பதையே அறியாத அவர், பிக்குகளின் பிட்சா பாத்திரங்களில் இரத்தம் வடிவதை எப்படிப் பார்த்திருக்க முடியும்? இனி இப்படிப்பட்டவர்களுடன் பேச எங்களை அழைக்காதீர்கள்- என்று கூறும் அளவுக்கு சிவில் சொசைட்டி உறுப்பினர்களைப் புண்படுத்தியிருக்கிறது அவரது பேச்சு. அவரையெல்லாம் ஈழத்துக்கு அனுப்பியவர் எவர்?

“இன்றைய கூட்டத்தின் மூலம், ஓர் உண்மையை நாங்கள் புரிந்துகொண்டோம். உண்மையிலேயே தமிழர்களுக்கு என்ன பிரச்சினை என்பதே இந்த விருந்தினர்களுக்கு தெரியவில்லை,” என்று கூறியிருக்கிறார்கள், சிவில் சொசைட்டி பிரதிநிதிகள்.

ஒருபுறம், இப்படியான, குழுக்கள் இந்தியாவிலிருந்து இலங்கைக்குப் போய், ராஜபக்ஷக்களின் விருந்தில் மூக்குப்பிடிக்கச் சாப்பிட்டுவிட்டு இந்தியா திரும்பியதும் ஏப்பம் விடுகின்றன. இன்னொருபுறம், 13-வது திருத்தமும் அதன்மூலம் கிடைக்கக்கூடிய அதிகாரப் பகிர்வும்தான் ஈழத்தமிழர்களுக்கு ஒரே தீர்வு- என்றும் இங்கேயிருந்து தீர்மானிக்கிறார்கள், நாச்சியப்பன்களும், நாராயணசாமிகளும்! இதையெல்லாம் தூக்கிச் சாப்பிடும் விதத்தில், இலங்கை தன்னைத்தானே விசாரித்துக் கொள்ளும்- என்று ஆண்டுதோறும் ஜெனிவாவில் போய்க் கொட்டாவி விடுகிறார்கள் அமெரிக்க பபூன்கள்.

இவையெல்லாமே நாடகங்கள். அல்லது ஒரே நாடகத்தில் வெவ்வேறு காட்சிகள். நடந்த இனப்படுகொலையை மூடி மறைப்பதற்கான திட்டமிட்ட முயற்சிகள். நடந்தது இனப்படுகொலையாக இருந்தால், வாராவாரம் அங்கே போய் வருகிற இந்தியக் குழுக்கள் அதைப் பற்றிப் பேசாமலிருப்பார்களா என்று சர்வதேசத்தையும் நம்பவைக்கிற மோசடிகள்.

இந்தக் கவிதையை இப்படிப் படிப்பதைவிட, சென்னை பெரம்பூரில் வசிக்கிற மின்னூர் சீனிவாசனைத் தேடிப்பிடித்து போய்க்கேட்டீர்களென்றால் மெய்சிலிர்த்துப் போய் விடுவீர்கள்.

சுதந்திரமாகப் பறந்து திரியவேண்டிய தமிழ்ப் பறவைகளை அடிமைக் கூண்டில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழீழப்பகுதிகளை நேரில் பார்த்துவர அடிக்கடி ஒருகோஷ்டி கொழும்புக்கு கிழம்புகிறது டெல்லியிலிருந்து. அங்கே அசாதாரணமாக ஒன்றும் நடந்து விடவில்லை- என்று காட்டுவதற்காக நடத்தப்படுகிற நாடகம் இது.

-புகழேந்தி. தங்கராஜ்-

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 ஆவது திருத்தத்தை வாசிக்காதவர்களே அதனை எதிர்க்கின்றனர் அமைச்சர்-ராஜித

(கொழும்பு)

**அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை வாசிக்காதவர்களும் அதை விளக்கிக் கொள்ள முடியாதவர்களும்தான் அதனை எதிர்க்கின்றனர். இவ்வாறு மீன்பிடித்துறை அமை ச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.1988 ஆம் ஆண்டில் நாடாளுமன்றத்தில் ஐந்தில் நான்கு பெரும்பான்மையுடன் 13 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டது.இப் போது 25 வருடங்களின் பின் இந்த திருத்தம் தொடர்பில் மக்களுக்கு வேறு தெரிவேதும் அப்போது இருக்கவில்லையென எப்படி அவர்கள் கூறமுடியும் எனவும் அமைச்சர் கேள்வி எழுப்பினார்.**

கடந்த புதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டம் உணர்ச்சி மேலிட்ட நிலையில் நடைபெற்றது. இதன்போது விமல் வீரவன்சவை ராஜித சேனாரத்ன அமைச்சர் காரசாரமாக தாக்கிக் கொண்டிருந்த வேளையில் விமல் வீரவன்ச ராஜித சேனாரத்னவை ப்றா குழுவின் அங்கத்தவர் என குறிப்பிட்டார். ப்றா என்பது ஜே.வி.பிக்கு எதிராக இயங்கிய ஓர் இரகசிய குழு தெற்குக்கு நல்லதாக உள்ள மாகாணசபை வடக்குக்கு தீயது என்பதன் பின்னால் என்ன நியாயம் உள்ளது என அமைச்சர் சேனாரத்ன கேட்டார்.

ஆனால் மாகாணசபைகள் தீயவை என அவர்கள் கூறுகின்றனர்.. இப்போது மாகாணசபைகள் தமக்கு நல்லவை எனவும் தமிழர்களுக்கு அவை தீயவை எனவும்அவர்கள் கூறுகின்றனர். இப்போது 13 ஆவது திருத்தத்துக்கு எதிராக மக்கள் அபிப்பிராயம் திரும்பியுள்ளது என அமைச்சர் குறிப்பிட்டார்.

எப்போதும் கூச்சலும் எதிர்ப்பும் இருந்து கொண்டேயிருக்கும். தமிழ் மொழியை உத்தியோகபூர்வ மொழியாக்கிய போதும் இப்படித்தான் எதிர்ப்பு இருந்தது. தமிழ்மொழிக்கு சம அந்தஸ்து வழங்குவதை ஏற்றுக்கொள்ள எமது மக்களுக்கு 40 வருடங்கள் எடுத்தன. ஊடகங்களும் இந்த கூச்சல்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகின்றன. எப்போதும் கூச்சல் இருந்து கொண்டே இருக்கும். நாம் பொறுத்திருந்து பார்ப்போம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

## வடக்குத் தேர்தலை சுயதீனமாக நடத்த முடியும் -தேர்தல் ஆணையாளர்

(கொழும்பு)

வடக்கில் வன்முறைச் சம்பவங்கள் இல்லாத காரணத்தினால் தேர்தல்களை சுயாதீனமாக நடத்த முடியும் என தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

அவர் எதிர்க்கட்சி பிரதிநிதிகளை சந்தித்த போதே இவ்வாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

கிழக்கு மாகாண சபைத்தேர்தலின் போது வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் ஈடுபடுத்தப் பட் டனர். வடக்கு தேர்தல் குறித்து அறிவிக்கப்பட்டு வேட்பு மனுக்கள் ரேரப்பட் டதன் பின்னரே வெளிநாட்டு கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்துவது குறித்து தீர்மானிக்க முடியும்.

வெளிநாட்டு கண்காணிப்பாளர்களைக் கடமையில் ஈடுபடுத்துவது தொடர்பில் அரசியல் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும்.

யார் என்ன சொன்னாலும் வட மாகாண சபைத் தேர்தலை சுயாதீனமானதும் நீதியானதுமான முறையில் நடத்த நடவடிக்கை எடுக்கப்படும் என தேர்தல் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## மருத்துவர்களின் வாகனங்களுக்கு புதிய உத்தியோகபூர்வ இலச்சினை

அரசாங்க வைத்தியசாலைகளில் மட்டுமல்லாது தனியார் வைத்தியசாலைகளிலும் கடமைபுரியும் சகல மருத்துவர்களுக்கும் அவர்களது வாகனங்களுக்கான புதிய உத்தியோகபூர்வ இலச்சினையொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அரசாங்க வைத்தியர்கள் சங்கம் சுகாதார அமைச்சருக்கு விடுத்த வேண்டுகோளையடுத்து அவர்களது வாகனங்களுக்கான புதிய உத்தியோகபூர்வ இலச்சினை வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் சுகாதார அமைச்சில் நடைபெற்றது.

முன்னர் வழங்கப்பட்டிருந்த உத்தியோகபூர்வ இலச்சினையை சிலர் டிப்பர் வாக னங்கள் ,முச்சக்கரவண்டி, வாடகைக்கு அமர்த்தப்பட்ட வாகனங்கள், வான்கள் போன்ற வற்றில் முறைகேடாக உபயோகித்தமை கண் டு பிடிக்கப்பட்டதையடுத்தே அரசாங்க வைத் தியர்கள் சங்கம் இந்த வேண்டுகோளை அமைச்சரிடம் முன்வைத்தது.

முறைகேடாக இலச்சினை பயன் படுத்தப்பட்டமைக்கான சான்றுகள் தம்மிடம் இருப்பதாகவும் அச்சங்கம் தெரிவித்துள்ளது. சொத்துக்கள் ஆதனங்கள் சட்டத்தின் கீழ் உத்தியோகபூர்வ புதிய இலச்சினை அரச வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக பிரகடன ப்படுத் தப்படும். இதேவேளை முன்பிருந்த உத்தியோகபூர்வ இலச்சினை முறைகேடாக உபயோகிக்கப்பட்டமை தொடர்பாக அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக் கு மாறு பொலிஸ்மா அதிபரின் ஊடாக சுகா தார அமைச்சர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (அ-2)

## உரிமை கோரப்படாத துவிச்சக்கர வண்டிகள்

யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் நேற்று யாழ். பொலிஸாரினால் உரிமை கோரப்படாத இரண்டு துவிச்சக்கரவண்டிகள் (இல.55930 282, 55931409) மன்றில் பாரப்படுத்தப் பட்டுள்ளதாக யாழ். நீதவான் நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

குறித்த துவிச்சக்கரவண்டிகளை உரிமை கோருபவர்கள் நீதிமன்றிற்கு அலுவலக நேரங்களில் சமுகமளித்து அவற்றை அடையாளம் காட்டி பெற்றுக் கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.

ஆறுமாத காலத்திற்குள் சான்றுகளைச் சமர்ப்பித்து துவிச்சக்கரவண்டிகளைப் பெற்றுக் கொள்ள தவறும் பட்சத்தில் அவை அரசுடைமையாக்கப்படும் என நீதிமன்றப் பதிவாளர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## சுற்றுப்புற சூழலுக்கு தீங்கற்ற வகையில் உணவு உற்பத்தி

### வடமாகாண விவசாய திணைக்கள பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

சுற்றுப்புறச் சூழலுக்கு தீங்கு ஏற்படுத்தாத உணவுற்பத்தி நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கான பல்வேறு செயற்றிட்டங்கள் வட மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக வடமாகாண விவசாயத் திணைக்களத்தின் பணிப்பாளர் எஸ்.சிவகுமார் தெரிவித்துள்ளார்.

வடமாகாண சபையின் ஏற்பாட்டில் நடைபெற்ற மரநடுகைத்திட்ட ஆரம்ப வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், இவ்வாண்டு யோசி உண்.சேமி என்ற கருப்பொருள் உலகம் பூராகவும் உச்சரிக்கப்படுகின்றது.

உணவுப் பாதுகாப்பை மேற்கொள்வதற்கு பல்வேறு வழிமுறைகளைக் கைக்கொள்ள வேண்டிய நிலையில் நாம் உள்ளோம். எமது மாகாணத்தில் மரக்கறியின் தேவை 87 ஆயிரம் மெற்றிக் தொன்னாகவும் பழத்தின் தேவை 56 ஆயிரம் மெற்றிக் தொன்னாகவும் காணப்படுகின்றது.

இருந்தாலும் 112 ஆயிரம் மெற்றித் தொ ன் மரக்கறியும் 120 ஆயிரம் மெற்றிக் தொன் பழவகையும் கிடைக்கின்றது. இவ்வாறு உற்பத்தி செய்யப்படுகின்ற உணவுப் பொருட்களில் ஏற்படும் இழப்புக்களைத் தடுப்பதற்காக விவசாயிகளுக்கு பிளாஸ்ரிக் கூடைகள் வழ்ங்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.


அத்துடன் மரக்கறிகளால் ஏற்படுகின்ற செலவீனத்தைக் குறைப்பதற்காகவும் போஷணை மட்டத்தை மேம்படுத்துவதற்காகவும் திவி நெகும திட்டத்தின் கீழ் 88 ஆயிரம் பயனா ளிகளுக்கு மரக்கறி விதைகள் வழங்கப்பட்டு உணவு உற்பத்தி ஊக்குவிக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

## வடமராட்சி கிழக்கிற்கு மூன்றரை கோடி ரூபா செலவில் மின்சாரம்

(கரவெட்டி)

வடமராட்சி கிழக்கு பிரதேசங்களான மருதங்கேணி வடக்கு, வெற்றிலைக் கேணி நாகர் கோவில் ஆகிய இடங்களுக்கு 31/2 கோடி ரூபா செலவில் மின்னிணைப்பு வேலைகளை ஆரம்பிக்கப்படவுள்ளன.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் வடமராட்சி கிழக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மேற்படி பிரதேசங்களை இனங்கண்டு இம் மாத இறுதியில் வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதில் மருதங்கேணி வடக்கு பிரதேசத்திற்கு 51 இலட்சத்து 38 ஆயிரத்து 783 ரூபாவும் வெற்றிலைக்கேணிப் பிரதேசத்திற்கு 2கோடியே ஒரு இலட்சத்து 62 ஆயிரம் ரூபாவும் நாகர் கோயில் பிர தேசத்திற்கு ஒரு கோடியே 74 இலட்சத்து 51 ஆயிரம் ரூபாவும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக ஈழ மக்கள் ஜன நாயகக் கட்சியின் வடமராட்சி அமைப்பாளர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார். (அ-24)




வேலணை மத்திய கல்லூரியில் தமிழ்ச் சங்கத்தின் முத்தமிழ் விழா நேற்று முன்தினம் கல்லூரியின் சேர் வைத்திலிங்கம் துரைசாமி ஞாபகார்த்த பிரதான மண்டபத்தில் செல்வன் சிந்துஷன் தலைமையில் இடம்பெற்றது. இதில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் கலந்து கொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் வாழ்ந்த சிங்களவர்களின் விபரங்கள் திரட்டப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் யுத்தத்திற்கு முன்னரான காலப்பகுதியில் வாழ்ந்த சிங்கள மக்கள் தொடர்பான விபரங்களை சேகரிக்கும் நடவடிக்கைகளில் யாழ். மாவட்ட செயலகம் ஈடுபட்டு வருவத்ாக தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். மாவட்டத்தில் கடந்த 1983 ஆம் ஆண்டுக்கு முன்னர் வாழ்ந்த சிங்கள மக்கள் தொடர்பான விபரங்களும் தற்போது வாழ்ந்து கொண்டிருக்கும் சிங்கள மக்கள் தொடர்பான விபரங்களுமே சேகரிக்கப்படுகின்றன.

இது தொடர்பான சுற்றுநிருபம் யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களினால் தங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக கிராம சேவையாளர்கள் தெரிவித்தனர்.

கிராம சேவையாளர் பிரிவு ரீதியாக தற்போது குறிப்பிட்ட விபரங்களைப் பெறுவதில் கிராம அலுவலர்கள் ஈடுபட்டுள்ளார்கள்.

ஆனாலும் கடந்த 1983 ஆம் ஆண்டுக்கு முன்னரான விபரங்களைப் பெறுவதில் தாம் பெரும் சிரமங்களுக்கு முகம்கொடுப்பதாகவும் முன்னர் வாழ்ந்த சிங்கள மக்கள் பற்றிய விபரங்கள் தெரிந்த முதியவர்கள் இப்பகுதிகளில் தற்பொழுது இல்லை என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அத்துடன் பெருமளவான கிராம அலுவலர்கள் கடந்த 1983 ஆம் ஆண்டிற்கு பின்னரே நியமனம் பெற்றவர்களாக இருப்பதால் முந்தைய தகவல்களைத் திரட்டுவதில் தாம் பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருவதாக யாழ். மாவட்டத்திலுள்ள கிராம சேவையாளர்கள் மேலும் தெரிவித்தனர். (அ-6)

# மைக்கல், ஞானம்ஸ் அணிகள் இறுதிப் போட்டிக்கு தெரிவு

(கரவெட்டி)

வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடத்திய 10 ஓவர் 11 பேர் கொண்ட கிரிக்கெட் இறுதிப் போட்டிக்கு மாலுசந்தி மைக்கல், கரவெட்டி ஞானம்ஸ் அணிகள் தெரிவிகியுள்ளன.

இப் போட்டியின் அரை இறுதி ஆட்டங்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றன.

இதில் முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் வல்வெட்டித்துறை கழுகு அணியை எதிர்த்து, மாலு சந்தி மைக்கல் அணி மோதியது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய கழுகு அணி 10 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 83 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் திவா, செந்தூரன் தலா 21, றமேஸ் 12 ஓட்டங்களை பெற்றனர்.

மைக்கல் அணியின் பந்து வீச்சின் சார்பில் வேணுகானன் 3, தர்ஷன், பவிகரன் தலா 2, கபிலன், பிரணவன் தலா ஒரு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மைக்கல் அணி 8.1 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. இதில் ரகுவரன் 36, அர்ச்சுதன் 15, தர்ஷன் 14 ஓட்டங்களை பெற்றனர்.

பந்துவீச்சில் செந்தூரன், முரளி தலா 2, றமேஸ், கோகுலன் தலா ஒரு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இரண்டாவது அரை இறுதி ஆட்டத்தில் வதிரி ஸ்ரீமுருகன் அணியை எதிர்த்து ஞானம்ஸ் அணி மோதியது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரீமுருகன் அணி 10 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 75 ஓட்டங்களை பெற்றது. இதில் தர்ஷன் 38, பவன் 15 ஓட்டங்களை பெற்றனர். பந்துவீச்சில் அனுசயந்தன் 2, குணதீபன், சேந்திரன் தலா ஒரு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஞானம்ஸ் அணி 8.5 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இதில் துவி 16, அனுசயந்தன் 15, சேந்திரன் 13 ஓட்டங்களை பெற்றனர். பந்து வீச்சில் உமேஸ், ராஜ் தலா 2, சஜீவன், தர்ஷன் தலா ஒரு விக்கெட்டுகளை வீழ்த்தினர். (அ-3-24)

# சர்வதேச இரத்த கொடையாளர் மாநாடு 2014 இல் இலங்கையில்

(கொழும்பு)

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் இரத்ததானம் வழங்கும் முதன்மை நாடாக இலங்கை திகழ்வதுடன் உலக இரத்த கொடையாளர் தின சர்வதேச மாநாடு 2014 இலங்கையில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் எம்.ஜீ.பி.சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற உலக இரத்த கொடையாளர் தின நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

இலங்கையின் இரத்த தேவையில் 96 வீதம் நன்கொடையாளர்களிடமிருந்தே கிடைப்பதாக அவர் குறிப்பிட்டார்.

உலக சுகாதார அமைப்பின் சர்வதேச இரத்த கொடையாளர் தின மாநாடு இவ்வாண்டு பிரான்சில் நடைபெறுகின்றது. அடுத்த வருட மாநாடு இலங்கையில் நடத்தப்படவுள்ளமை எமது சுகாதார அமைச்சின் சிறப்பான செயற்பாடுகளுக்கு கிடைத்த வெற்றியாகுமெனவும் பிரதிப் பணிப்பாளர் கூறியுள்ளார்.

இதேவேளை, நாடளாவிய ரீதியில் ஐயாயிரம் இரத்த நன்கொடையாளர் கலந்து கொண்ட மாபெரும் நிகழ்வு நேற்று முன்தினம் அலரி மாளிகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# பொதுநலவாய மாநாட்டின் ஊடாக மனிதவுரிமைகளை அறிய முடியும்

## *நியூசிலாந்து தெரிவிப்பு*

(கொழும்பு)

பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை இலங்கையில் நடத்துவதால் இலங்கை மனித உரிமை சார்ந்த விடயங்களில் எவ்வாறு செயற்பட்டுள்ளது என்பதை சர்வதேச நாடுகள் அறிந்துகொள்ள வாய்ப்பு ஏற்படுமென நியூசிலாந்து தெரிவித்துள்ளது.

கடந்த வாரம் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த நியூசிலாந்தின் வெளிவிவகார அமைச்சர் மரே மெக்கலி இதனைத் தெரிவித்துள்ளார். இம்மாநாட்டை இலங்கையில் நடத்த வேண்டாம் என்று பல்வேறு அமைப்புகள் வலியுறுத்துகின்றன.

கனடாவின் பிரதமரும் இந்த மாநாட்டை புறக்கணிக்கப் போவதாக தெரிவித்துள்ளனர்.

எனினும் இந்த மாநாட்டில் தாம் கலந்து கொள்ளவிருப்பதாக நியூசிலாந்தின் பிரதமர் ஜோன் கீ தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய மாநாட்டினை இலங்கை நடத்துவதால் இலங்கையின் உண்மையான நிலவரங்களை காணக்கூடியதாக இருக்கும் என்றும் மரே கெக்கலி தெரிவித்துள்ளார். (அ-2)

# யாழில் படையினருக்கான மனித உரிமை கருத்தரங்கு

## *17,18 ஆம் திகதிகளில் ஏற்பாடு*

(யாழ்ப்பாணம்)

யாழில் இராணுவத்தினர் மற்றும் பொலிஸாருக்கான மனித உரிமை தொடர்பான கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து இராணுவம் மற்றும் பொலிஸாருக்கும் இக்கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இக்கருத்தரங்கினை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய காரியாலயத்தினர் ஏற்பாடு செய்துள்ளதோடு கருத்தரங்கை நடத்துவதற்கு கொழும்பிலிருந்து மனித உரிமை ஆணைக்குழுவின் அதிகாரிகளும் வருகை தரவுள்ளனர்.

இக்கருத்தரங்கில் மனித உரிமையை எவ்வாறு கடைப்பிடித்தல், பேணுதல் என்பவை தொடர்பாக இராணுவத்தினருக்கும் பொலிஸாருக்கும் விளக்கமளிக்கப்படவுள்ளன.

இக்கருத்தரங்கு பொலிஸாருக்கு ஒருநாளிலும் படையினருக்குவேறொரு நாளிலும் என தனித்தனியே குறிப்பிட்ட இடங்களில் நடைபெறவுள்ளது.

மேலும் இக்கருத்தரங்கு நாளையும் நாளை மறுதினமும் நடைபெறும் என்பதை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜ் உறுதிப்படுத்தியுள்ளார்.

மனித உரிமை ஆணைக்குழு வின் ஆணையாளர் வெளிநாடு சென்றுள்ள நிலையில் இக்கருத்தரங்கில் பிரதம அதிதியாக யாரை அழைப்பது என இதுவரை (நேற்று) தீர்மானிக்கவில்லை என இணைப்பாளர் தெரிவித்தார். (செ-4)




- 1745-பிரித்தானியர் கேப் பிறெட்டன் தீவை பிரெஞ்சுப் படைகளிடம் இருந்து கைப்பற்றினர். இது தற்போது கனடாவின் ஒரு பகுதியாகும்.
- 1779 - ஸ்பெயின் பெரிய பிரித்தானியாமீது போரை அறிவித்தது. கிப்ரால்ட்டர் மீதான முற்றுகை ஆரம்பமானது.
- 1819 - குஜராத்தில் இடம்பெற்ற 8.0 ரிக்டர் அளவு நிலநடுக்கத்தில் 2 ஆயிரம் பேர் உயிரிழந்தனர்.
- 1897- ஹவாய்க் குடியரசை ஐக்கிய அமெரிக்காவுடன் இணைக்கும் உடன்பாடு எட்டப்பட்டது.
- 1940 - லித்துவேனியாவில் கம்யூனிச ஆட்சி உருவானது.
- 1963 -உலகின் முதலாவது பெண் விண்வெளி வீரர் ரஷ்யாவின் வலைன்ரீனா தெரஸ்கோவா வஸ்தோக் 6 விண்கலத்தில் பயணமானார்.
- 1976 - தென்னாபிரிக்காவில் சுவெட்டோவில் 15 ஆயிரம் கறுப்பின மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 566 மாணவர்கள் உயிரிழந்தனர்.
- 1964 - லியோனிட் பிரெஷ்னேவ் சோவியத் ஒன்றியத்தின் ஜனாதிபதியானார்.
- 1983 -யூரி அந்திரோப்பொவ் சோவியத் ஒன்றியத்தின் ஜனாதிபதியானார்..

பிறப்பு

- 1971 - டூபாக் ஷகூர், அமெரிக்காவின் ராப் இசைக் கலைஞர்

இறப்பு

- 1925 - சித்தரஞ்சன் தாஸ், இந்திய விடுதலைப் போராட்ட வீரர் (பி. 1870)

### வலைன்ரீனா தெரஸ்கோவா



வலைன்ரீனா விளாடிமீரொவ்னா தெரஸ்கோவா என்பவர் சோவியத் ஒன்றியத்தின் ஓய்வுபெற்ற விண்வெளி வீராங்கனையும் முதற் தடவையாக விண்வெளிக்குச் சென்ற பெண்ணும் ஆவார்.


1961 ஆம் ஆண்டு சோவியத் ரஷ்யாவைச் சேர்ந்த யூரிககாரின் மண்ணிலிருந்து விண்ணுக்குச் சென்ற முதல் மனிதன் என்ற பெருமையை பெற்றார். அவருக்கு அடுத்தபடியாக பெண் ஒருவரை விண்ணுக்கு அனுப்ப சோவியத் முடிவு செய்தது. இந்த அறிவிப்பை கேட்டதும் ஆயிரக்கணக்கான விண்ணப்பங்கள் குவிந்தன. இறுதிக்கட்டமாக நான்கு பெண்கள் மட்டுமே தேர்வு செய்யப்பட்டனர். மிகக்கடினமான பயிற்சிகளுக்குப் பின்னர் 25 வயதான வலைன்ரீனா தெரஸ்கோவா தேர்வு செய்யப்பட்டார்.

வோஸ்டாக்-6 என்ற விண்கலம் வலைன்ரீனாவை ஏற்றிக்கொண்டு 1963 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 16 ஆம் திகதி வானத்தை நோக்கிப் புறப்பட்டது. இவர் பூமிப்பந்தை சுற்றி 48 முறை அதாவது 70 மணிநேரம் 50 நிமிடம் விண்வெளியில் வலம் வந்தார். விண்வெளிக்குச் சென்ற முதல் பெண்மணி என்ற பட்டத்தையும், அதிக நேரம் விண்வெளியில் தங்கி இருந்த விண்வெளி வீரர் என்ற பெருமையையும் பெற்றார்.

ஜூன் மாதம் 19 ஆம் திகதி விண்கலம் பூமிநோக்கி பாய்ந்து வந்தபோது, தரையிரங்கும் முன்பே பரசூட்டில் இருந்து குதித்து, பாதுகாப்பாக இறங்கினார். 'ஹீரோ ஆஃப் சோவியத் யூனியன்' என்ற மெடலுடன் 'லெனின் விருது' மற்றும் பல விருதுகள் குவிந்தன. இந்த வெற்றி அத்தனையையும் கம்யூனிஸ்ட் கட்சிக்கு அர்ப்பணித்தார் வலைன்ரீனா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடன் பொறிக்குள்... சிக்கியுள்ள இலங்கை







2005 இல் ஆட்சிக்கு வந்த தற்போதைய அரசாங்கம், யுத்த வெற்றியை வைத்து எத்தனை காலத்திற்கு ஆட்சியை நடாத்தும் என்கிற கேள்வி பல முனைகளிலும் இருந்து எழுப்பப்படுகிறது.

புதிது புதிதாக முறிகளை (bond) விற்பதும், வெளிநாட்டு நிதிச்சந்தையில் கடன்வாங்குவதுமாக இலங்கை திறைசேரியின் பொருளியல் வாழ்வு கழிகிறது.

மஹிந்த ராஜபக்ஷவின் எட்டு ஆண்டுகால ஆட்சிக்காலத்தில் உள்நாட்டு, வெளிநாட்டு கடன்கள் அபிவிருத்தி என்கிற சந்தோசம் தரும் வார்த்தையால் திரையிடப்பட்டுள்ளன.

கடந்த அண்மையில், திறைசேரி வெளியிட்ட ஆண்டறிக்கையில் கடன் பற்றியதான பல புள்ளிவிபரங்கள் இருக்கின்றன.

2012 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதி வரையான வெளிநாட்டுக்கடன் 20.3 பில்லியன் டொலர். மொத்த உள்ளூர் உற்பத்தியின் மூன்றிலொரு பங்கு இதுவாகும்.

அதுமட்டுமல்லாது 10 வருடங்களில் பத்து சதவீதமாக அதிகரித்துள்ள வெளிநாட்டுக் கடனில் 13.6 பில்லியன் டொலர் (68%) சலுகை அடிப்படையிலமைந்த கடனாகவும் மிகுதி 6.7 பில்லியன்டொலர் (32%) சலுகைகளை உள்ளடக்காத கடனாகவும் அதேவேளை, அடுத்த 15 வருடங்களில் முழுமையாகச் செலுத்த வேண்டிய கடனாகவும் இது இருக்கிறது.

அபிவிருத்திப் பங்காளர்களும் கடன் வழங்கும் நிறுவனங்களும் இணைந்து 2012 இல் 2,789 மில்லியன் டொலரை திட்டங்களுக்கான கடனாகவும் 363 மில்லியன் டொலரை உதவித் தொகையாகவும் இலங்கைக்கு வழங்கியுள்ளன.

இதில் சீனா 33%, இந்தியா 22%, ஜப்பான் 17% மற்றும் உலக வங்கி 11% பங்களித்துள்ளன. குறிப்பாக இத்தொகையில் 2 ஆயிரத்து 226 மில்லியன் 71% பொருளாதார உட்கட்டுமான திட்டங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

திரைக்குப் பின்னால் ஒழிந்திருக்கும் தேசியக் கடன்கள் எவை என்பது குறித்து மக்களுக்கு மறைக்கப்பட்டாலும், மின்சாரக் கட்டண உயர்வு ஓரளவிற்காவது அதனைக் காட்டிக் கொடுத்து விடும்.

எட்டு வருடங்கிளிற்கு முன் 55 அரச திணைக்களங்கள் 32 பில்லியன் ரூபாவை இலாபமாகப் பெற்றன. இப்போது அவை, மொத்தமாக 107 பில்லியன் ரூபா நட்டத்தில் இயங்குகின்றன என்கிற தகவலை, நிதி திட்டமிடல் அமைச்சின் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

அரச வங்கிகளில் இருந்து பெறும் கடன்களில் பெரிதும் தங்கியுள்ள இலங்கை மின்சாரசபையும், இலங்கை பெற்றோலியக் கூடடுத்தாபனமும் நாட்டில் [illegible] பொருளாதார நிலைமையை தோற்றுவிப்பதாக கணிப்பிடப்படுகிறது.

9.8 பில்லியன் ரூபாய்களை, 2005 இல் இலாபமீட்டிய பெற்றோலியக் கூட்டுத்தாபனம், 2012 இல் 89.6 பில்லியன் ரூபாய் நட்டம் என்கிறது. 6.8 பில்லியனில் இருந்து 61.1 பில்லியனாக நட்டத்தின் அளவு உயர்ந்து செல்லும் பரிதாப நிலையில் மின்சார சபை இருக்கிறது.

இதுபோல, இலங்கை போக்குவரத்துச் சபையின் நிதி நிலைமையும் சேடமிழுத்துக்கொண்டிருக்கிறது. 2005 இல் 1.1 பில்லியன் ரூபாவாக இருந்த நட்டக்கணக்கு 2012 இல் 4.66 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது.

ஜனதா தோட்ட அபிவிருத்தி சபை மற்றும் விவசாய காப்புறுதி சபை என்பவற்றின் இழப்பு வீதம் கடந்த 8 ஆண்டுகளில் அதிகரித்துச் செல்வதை காணலாம். மஹிந்த பேர்சி ராஜபக்ஷவின் வெள்ளை யானைகள் என்று தலைப்பிட்டு ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் அண்மையில் வெளிவந்த கட்டுரை, இது குறித்தான பல செய்திகளை சொல்கிறது.

வெள்ளையானைகளைக் கட்டி மேய்க்க முடியாமல் எவ்வாறு அரசு திண்டாடுகிறது என்பது குறித்து விரிவாகப் பார்க்கலாம்.

றுகுணு மகம்புரமஹிந்த ராஜபக்ஷ துறைமுகம் (அம்பாந்தோட்டை துறைமுகம்.) என்பதன் கட்டுமானப் பணி, ஜனவரி மாதம் 2008 இல் ஆரம்பமானது. சீன அரசின் எக்சிம் வங்கியானது, இந்த அபிவிருத்திப் பணிக்கான முழுத்தொகையினையும் 1.3 பில்லியன் டொலர் கடனாக வழங்க, சீன ஹாபர் எஞ்சினியரிங் கம்பனியும் சைநோ ஹைட்ரோ கூட்டுத்தாபனமும் இணைந்து நிர்மாணப்பணிகளை ஆரம்பித்தன.

துறைமுகத்தின் முதலாம் கட்டப் பணி பூர்த்தியானவுடன் 650 மில்லியன் டொலர் பெறுமதியான வெளிநாட்டு நேரடி முதலீடுகள் வந்து குவியுமென்று அரசு எதிர்பார்த்தது.

ஆனால், அதைவிட அதிகமான 700 மில்லியன் டொலர் முதலீட்டிற்கான உத்தரவாதங்களைத் தாம் பெற்றுள்ளோம் என்று நம்பிக்கை தெரிவிக்கும் இலங்கை துறைமுக அதிகார சபையின் தலைவர் கலாநிதி பிரியத்பந்து விக்ரம அவர்கள், சீன வங்கியிடமிருந்து வாங்கிய கடனிற்கான வட்டியும் தவணைப்பணமும், துறைமுக அதிகாரசபை பெறும் 5.3 பில்லியன் ரூபாய் (2012) இலாபத்தின் ஊடாகவே செலுத்தப்படுகிறது என்கிற உண்மையைச் சொல்வதில்லை.

கடந்த வருட அம்பாந்தோட்டை துறைமுக வருமானம், 500-600 மில்லியன் ரூபாவென, இலங்கை துறைமுக அதிகார சபையால் குறிக்கப்பட்ட இலக்கினை அடையமுடியவில்லை மிகக்குறைவான 132 மில்லியன் ரூபாவையே அச்சபை பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது. இருப்பினும் இந்த வருட இறுதிக்குள் 3.5 பில்லியன் ரூபாவை வருமானமாக எட்ட முடியுமென்று தலைவர் விக்கம நம்பிக்கை கொண்டுள்ளார்.

ஏற்னவே 200 மில்லியன் டொலர் முதலீடு செய்ய, இந்தியாவின் மிகப்பெரிய சீனி உற்பத்தி நிறுவனமான ஸ்ரீ ரேணுகா சுகர் லிமிட்டெட் முன்வந்திருப்பதாகக் கூறும் கலாநிதி விக்ரம், மேலதிகமாக ஒரு பில்லியன் டொலர் வெளிநாட்டு நேரடி முதலீடு ஹம்பாந்தோட்டைக்கு வருமென்கிறார்.

இந்தத் துறைமுக வெள்ளை யானை குறித்து பல சர்ச்சைகளும், சந்தேகங்களும் சர்வதேச முதலீட்டாளர்கள் மத்தியில் நிலவுவதை பரவலாகக் காணலாம்.

அத்துறைமுகத்தில் கப்பல்களை நிறுத்துவதற்கான காப்புறுதிகளை பெறுவதில், தடைகள் இருப்பதாக கப்பல் போக்குவரத்து நிறுவனங்கள் தெரிவிக்கின்றன. அத்தோடு துறைமுகம் குறித்தான தெளிவான வரைபடங்கள் இல்லையென்று சொல்லப்படுகின்றது.

இவைதவிர, துறைமுகத்தின் தலைவாசலில், அகற்றமுடியாத அளவிற்குப் பெரிய பாறை ஒன்று நந்திபோல் குந்தியிருப்பதாகவும், அதனை அகற்ற பல மில்லியன் டொலர்கள் செல வாகும் என்றும் அதனால், பாரிய கப்பல்கள் உள்நுழைய முடியாமல் இருப்பதாகவும் கூறப்படுகிறது. இதை அகற்றுவதற்கு செலவாகும் நிதியைக் கடனாகக் கொடுக்குமாறு சீனாவிடம் கேட்டும், சாதகமான பதில் கிடைக்கவில்லை என்கிற செய்தியும் உண்டு.

-இதயச்சந்திரன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படகுகள் கண்காணிப்பு செயன்முறை ஜனவரி முதல் நடைமுறைக்குவரும்

## நீரியல்வளத்துறை அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

**கடற்றொழிலாளர்களுக்கென அறிமுகப்படுத்தப்பட்டுள்ள காப்புறுதி திட்டத்தின் கீழ் காப்புறுதி செய்துகொள்ளாத மீனவர்கள் ஜனவரி முதல் கடற்றொழிலுக்கு செல்ல முடியாது என்ற நடைமுறை அமுல்படுத்தப்படும் என அமைச்சர் கலாநிதி ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.**

கடும் காற்றினால் பல மீனவர்கள் பலியானமை தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்றுமுன்தினம் தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

அனர்த்தங்கள் குறித்து மீனவர்களுக்கு முன்கூட்டியே எச்சரிக்கை விடுக்கவும் ஏனைய நாடுகளின் கடல் பரப்பினுள் நுழைவதைத் தடுக்கவும் 2014 ஜனவரி முதலாம் திகதி முதல் படகுகள் கண்காணிப்பு செயன்முறை (VMS-Vessel Moni toring System) ஒன்று நடை முறைப்படுத்தப்படும்.

காலநிலை முன்னெச்சரிக்கை விடும் முறையிலுள்ள தொழில்நுட்ப தவறினாலேயே மீனவர்கள் பலர் பலியாகினர். அது காலநிலை அவதான நிலையத்தின் தவறல்ல என்றும் அவர் தெரிவித்தார்.

மீனவர்களுக்கு 10 ஆயிரம் பாதுகாப்பு அங்கிகள் வழங்கப்பட்டுள்ள போதும், அவர்கள் அவற்றை பயன்படுத்துவதில் அக்கறைகட்டாதிருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஐரோப்பிய நாடுகளில் நவீனவள்ள முன்னெச்சரிக்கை முறை பின்பற்றப்படுகிறது. இதனூடாக மீனவர்களுக்கு முன்கூட்டி துல்லியமான எதிர்வுகூறல்கள் வழங்கப்படுகின்றன.

இந்தத் தொழில்நுட்பத்தை இலங்கையில் அறிமுகப்படுத்துவதற்காக செய்மதி நிறுவமொன்றுடன் ஒப்பந்தம் மேற்கொள்ளவுள்ளோம். இது தொடர்பாக எமது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு ஆராய்ந்து வருகிறது.

அமைச்சரவையின் அனுமதி கிடைத்ததும் துரிதமாக இந்த நவீன தொழில்நுட்ப முறையை இலங்கையில் அறிமுகம் செய்யவுள்ளோம். அதன் மூலம் தென் ஆசியாவில் வி.எம்.சி.முறையைப் பயன்படுத்திய முதல் நாடாக இலங்கை மாறும்.

இந்த செய்மதி சேவையை பெறுவதற்கு 4 மில்லியன் யூரோக்கள் செலவிடப்படும். இதற்கான கருவிகள் சகல ஆழ்கடல் படகுகளிலும் பொருத்தப்படும். இதற்கு 61/2 இலட்சம் ரூபாவை மீன்பிடி படகு உரிமையாளர்கள் செலவிட வேண்டும்.

இதற்காக குறைந்த வட்டியில் நீண்டகாலகடனுதவிதிட்டமொன்றை அறிமுகப்படுத்தவுள்ளோம்.

செய்மதியினூடாக படகுகளுக்கு 48 மணி நேரத்துக்கு முன் காலநிலை குறித்து முன்னெச்சரிக்கை வழங்கப்படும். இது தவிர வேறு நாட்டு கடல் எல்லைக்குள் படகுகள் செல்ல முற்பட்டால், அவற்றில் உள்ள இயந்திரத்தில் சிவப்பு சமிக்ஞை விளக்கு எரிந்து முன்னெச்சரிக்கை மணி அடிக்கும். கடலில் அதிக மீன்கள் உள்ள இடங்கள் குறித்தும் இந்த முறைமையின் கீழ் மீனவர்களுக்கு தகவல் வழங்கப்படும்.

இதேவேளை, சர்வதேச கடற்பரப்பில் மீன்பிடிப்பது தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு விதித்திருந்த தடையை நீக்கியுள்ளது.

இது இலங்கைக்குக் கிடைத்த பாரிய வெற்றியாகும் என கடற்றொழில் நீரியல்வள அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கூறிய அவர்,

இந்த விவகாரம் குறித்து நாம் ஐரோப்பிய பாராளுமன்றத்தில் விளக்கமளித்தோம். இதனடிப் படையில் பிரித்தானிய பாராளுமன்றம், ஐரோப்பிய ஒன்றியத்தில் இலங்கை அடைந்து வரும் முன்னேற்றம் குறித்து வரவேற்று அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

இதன்படி எம்கெதிரான மஞ்சள் அட்டை நீக்கப்பட்டுள்ளது. ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு எதிராக செயற்படுகையில் மீன்பிடி விடயத்தில் மாத்திரம் முதற்தடவையாக ஆதரவாக செயற்பட்டுள்ளது என்றார். (அ-2)

# சிறுவர் கழக செயலர் குழு தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சிறுவர் செயற்பாட்டுக் கழகத்தின் 2013-2014 ஆம் ஆண்டுக்கான கழக செயற்குழு தெரிவு செய்யப்பட்டது. கழகத்தின் காப்பாளராக கல்லூரி அதிபர் வீ.கணேசராஜா, பொறுப்பாசிரியராக ந.கு.மகிழ்ச்சிகரன் ஆகியோரின் வழிகாட்டலில் கழகம் செயற்படவுள்ளது.

புதிய நிர்வாக சபையில் கழகத்தின் தலைவராக ஓ.நிதூசன், செயலாளர் ம.சிவனுயன், பொருளாளராக பா.அம்பகன், உபதலைவர்களாக லோ.சுலக்சன், க.நிதுஸ்யன் ஆகியோரும் உப செயலாளர்களாக சி.சாரங்கன், சி.சிந்துசன் உட்பட்டவர்களும் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர்.

இவ்வாண்டுக்கான செயற்பாடுகள் பற்றிய திட்டமிடலும், சிறுவர் தினத்தை கொண்டாடுதல்,சிறுவர் தினத்தை முன்னிட்டு நடத்த வேண்டிய போட்டிகள் தொடர்பான திட்டமிடலும் இடம்பெற்றது.

பொறுப்பாசிரியர் ந.கு.மகிழ்ச்சிகரன் மாணவர்களுக்கு கருத்துரைகளை வழங்கியதுடன் நிர்வாகத் தெரிவுகளை வழிப்படுத்தினார்.

(அ-3-23)

# பிரிவினைவாதத்திற்கு வழிவிடும் வெள்ளை யானையே மாகாணசபை

(கொழும்பு)

மாகாண சபை என்பது பொதுத் தேர்தலில் தோல்வியடைந்து நாடாளுமன்றத்திற்கு செல்லமுடியாதவர்களை வைத்து கொள்ளும் நிறுவனம் எனவும், நாட்டின் நிர்வாகத்தில் சிக்கலை ஏற்படுத்தி, பிரிவினை வாதத்திற்கு வழியை ஏற்படுத்தும் வெள்ளை யானை எனவும் சிங்கள ராவய அமைப்பின் அக்மீமன தயாரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

தெஹிவளையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டபோதே அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

இவ்வாறான நிறுவனங்கள் நாட்டில் இயங்கும் போது, சில நேரங்களில் மத்திய அரசாங்கத்தினால் நிர்வாகத்தைக் கூட கட்டுப்படுத்த முடியாத நிலைமை ஏற்படும். இதனால் 13 ஆவது அரசியல் அமைப்புச் சட்டத்தை உடனடியாக இரத்துச் செய்ய வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

வடக்கு மாகாண சபைத் தேர்தல் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடத்தப்படுமானால் அதற்கு முன்னர், போருக்கு முன் வடக்கில் வாழ்ந்த 15 ஆயிரம் குடும்பங்கள் அங்கு மீள்குடியேற்றப்பட்டு, அவர்கள் வாக்காளர்களாக பதிவு செய்யப்பட வேண்டும்.

வாக்குரிமை இந்த மக்களுக்கு வழங்க அரசாங்கமும், தேர்தல் ஆணையாளரும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தயாரத்ன தேரர் கூறியுள்ளார். (அ-2)




மாகாண மட்டத்திலான கூடைப்பந்தாட்ட இறுதிப் போட்டி யாழ்.இந்துக் கல்லூரிக்கும் புனித. பத்திரிசியார் கல்லூரி அணிக்குமிடையில் நடைபெற்றது. இப்போட்டியில் 73:50 என்ற விகி தத்தில் பத்திரிசியார் கல்லூரி அணியை யாழ்.இந்து அணி வெற்றி கொண்டது. இப்போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் தேசிய ரீதியான போட்டியில் பங்குபற்றவுள்ள யாழ். இந்து கல்லூரி அணியினரை படத்தில் காணலாம். (படம் : மானிப்பாய் செய்தியாளர்)

# பிரிட்டன் கப்பலில் ஆஸி.சென்ற அகதிகள்

(கொழும்பு)

பிரிட்டன் கப்பல் ஒன்றின் மூலம் இலங்கையர்கள் அவுஸ்திரேலியாவில் தஞ்சமடைந்துள்ளனர்.

இலங்கைத் தமிழர் என சந்தேகிக்கப்படும் 78 பேரே இவ்வாறு அவுஸ்திரேலிய கொகோஸ் தீவுகளை சென்றடைந்துள்ளனர்.

படகு மூலம் சென்றவர்கள், படகில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாக பிரிட்டன் கப்பலின் உதவியைப் பெற்றுக்கொண்டுள்ளனர்.

பிரிட்டன் வர்த்தக கப்பல் ஒன்றே இவ்வாறு இலங்கை அகதிக் கோரிக்கையாளர்களுக்கு உதவியுள்ளது.

(அ-2)

# வெலிக்கடை சிறையில் திடீர் சோதனை; 12 கைத்தொலைபேசிகள் மீட்பு

(கொழும்பு)

கொழும்பு- வெலிக்கடை சிறைச்சாலையில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின் போது சிறைக் கைதிகள் வசம் இருந்த கைத்தொலைபேசிகள், போதைப் பொருட்கள் போன்றவை மீட்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் சந்திரரத்ன பல்லேகம தெரிவித்துள்ளார்.

கொலைச் சம்பவங்களுடன் தொடர்புடைய கைதிகள் உள்ள சிறை பகுதியில் இச்சோதனை மேற்கொள்ளப்பட்டதாக சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

இங்கு மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது, 12 கையடக்கத் தொலைபேசிகள், 18 சிம்கார்டுகள் மற்றும் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான போதைப் பொருட்கள் என்பன மீட்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

நீதிபதி சரத் அம்பேபிட்டி கொலை குற்றவாளியிடம் இருந்து இரண்டு கையடக்கத்தொலைபேசிகள் மீட்கப்பட்டதாகவும் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் கூறியுள்ளார். (அ-2)

# மனிதாபிமானம் நிறைந்த நாட்டை கட்டியெழுப்பியுள்ளோம்-ஜனாதிபதி

இரத்த ஆறு ஓடிய யுத்தத்துக்கு முற்றுப் புள்ளி வைத்து, மனிதாபிமானம் நிறைந்த நாட்டை நாம் கட்டியெழுப்பியுள்ளளோம் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற சுகாதார அமைச்சு ஏற்பாடு செய்திருந்த இரத்த நன்கொடையாளர் நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து கூறுகையில்,

சுய நலத்துக்கே முன்னுரிமையளித்து வரும் உலகில், பொது நலத்துக்காக செயற்படும் மக்கள் உள்ள நாடு இலங்கை என பெருமை கொள்ளமுடிகிறது எனவும் தெரிவித்தார்.

முன்னேற்றம் அடைந்து வரும் நாடுகளில் சிறந்த இரத்ததான சேவையை வழங்குவது இலங்கையே. இதனால்தான் அடுத்த வருடத்தில் உலக இரத்த நன்கொடையாளர் தின சர்வதேச மாநாட்டை இலங்கையில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. நாட்டின் இரத்த வங்கிக்கு மனித உயிர்களைப் பாதுகாப்பதற்காக 96 வீத இரத்தத்தை மக்களே தானமாக வழங்கியுள்ளனர். மக்கள் செய்த மகத்தான சேவை இது.

இந்நாட்டின் பிரஜைகள் என்ற வகையில் அவர்கள் தமது இரத்தத்தை தானமாக வழங்கியுள்ளனர். முப்பது வருடம் இந் நாட்டில் நிலவிய பயங்கரவாத யுத்தத்தின் போது இரத்தம் பெருக்கெடுத்தது. அச் சமயம் நாட்டுக்காகப் போராடியவர்களின் உயிர்களைப் பாதுகாப்பதற்காக எமது நாட்டு மக்கள் இரத்தத்தை தானமாக வழங்கினர்.

அகதி முகாம்கள் இப்போது இல்லை. மக்கள் சுயாதீனமாக இரத்த தானம் செய்யும் முகாம்களே இப்போதுள்ளன.

எந்த இனம், எந்த மதம், எந்த சமூகம் என்றாலும் சரி இரத்த தானம் செய்யும் போது உயிர்கள் வாழ்விக்கப்படுகின்றன. அவ்வாறு இரத்தத்தைப் பெற்று வாழ்பவர்கள் உங்களை எப்போதும் நன்றியுடன் நினைவு கூருவர்.


நாமும் நாட்டின் சார்பில் உங்களைக் கௌரவப்படுத்துகிறோம்.

பிறரது வாழ்வுக்காக தமது கண்கள், தலை, உடல் ,இரத்தத்தை தானம் செய்வது மனிதச் செயலன்றி தெய்வச் செயலாகும். நம்மில் பலர் நூறு தடவைக்கு மேல் இரத்த தானம் செய்தவர்கள்.

நாம் இரத்த ஆறு ஓடிய போராட்டங்கள் பற்றி கேள்விப்பட்டுள்ளோம். கடந்த காலங்களில் எந்தளவில் இரத்தம் ஓடியது என நாம் அறிவோம். அது இரத்தத்திற்கான போராட்டம் அல்ல. இரத்தத்தை தியாகம் செய்து மனிதத் தன்மையே உயர்ந்தது எனக் காட்டிய போராட்டம். அந்த போராட்டத்திலும் எமது நாடு வெற்றி பெற்றுள்ளது என்பதை நாம் பெருமையாகக் குறிப்பிட முடியும் எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (அ-2)

# ஆனி மாத இராசி பலன்கள்

## 15.06.2013-16.07.2013



## துலாம்

**சித்திரை 3,4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்**

### புத- சுக்ர யோகத்தோடு சேர்வதால் மலைபோல் வந்த துயர் பனிபோல் விலகும்

**ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நேரம்! சொந்தக்காரர்களுக்கு மத்தியில் சுகமாக வாழ வேண்டும் என்று விரும்பும் துலாம் இராசி நேயர்களே!**

ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது இராசிநாதன் சுக்ரன்- புதன்- சூரியனுடன் இணைந்து சஞ்சரிப்பதால் பொருளாதார நிலை உயரும். இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவீர்கள். விருப்பங்கள் நிறைவேறும். நல்ல திருப்பங்கள் உருவாகும்.

என்ன இருந்தாலும் எட்டாம் இடத்தில் செவ்வாயும், ஜென்மத்தில் சனியும் சஞ்சரிக்கும் பொழுது, உடல் நிலையில் ஒவ்வொரு நாளும் தொல்லைகள் வந்து கொண்டேயிருக்கும். எனவே, மருத்துவ செலவுகள் கூடலாம். வாய்ப்புகள் வாயில் கதவை தட்டினாலும், அதை உபயோகப்படுத்திக் கொள்ள உடல்நிலை இடம் தருமா? என்பது சந்தேகம் தான், பொதுவாக எட்டில் செவ்வாய் சஞ்சரிக்கும்பொழுது, வாகன பயணம் செய்யும் நேரங்களில் கூடுதல் கவனத்துடன் செல்ல வேண்டும்.

வாகன வகையில் விரயங்களும், பழுது செலவுகளும் அதிகரிக்கும். பணவரவு திருப்திகரமாக இருந்தாலும், மன நிம்மதி குறையும் விதத்திலேயே கிரகநிலைகளின் சஞ்சாரம் இருக்கிறது. குருவின் பார்வை உங்கள் ராசியில் பதிவதால், நெருக்கடி நிலையை கொஞ்சம் கொஞ்சமாக சமாளிப்பீர்கள்.

ராகு, கேதுக்களின் ஆதிக்கத்தில் அனைத்து கிரகங்களும் சிக்கியிருப்பதால், சர்ப்ப சாந்திகளை முறையாக செய்தால் ஏற்ற, இறக்கமான சூழ்நிலையில் இருந்து விடுபட இயலும். என்ன இருந்தாலும் புத சுக்ர யோகத்தோடும் மாதம் தொடங்குவதால் மலைபோல் வந்த துயர் பனிபோல் விலகும். சனிக்கிழமை தோறும் ஆஞ்சநேயர் வழிபாடும் செவ்வாய்க் கிழமை தோறும் முருகப்பெருமான் வழிபாடும் வெள்ளி தோறும் துர்க்கை வழிபாட்டையும் மேற்கொண்டால் துயரங்களிலிருந்து விடுபட இயலும்.

**கடக சுக்ரனின் சஞ்சாரம்!**

ஜூன் 23 ஆம் திகதி கடக இராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப்போகிறார். இராசிநாதன் பத்தில் சஞ்சரிக்கும்பொழுது தொழில் வளர்ச்சி மேலோங்கும். தொகை கேட்ட இடத்திலிருந்து கிடைக்கும். புதிய தொழில் தொடங்கும் சிந்தனைகள் மேலோங்கினாலும் சுப ஜாதகத்தை ஒருமுறை புரட்சிப்பார்த்து திசா, புத்தி வலுவாக இருந்தால் மட்டுமே தொடங்குவது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு விருப்ப ஓய்வு பெறும் எண்ணம் மேலோங்கும். வேலையிலேயே நீடிப்பது தான் நன்மை தரும்.

**மிதுனச் செவ்வாயின் சஞ்சாரம்!**

ஜூலை 4 ஆம் திகதி மிதுன இராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப்போகிறார். இனி மருத்துவ செலவுகள் குறையும். ஆரோக்கியத் சீராகும். ஒப்பற்ற வாழ்க்கைக்கு உறுதுணையாக இருந்த சகோதர்கள் விலகி சென்று விட்டார்களே என்ற கவலை இனி அகலும். விலகி சென்று சகோதரர்கள் விரும்பி வந்து சேருவர். குடும்பத்தில் சுப காரிய நிகழ்வுகள் நடைபெறும்.

**சனியில் வக்ர நிவர்த்திக்காலம்!**

ஜூலை 4 ஆம் திகதி சனி வக்ர நிவர்த்தியாகிறார். எனவே, சுபச் செலவுகள் அதிகரிக்கும். குடும்பத்தில் நீண்ட நாட்களாக நடைபெறாத சில மங்கல நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றும். இராகு பலத்தால் நூதன பொருட்சேர்க்கை உண்டு. விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். குழந்தைகளின் நலன்கருதி ஆபரணங்களை வாங்கும் எண்ணமும் மேலோங்கும். 9,12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் ஜூலை 7 ஆம் திகதி வக்ர நிவர்த்தியாவதால் தந்தை வழியில் இருந்த மனக்கசப்புகள் மாறும். பயணங்களால் பலன் கிடைக்கும்.

இம்மாதம் அம்பிக்கை வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். இன்பங்கள் வந்து சேரும்.

**பெண்களுக்கு சிறப்பு பலன்கள்**

இம்மாதம் ஆரோக்கியத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டிய மாதமாக அமைகிறது. அருகில் இருப்பவர்களை அனுசரித்து செல்வதன் மூலமே ஆதாயத்தை அடையலாம். குருபார்வை இருப்பதால் மனக்குழப்பம் அகலும் என்றாலும் ஜென்ம சனியின் ஆதிக்கத்தால் மீண்டும் மீண்டும் பிரச்சினைகள் தலைதூக்கலாம். நரம்பு எலும்பு சம்பந்தப்பட்ட பாதிப்புகள் ஏற்பட்டு அகலும். கணவன்- மனைவிக்குள் மாதத்தின் முற்பகுதியில் அனுசரித்து செல்வதன் மூலமே ஒற்றுமையை பலப்படுத்த இயலும். பிற்பகுதியில் குடும்ப நிலைமை சீராகும். கொடுக்கல்- வாங்கல்களில் ஏமாற்றத்தை சந்திக்காமலிருக்க ராகு- கேதுக்களை முறையாக வழிபட்டு வருவது நல்லது.

## சிவல்புரி சிங்காரம்



## விருச்சிகம்

**விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

### திட்டமிடாது செய்யும் காரியங்களால் விபரீத ராஜயோகம் ஏற்படலாம்

**வளர்ச்சிகூட வழிபாடு தேவை! எதிலும் சிந்தித்து செயற்பட்டு சிறப்புகள் காண்கின்ற விருச்சிக இராசிநேயர்களே!**

ஆனி மாதக்கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது இராசிநாதன் செவ்வாய் ஏழாம் இடத்தில் சஞ்சரித்து உங்கள் இராசியையே பார்க்கிறார். செவ்வாய் தன் வீட்டைத் தானே பார்ப்பதால் உடல் ஆரோக்கியம் சீராகும். உற்சாகம் உள்ளத்தில் குடி கொள்ளும் துணிவும் தன்னம்பிக்கையும் கூடும். குருவின் பார்வை இரண்டாம் இடத்தில் பதிவாகிறது. அது மட்டுமல்லாமல் பன்னிரெண்டாம் இடத்திலும் பதிவாகிறது.

எனவே, தேவைக்கேற்ற பணம் வந்து கொண்டே இருக்கும். சில எதிர்பாராத விரயங்களும் வந்து சேரலாம். என்ன இருந்தாலும் அஷ்டமத்து குருவின் ஆதிக்கம் இருக்கும்வரை மனநிம்மதிக் குறைவு ஏற்படத் தான் செய்யும். எனவே, விடாது செய்யும் குரு வழிபாட்டின் மூலம் வெற்றி வாய்ப்புகள் வீடு தேடிவரும்.

அஷ்டமாதிபதி புதனும் பன்னிரெண்டுக்கு அதிபதி சுக்ரனும் இணைந்து எட்டாமிடத்தில் சஞ்சரித்து மாதம் தொடங்குவதால் விபரீத ராஜயோக அடிப்படையில் சில செயல்கள் நிகழலாம். திட்டமிடாது செய்யும் காரியங்களில் வெற்றி காண்பீர்கள். திறமை மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து சில காரியங்களை முடித்துக்கொடுப்பர். பக்கபலமாக இருக்கும் நண்பர்களை அனுசரித்துச்செல்வதும் பகையை வளர்த்துக்கொள்ளாமல் பார்த்துக் கொள்வதும் உங்கள் புத்தி சாலித்தனமாகும்.

சந்திரபலம் நன்றாக இருக்கிறது. எனவே, புதிய ஒப்பந்தங்கள் வந்து கொண்டே இருக்கும். ஏழரைச்சனியின் ஆதிக்கம் நடைபெறுவதால் சுய ஜாதகத்தில் சனி யோகம் தரும் விதத்தில் இருந்தால் அவர்களுக்கு இக்காலம் பொற்காலமாக அமையும். வியாழக்கிழமை தோறும் குரு வழிபாட்டையும் சனிக்கிழமை தோறும் ஆஞ்சநேயர் வழிபாட்டையும் முறையாக மேற்கொள்வது நல்லது.

**கடகச் சுக்ரனின் சஞ்சாரம்!**

ஜூன் 23 ஆம் திகதி கடக இராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப்போகிறார். இதன்விளைவாக பயணங்கள் அதிகரிக்கும். புதிய வாகனம் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். பொன், பொருள் சேர்க்கை உருவாகும். திட்டமிட்ட காரியத்தைத் திட்டமிட்டபடியே செய்து முடிப்பீர்கள்.

பெண்வழியில் சுபச்செலவுகள் ஏற்படும். உல்லாசப் பயண்ங்களை குடும்பத்தினருடன் மேற்கொள்வீர்கள்.

**மிதுனச் செவ்வாயின் சஞ்சாரம்!**

ஜூலை 4 ஆம் திகதி மிதுன இராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப்போகிறார். அஷ்டமத்துச் செவ்வாய் உங்கள் இராசியைப் பொறுத்தவரை நன்மை செய்யும் என்றே சொல்ல வேண்டும். ஏனென்றால் ஆறாமிடத்துக்கு அதிபதியான செவ்வாய் எட்டில் சஞ்சரிக்கும் பொழுது விபரீத ராஜயோக அடிப்படையில் பலன்கள் வந்து சேரும். செவ்வாய் குருவோடு இணைவது யோகம்தான். குரு மங்கல யோகத்தின் விளைவாக இல்லத்தில் இதுவரை முடிவடையாத சுபகாரிய பேச்சுக்கள் இனி முடிவிற்கு வரும். வள்ளல்களின் ஒத்துழைப்பு அல்லது வங்கிகளின் ஒத்துழைப்பு கிடைத்து இல்லம் வாங்கி மகிழ்வீர்கள்.

**சனியின் வக்ர நிவர்த்திக் காலம்!**


ஜூலை 4 ஆம் திகதி சனி வக்ர நிவர்த்தியாகிறார். உச்சம்பெற்ற சனி வக்ர நிவர்த்தியாவதால் ஒரு சில நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரப்போகிறது. உங்கள் இராசிக்கு சகாய ஸ்தானம் மற்றும் சுகஸ்தானம் ஆகியவற்றுக்கு அதிபதியான சனி பலம் பெறப் போவதால் சுகங்களும் சந்தோஷங்களும் வந்து சேரும். உடன்பிறப்புகள் உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வர். பயணங்களால் பலனுண்டு. வீடு மாற்றம், இடமாற்றம், தொழில் மாற்றம் தொடர்பாக எடுத்த முயற்சி நினைக்கும் விதத்தில் அமையும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் உடன்பிறப்புகள் உதவிக் கரம் நீட்டும் மாதமாகவே அமையப்போகிறது. உறவினர்கள் வழியில் வரவேண்டிய தொகை வந்து சேரும். குடும்ப்தில் உள்ளவர்கள் உங்கள் குணமறிந்து நடந்துகொள்வர். பிள்ளைகளின் கல்வி-நலன்கருதி எடுத்த முயற்சிவெற்றி பெறும். உங்கள் பெயரிலேயே இடம், பூமி மற்றும் வாகனங்கள் வாங்கும் யோகம் ஏற்படும். கணவன், மனைவிக்குள் விட்டுக்கொடுத்துச்செல்வது நல்லது. அப்பொழுதுதான் ஒற்றுமை பலப்படும். சனியின் வக்ர நிவர்த்திக்குப் பின்னால் கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும். தங்கம், வெள்ளி போன்ற ஆபரணங்களை வாங்கி மகிழ்வீர்கள். சிவன் வழிபாடு சிறப்பினை வழங்கும். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவிர சிகிச்சைப் பிரிவில்....



கவிஞர் வாலி

காவியக் கவிஞர் என்று இலக்கிய உலகில் போற்றப்படும் கவிஞர் வாலி உடல் நலக் குறைவு காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தமிழ் திரையுலகில் கண்ணதாசனுக்குப் பின் கவிஞரென்றால் அது இவர்தான் என புகழப்படுபவர் வாலி.

வர்த்தக ரீதியிலான சினிமா பாடல்கள் மட்டுமல்ல, இலக்கியவாதிகள் அதிசயிக்கும் அளவுக்கு காவியங்கள் படைப்பதிலும் வாலி நிகரற்றவர்.

எந்த அரசியல்வாதியுடனும், இலக்கியவாதியுடனும், இசையமைப்பாளருடனும் சிக்கலில்லாத உறவைப் பேணுவதில் வாலி ஒரு சிறந்த உதாரணம்.

தன்னை வளர்த்து விட்டவர்கள், வாழ்க்கை தந்தவர்கள் அனைவரிடத்திலும் இன்று வரை நன்றி பாராட்டுவதில் வாலிக்கு இணையாக ஒருவரையும் சொல்ல முடியாது.

இதனால் திரையுலகில் அனைவருக்கும் இனியவராக வாலி திகழகிறார். காலையில் இளையராஜாவிடம் பாட்டெழுதும் அவர், மாலையில் ரஹ்மானுக்கும் பாட்டெழுதுவார். இருவருமே அவர் மீது அன்பைப் பொழிபவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சில ஆண்டுகளுக்கு முன் கவிஞர் வாலிக்கு இருதய அறுவைச் சிகிச்சை செய்து மறுபிறவி எடுத்து வந்தார். அவ்வப்போது உடல்நலக் குறைவால் அவதிப்பட்டு வந்த அவருக்கு, மூன்று தினங்களுக்கு முன் மூச்சுத் திணறல் ஏற்பட்டது.

உடனே அப்பல்லோ மருத்துவமனையில் அவர் சேர்க்கப்பட்டார். தீவிர சிகிச்சைப் பிரிவில் வைத்து அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. உடல் நிலையில் முன்னேற்றம் தெரிந்தாலும், அவர் இன்னும் பூரண குணமடையவில்லை என்று மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வாலியின் உடல் நிலை குறித்து கேள்விப்பட்டதும் திரையுலகினர் அதிர்ச்சி அடைந்தனர். அவர் நலம் பெற பலரும் பிரார்த்தனை செய்து வருகின்றனர்.

# பாதிக்கதையைக் கேட்டு இயக்குநரை மிரட்டிய சத்யராஜ்



பாதி கதையை கேட்டுவிட்டு நடிக்க மாட்டேன் என இயக்குநரை விரட்டியிருக்கிறார் சத்யராஜ்.

இயக்குநர் எம்.ராஜேஷிடம் உதவி இயக்குநராக பணிபுரிந்தவர் பொன் ராம். இவர் இயக்கும் படம் 'வருத்தப்படாத வாலிபர் சங்கம். இது பற்றி அவர் கூறுகையில்,

வின்னர் படத்தில் வடிவேலு வைத்து நடத்திய சங்கத்தின் பெயரைத்தான் இப்படத்துக்கு தலைப்பாக வைத்திருக்கிறோம். இதில் சிவ கார்த்திகேயன், சூரி நகைச்சுவையில் கலக்கி இருக்கின்றனர்.

கோபம், வருத்தம், ஜாலி, கிண்டல், கேலி கொண்ட ஒரு கதாபாத்திரத்தில் சத்யராஜ் நடிக்கிறார். குறிப்பிட்ட பாத்திரங்களை தேர்வு செய்து ஒப்புக்கொள்ளும் அவர், இதில் நடிப்பாரா என்ற சந்தேகத்துடன் கதை சொல்லச் சென்றேன். பாதி கதையை கேட்டவுடன், 'முதல்ல எந்திரிச்சி போங்க. இந்த பாத்திரத்தில் நடிக்கத்தான் எங்கிட்ட கத சொல்ல வந்தீங்களா?' என்று விரட்டினார். நான் பயத்தில் உறைந்துபோனேன். மீதி கதையை கேளுங்கள் என்றேன். அதை கேட்டபிறகு, 'இந்த பாத்திரத்தில் நான்தான் நடிப்பேன்' என்றுசொல்லி விட்டார்.

ஹீரோயின் ஸ்ரீதிவ்யா. தயாரிப்பு பி.மதன். வசனம் எம்.ராஜேஷ். இசை டி.இமான். ஒளிப்பதிவு பாலசுப்ரமணியம்.

## கமலின் வருத்தம்

விஸ்வரூபம் படத்தை இயக்கி வந்தபோது தன்னைப் பற்றிய தகவலை உடனுக்குடன் வெளியானபோது மகிழ்ச்சியடைந்த கமல், தற்போது கோபத்தின் உச்ச கட்டத்தில் காணப்படுகிறார். தற்போது விஸ்வரூபம் 2 மற்றும் அதற்கடுத்து தான் இயக்கப்போகும் படங்கள் பற்றிய தகவலை ஊடகங்கள் பரபரப்பாக வெளியிட்டு வருவதால் டென்சனாகி உள்ளாராம்.

குறிப்பாக, திருப்பதி பிரதர்ஸ்க்காக தான் இயக்கும் நகைச்சுவைப் படம் பற்றிய தகவலை லிங்குசாமியே அறிவித்து விட்டாராம். இந்நிலையில் இது எப்படி வெளியாகிறது என்று தனது உதவியாளர்களிடம் சாடுகிறாராம்.



## நடிகை மாதுரியின் கருணை

நடிகை மாதுரி தீட்சித் நாயகியாக நடிக்கும் "ஜலக் திக்லா ஜா" என்ற இந்தி திரைப்படத்தின் படப்பிடிப்பு மும்பையில் நடைபெற்று வருகிறது.

இப்படப்பிடிப்பின் பொழுது 7 நாய்க்குட்டிகள் மழையில் நனைந்து உயிருக்கு போராடிக் கொண்டிருந்தன. இதனை கண்ட மாதுரி தீட்சித் அவைகளின் மீது பரிதாபப்பட்டு படப்பிடிப்பை நிறுத்தினார்.

பின்பு தனது கணவர் மற்றும் இயக்குநர் சாஹில் சாப்ரியா ஆகியோரின் உதவியுடன் அந்த நாய்க்குட்டிகளை காப்பாற்றினார்.

இதனையடுத்து விலங்குகள் பாதுகாப்பு அமைப்பைச் சேர்ந்தவர்களுக்கு தகவல் கொடுத்து, அவர்கள் வரும் வரை காத்திருந்து பின் அவர்களிடத்தில் பத்திரமாக நாய்க்குட்டிகளை ஒப்படைத்தார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், விலங்குகளிடத்தில் அன்பு வேண்டும் இந்த மாதிரியான பாதுகாப்பு உதவிகள் செய்ய நாம் முன்வர வேண்டும் என்றார்.

## யுவனின் இசை அல்பத்தில் அப்துல்கலாம்


சிம்பு, தனுஷ் என்று இளம் நடிகர்கள் போட்டி போட்டு இசை அல்பங்கள் வெளியிடுகின்றனர்.

அந்த வரிசையில் இசையமைப்பாளர் யுவன் ஷங்கர் ராஜாவும் இசை அல்பம் வெளியிடும் வேலைகளில் தீவிரமாக களமிறங்கியுள்ளாராம்.

இந்த அல்பம் "எதிர்கால இந்தியா இளைஞர்களின் கையில்" என்ற கருத்தின் அடிப்படையில் உருவாகிறதாம்.

மேலும் இந்த அல்பத்தில் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமை நடிக்க வைத்தால் சிறப்பாக இருக்கும் என்று அவரிடம் கேட்டனராம்.

அவரும் ஓ.கே சொல்லிவிட, மிகுந்த சந்தோஷத்தில் இருக்கிறாராம் யுவன். மேலும் இந்த அல்பத்தை ரகுமானின் வந்தே மாதரம் போல் பிரபலபடுத்தவேண்டும் என்று முழுவீச்சில் இறங்கியுள்ளாராம் யுவன்.



## விஜய் சேதுபதியுடன் சினேகா



பீட்சா', 'சூது கவ்வும்' படங்களை தொடர்ந்து விஜய்சேதுபதி நடித்து வரும் படம் 'பண்ணையாரும் பத்மினியும்'.

இப்படத்தை மேஜிக் பாக்ஸ் ஃபிலிம்ஸ் பிறைவேட் லிமிடெட் நிறுவனம் சார்பில் எம்.ஆர். கணேஷ் தயாரிக்கிறார். இதில் ஜெயபிரகாஷ் பண்ணையராக நடிக்க, அவரது கார் சாரதியாக விஜய் சேதுபதி நடிக்கிறார். விறுவிறுப்பாக படப்பிடிப்பு நடந்து வரும் இப்படத்திற்கு ஜஸ்டின் பிரபாகரன் இசை அமைத்துள்ளார்.

கோகுல் பினாய் ஒளிப்பதிவு செய்து வருகிறார். எஸ்.யு.கண்ணன் இயக்கி வரும் இப்படத்தில் பண்ணையாரின் மகள் வேடத்தில் நடிப்பதற்காக நிறைய பேரை பரிசீலித்து வந்த நிலையில் இப்போது நடிகை சினேகா அந்த பாத்திரத்தில் நடித்து வருகிறார். விஜய் சேதுபதியுடன் சினேகா நடிக்கும் முதல் படம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

## ஒரே நேரத்தில் தனுசின் இரு படங்கள்



தனுஷ் நடிப்பில், பரத்பாலா இயக்கியுள்ள படம், 'மரியான்'. ஒஸ்கார் பிலிம்ஸ் தயாரித்துள்ள இந்தப் படத்தில் பார்வதி ஹீரோயின். ஏ.ஆர்.ரகுமான் இசை அமைத்துள்ளார். இந்த படம் எதிர்வரும் 21 ஆம் திகதி ரிலீஸ் ஆக இருக்கிறது. தனுஷ் இந்தியில் நடித்துள்ள படம், 'ராஞ்னா'. அவர் ஜோடியாக சோனம் கபூர் நடித்துள்ளார்.

ஆனந்த் எல்.ராய் இயக்கியுள்ள இந்த படம் தமிழில், 'அம்பிகாவதி' என்ற பெயரில் டப் ஆகிறது. இந்தப் படமும் எதிர்வரும் 21 ஆம் திகதி இந்தி, தமிழில் ரிலீஸ் ஆகிறது. ஒரே நாளில் தனுஷ் நடித்த இரண்டு படங்கள் வெளியாக இருப்பதால் பரபரப்பு ஏற்பட் டுள்ளது. 'அம்பிகாவதி' [illegible] 'மரியான்' ரிலீஸாகும் அதற்கும் சம்பந்தம் இல்லை' என்று கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று பி.செ. கிராமங்களில் தொடரும் திருட்டுக்கள்

## செய்வதறியாது மக்கள் திண்டாட்டம்

(முல்லைத்தீவு)

**முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவு கிராமங்கள் மற்றும் க்ரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவு களுக்கு உட்பட்ட கிராமங்களில் அண்மைக்காலமாக திருட்டு சம்பவங்கள் அதிகரித்துள்ளதாகவும் இது தொடர்பில் பொலிஸாருக்கு முறைப்பாடுகள் செய்தும் இதுவரை நடவடிக்கை எவையும் எடுக்கப்படவில்லை எனவும் அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.**

இத்திருட்டுச் சம்பவங்கள் குறிப்பாக புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கோம்பாவில், சிவநகர், புதுக்குடியிருப்பு மேற்கு ஆகிய கிராமங்களிலும் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கள்ளப்பாடு, வண்ணாங்குளம், முல்லைத்தீவு பட்டினம், செல்வபுரம், வட்டுவாகல், முள்ளியவளைபோன்ற கிராமங்களிலுமே அதிகரித்துக் காணப்படுகின்றன.

இதுவரையும் மேற்படி கிராமங்களில் 50 இற்கும் மேற்பட்ட திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதுடன் திருடர்கள் பகலில் வீடுகளில் ஆட்கள் இல்லாத தருணம் பார்த்து திருடுவது மட்டுமல்லாமல் இரவு வேளைகளில் 12 மணிக்கு பின்னர் வீட்டின் ஓட்டைப்பிரித்தும் முள்வேலிகளை வெட்டியும் வீடுகளுக்குள் புகுந்து நகைகள், பணம், பொருள் என்பவற்றை களவாடியும் செல்கின்றனர்.

அத்துடன் கரையோரப் பகுதிகளில் வாழ்கின்ற மீனவர்களின் மீன்பிடி உபகரணங்களையும் திருடிச்சென்றுள்ளனர்.

இத்திருட்டுச் சம்பவம் தொடர்பாக முல்லைத்தீவு முள்ளியவளை, புதுக்குடியிருப்பு ஆகிய பிரதேசங்களின் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்தும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அத்தோடு ஒவ்வொரு கிராமங்களுக்குமாக தெரிவு செய்யப்பட்டுள்ள சிவில் பாதுகாப்பு உறுப்பினர்களுக்கும் தகவல் கொடுக்கப்பட்டும் அவர்களும் அசமந்தப் போக்காகவுள்ளதாகவும் அப்பகுதி மக்கள் கவலைதெரிவித்துள்ளனர்.

எனவே, இத்திருட்டுச் சம்பவங்களை ஒழிப்பதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினர் உரிய நடவடிக்கையை எடுத்து தீர்வை பெற்றுத் தரவேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-267)

# இந்து மயானத்திற்கு அருகில் எரிபொருள் நிரப்பு நிலையம்

## மக்கள் கடும் விசனம்

(புதுக்குடியிருப்பு )

புதுக்குடியிருப்பு இந்து மயானத்திற்கு அருகாமையில் புதுக்குடியிருப்பு இராணுவத்தினர் எரிபொருள் நிரப்பு நிலையம் அமைக்கவுள்ளதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

சிவநகர், கோம்பாவில், இரணைப்பாலை, மந்துவில் , மல்லிகைத்தீவு, புதுக்குடியிருப்பு நகர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 15 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் மேற்குறித்து இந்து மயானத்தைப் பயன்படுத்துகின்றனர். மயானத்திற்கு அருகாமையில் எரிபொருள் நிரப்பு நிலையம் அமைக்கப்படவுள்ளதால் தீ பரவக்கூடிய அபாய நிலை உள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

அதேவேளை மயானத்தை வேறு இடத்தில் மாற்ற வேண்டிய நிலை உருவாகுமோ எனவும் அச்சம் தெரிவிக்கின்றனர். எனவே உரியவர்கள் இவ் விடயத்தில் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் வேண்டுகோள் ஒன்றை முன்வைத்துள்ளனர். (அ-3-267)

# வெலிஓயா பிரதேசத்திற்கு அஞ்சலகம் அமைக்குக

## *மக்கள் கோரிக்கை*


(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் வெலிஓயா பிரதேசத்திற்கு அஞ்சல் அலுவலகம் ஒன்றை அமைத்துத் தருமாறு அப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வெலிஓயா பிரதேசத்திற்கும் முல்லைத்தீவு மாவட்டத்திற்குமிடையிலான தூரம் 55.7 கிலோ மீற்றராகும். இப்பிரதேசத்தில் 3 ஆயிரத்து 336 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 189 பேர் மீள்குடியேற்றப்பட்டு வசித்து வருகின்றனர்.

இந்நிலையில், வெலி ஓயா பிரதேசத்திற்கென அஞ்சல் அலுவலகம் ஒன்று இல்லாமையால் அப்பகுதி மக்கள் முல்லைத்தீவு மாவட்டத்திற்குச் சென்றே தமது அவசர தேவைகளை பூர்த்தி செய்கின்றனர்.

எனவே, இப்பகுதி மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இப் பிரதேசத்தில் அஞ்சல் அலுவலகத்தை நிர்மாணிக்க ஆவன செய்யுமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(அ-3-267)



கிளிநொச்சி அம்பாள்குளம் விவேகானந்தா வித்தியாலய கட்டடத் தொகுதி திறப்பு விழா நேற்று முன்தினம் இடம்பெற்றது. புதிய கட்டடத்திற்கான திறப்பு விழா நினைவுக் கல்லை வடமாகாண கல்விப் பணிப்பாளர் எஸ். செல்வராசா திரை நீக்கம் செய்து வைப்பதை படத்தில் காணலாம்.

# வடமாகாண கிரிக்கெட்டில் வவு.தெற்கு வலயம் சம்பியன்

(பூந்தோட்டம்)

வடமாகாண கல்வித்திணைக்களம் வடமாகாண பாடசாலைகளுக்கிடையில் நடத்தும் விளையாட்டுப் போட்டிகளில் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் ஆண்கள் பிரிவில் வவுனியா தெற்கு வலயம் சம்பியனாகியுள்ளது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த வடமாகாண பிரதிக்கல்விப் பணிப்பாளர் கே. சத்தியபாலன் ஆண்கள் பிரிவின் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் வவுனியா தெற்கு வலயத்தை சேர்ந்த விபுலானந்தாக் கல்லூரி முதலாமிடத்தையும் அதே வலயத்தைச் சேர்ந்த அல்காமியா வித்தியாலயம் இரண்டாமிடத்தையும் மூன் றாமிடத்தை மன்னார் பியர் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையும் பெற்றுள்ளது என தெரிவித்தார்.

இதேவேளை, பெண்கள் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் முதலாமிடத்தை வலிகாமம் வலயத்தை சேர்ந்த விக்டோரியா கல்லூரியும் இரண்டாமிடத்தை வடமராட்சி வலயத்தை சேர்ந்த நெல்லியடி மத்திய மகா வித்தியாலயமும் மூன்றாமிடத்தை வவுனியா வடக்கு வலயத்தை சேர்ந்த ஓமந்தை மத்திய கல்லூரியும் பெற்றுள்ளது என தெரிவித்தார். (அ-3-266)

# வவு.சுத்தானந்தா இந்துவில் சேக்கிழார் விழா இன்று

(குருமன்காடு)

வவுனியா சேக்கிழார் மன்றத்தின் ஏற்பாட்டில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் சங்கத்தில் அருள்மொழி செல்வி பண்டிதை யோகா சோமசுந்தரம் தலைமையில் சேக்கிழார் விழா நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக மாவட்ட கலாசார உத்தியோகத்தர் நித்தியானந்தன், வேப்பங்குளம் இந்து அன்பக இயக்குநர் ஜெயராணி, சமூக சிரோன்மணி நா.சேனாதிராஜா, சைவ சிரோன்மணி வை.செ.தேவராசா, சமூக சஞ்சீவி சி.ஏ.இராமசாமி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் ஆசியுரையை நா.பிரபாகரக்குருக்கள் வழங்கவுள்ளார். சேக்கிழாரும் பெரிய புராணமும் என்ற தலைப்பில் நெளுக்குளம் கலைமகள் வித்தி. மாணவி சங்கீதாவும் தொண்டர் சீர் பரவுவார் என்ற தலைப்பில் றம்பைக்குள மகளிர் கல்லூரி மாணவி ஆரதியும் தொண்டர் பெருமை என்ற தலைப்பில் சுவேதிகாவும் உரையாற்றவுள்ளனர்.

சிறப்பு சொற்பொழிவாக மன்றுளாரடியார் என்ற தலைப்பில் காவியமாமணி கலாநிதி அகளங்கன் உரையாற்றவுள்ளார். சிறப்பு நிகழ்வாக ஓய்வுபெற்ற அதிபர் வித்தியாரத்தினம் சி.வையாபுரிநாதன் தலைமையில் கருத்தரங்கும் நடைபெறவுள்ளது.

சேக்கிழார் காட்டும் சமுதாயப்பணி என்ற தலைப்பில் சைவமணி செ.சண்முகரத்தினம், பக்தி மார்க்கம் என்ற தலைப்பில் ஜெசிதா ஆனந்தமூர்த்தி, இலக்கிய செல்நெறி என்ற தலைப்பில் இன்தமிழ் இனியன் எஸ்.எஸ்.வாசன், பெண்ணின்பெருமை என்ற தலைப்பில் புராண சிரோன்மணி கலா குமரப்பா ஆகியோர்நிகழ்த்தவுள்ளனர். கலை நிகழ்வாக சைவ பிரகாச மகளிர் கல்லூரி மாணவிகளின் நாட்டிய நாடகமும் இடம் பெறவுள்ளது. (அ-3-250)




# நியமனம் பெற்ற சில ஆசிரியர்கள் கடமையை பொறுப்பேற்கவில்லை

## *பெற்றோர் கவலை*

(மல்லாவி)

வன்னி மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நீக்கும் முகமாக கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், தகவல் தொழில்நுட்பம் ஆகிய பாடங்களுக்கு கடந்த 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பட்டதாரி ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

தெரிவு செய்யப்பட்ட 190 பேரில் மிகக் குறைவானவர்களே கடமையைப் பொறுப்பேற்றுள்ளதாகவும் மிகுதியானவர்கள் யாழ்ப்பாணத்தில் கடமையாற்ற முயற்சித்து வருவதாகவும் மேற்படி பாடசாலையில் ஏற்பட்ட ஆசிரியப் பற்றாக்குறையினால் பாதிக்கப்பட்டுள்ள மாணவர்களினது பெற்றோர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக தெரிய வருவதாவது,

மடு, வவுனியா வடக்கு, மன்னார், துணுக்காய், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய கல்வி வலயங்களில் உள்ள பாடசாலைகளில் மேற்படி பாடங்களில் ஏற்பட்டுள்ள ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்பும் நோக்கில் வடக்கு மாகாண கல்வி அமைச்சினால் கடந்த 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை 200 பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டன.

இவர்களில் 10 பேரை யாழ். மாவட்டங்களில் கடமையாற்றும் படியும் மிகுதி 190 பேரை ஆசிரியப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ள வன்னி மாவட்ட ப்பாடசாலைகளில் கடமையாற்றும் படியும் நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

இவர்கள் கடந்த திங்கட்கிழமை கடமை ஏற்க வேண்டுமென அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை வரை நியமனம் பெற்ற அனைத்து ஆசிரியர்களும் வருகை தரவில்லை எனத் தெரிய வருகின்றது.

அரசாங்கத்தால் தற்போது நடைமுறைப்படுத்தப் படும் ஆயிரம் பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தினூடாக புதிதாக பல பாடசாலைகளில் க.பொ.த. உயர் தரப் பிரிவில் கணிதம் , விஞ்ஞானம் ஆகிய பாடப் பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் பாடங்களுக்குரிய ஆசிரியர்கள் இன்றி மாணவர்கள் வகுப்பறைகளில் வீண் பொழுதை போக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

நாட்டில் இடம்பெற்ற போர் நடவடிக்கை காரணமாக கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களிலுள்ள மாணவர்களின் கல்வி மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது.

இப்பாடசாலை மாணவர்களின் கல்விக்காக ஆசிரியர்களை நியமிக்கும் போது நியமனத்தைப் பெறும் ஆசிரியர்கள், அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் தமக்கு வசதியான இடங்களில் இடமாற்றத்தைப் பெற்றுக் கொள்வதாக பாதிக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (அ-3-15)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சமூக ஒருமைப்பாட்டு வாரம் அனுஷ்டிக்க ஏற்பாடு- வாசு

(கொழும்பு)

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் ஏற்பாட்டில் ஜுலை 15ஆம் திகதி முதல் ஜுலை 21 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் சமூக ஒரு மைப்பாட்டு வாரம் அனுஷ்டிக்கப்படவுள் ளது.

சமூக ஒருமைப்பாட்டு வாரம் அனுஷ்டிப்பது தொடர்பாக அமைச்சர் வாசுதேவ நாணயக்கார முன்வைத்த அமைச்சரவைப் பத்திரத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நாட்டின் அனைத்துப் பாகங்களிலும் சமூகங்களுக்கிடையில் ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவது மற்றும் ஒருமைப்பாட்டுக்கான விழிப்புணர்வை ஏற்படுத்துவது தொடர்பான விசேட வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவு ள்ளன.

சமூக ஒருமைப்பாட்டு வாரத்தின் கீழ் இந்த செயற்றிட்டங்களை முன்னெடுக்க தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு நாட்டில் சமாதானம் ஏற்பட்டிருக்கும் நிலையில் சமூகங்களுக்கிடையில் நல்லிணக்கத்தையும் ஒருமைப்பாட்டையும் ஏற்படுத்தும் பல்வேறு வேலைத் திட்டங்களை அமைச்சு முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# நாட்டில் சட்டம் உரிய முறையில் செயற்படுத்தப்படுவதில்லை

## மல்கம் ரஞ்சித்

நாட்டின் சில இடங்களில் நடக்கும் தாக்குதல்கள், இடையூறுகள், அச்சுறுத்தல்கள் உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்களை தான் வன்மையாக கண்டிப்பதாகவும் இதற்கு காரணம் சிலர் சட்டத்தை தமது கையில் எடுத்து செயற்படுவது என கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

சில சம்பவங்களின் போது சட்டம் உரிய முறையில் செயற்படுத்தப்படுவதில்லை என தெரிவித்துள்ள வணக்கத்திற்குரிய கர்தினால் தீய எண்ணம், கோபம், குரோதம், சண்டித்தனம் ஆகியன தலைத்தூக்கியுள்ளதன் காரணமாக வன்முறைகள் அதிகரித்துள்ளதாக கூறியுள்ளார். மனிதர் தற்போது வெறும் பெயரளவிலேயே சமய சம்பிரதாயங்களை பின்பற்றி வருகிறார்கள் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# சிறை வாசத்திலிருந்து தப்பினார் ஆர்ஜெண்டீனா முன்னாள் ஜனாதிபதி

ஆயுதம் கடத்திய வழக்கில்ஆர்ஜெண்டீனா முன்னாள் ஜனாதிபதிக்கு 7ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. ஆர்ஜெண்டீனா முன்னாள் ஜனாதிபதி பதவி வகித்தவர் கார்லஸ்மெனெம் வயது (82).இவர் குரோஷியா மற்றும் ஈக்குவடோர் ஆகிய நாடுகளுக்கு சட்டவிரோதமாக ஆயுதம் கடத்தினார்.

கடந்த 1991 முதல் 1995ஆம் ஆண்டுக்குள் 7 கப்பல்கள் மற்றும் 3 விமானங்களில் 6 ஆயிரத்து 500 தொன் எடை ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்கள் கடத்தியுள்ளார். இது குறித்து ஜனாதிபதிக்கான நடுவர் மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிமன்றம் கார்லோசை குற்றவாளி என தீர்ப்பளித்தது.


அதைத் தொடர்ந்து அவருக்கு 7 ஆண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. இருந்தாலும் அவருக்கு உடனடியாக இந்தத் தண் டனையை வழங்க முடியாது. ஏனெனில், தற்போது அவர் செனட்டர் ஆக பதவி வகிக்கிறார். எனவே, தண்டனையில் இருந்து அவருக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. (அ-2)


**Studies in EU/Schengen Countries**

Applications are welcome for higher studies in European Universities in English Medium. Knowledge of English is essential. Guaranteed visa with work permit for eligible students.

Contact: 0776727014


# கண்ணீர் அஞ்சலி



ஒன்றில் ஒன்றாய்
ஊரோடு நின்றாய்
நன்மை தீமைகளில்
ஓடோடி தோள் தந்தாய்
உண்மை உழைப்பதை
உன்னில் நிலைநிறுத்தி
உயர்ந்தாய் - இன்று
ஏனோ எம்மைவிட்டு
ஓடோடிச் சென்றுவிட்டாய்?

## சரவணமுத்து பரம்சோதி

(உரிமையாளர்,
வெங்கடேஸ்வரா ஸ்ரோர்ஸ்)

இ.ச.பேரம்பலம்
இல.50, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-3652)

# அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய அழைப்பு



## ஸ்ரீமதி சுயந்தி கணேசமூர்த்தி

குவலயத்தில் 26.01.1961

சிவமயத்தில் 17.05.2013

இமைப்பொழுதும் எம் நெஞ்சில் நீங்கா அன்பின்
தவப்பொருளே! தாரமே! தாயே! தயாநிதியே!
நமைப் பெரிதும் தவிக்கவிட்டுச் சென்றனையே!
சிவனடியில் சாந்தியுறப் பிரார்த்திக்கின்றோம்!
ஓம் சாந்தி.

பேரன்புடையீர்!

17.05.2013 இல் நித்திய ஜோதியாகி எங்கள் குடும்பச்சுடர் திருமதி சுயந்தி கணேசமூர்த்தி அவர்களின் பிரிவால் நாம் பெருந்துயர் கொண்டிருந்த வேளை பல்வேறு வழிகளிலும் (நேரில் வந்தும், தொலைபேசி ஊடாகவும், தந்தி மூலமும், பத்திரிகை கண்ணீர் அஞ்சலி செய்தியூடாகவும், துண்டுப்பிரசுரங்கள், பதாகைகள் ஊடாகவும், மலர் வளையங்கள் வைத்தும், Email ஊடாகவும்) எமக்கு ஆறுதல் தெரிவித்த உங்கள் அன்பு மிகுந்த உள்ளத்து உணர்வுக்கு என்றும் நாம் நன்றிக்கடன்பட்டிருக்கிறோம். பெருந்திரளாக நீவிர் கூடி இறுதிக்கிரியைகளில் கலந்து ஆறுதல் அளித்தமையை எண்ணுகையில் எங்ஙனம் உங்கள் ஒவ்வொருவருக்கும் நன்றியும் அந்தியேட்டி அழைப்பும் தெரிவிப்பதெனப்புரியவில்லை. காலக்கோலத்தில் செய்வதறியாது நிற்பதனால் உங்கள் ஒவ்வொருவரையும் அன்பும் நன்றியும் நிறைந்த உள்ளக் கரங்களால் உங்கள் கரங்கள் உரிமை பூண்டு அழைக்கின்றோம். பெருமனம் கொண்டு இதனைத் தனிப்பட்ட அழைப்பாகக் கருதி வருகை தர வேண்டும் என்று இறைஞ்சுகிறோம்.

எங்கள் குடும்பத்து ஒளி விளக்கு திருமதி சுயந்தி கணேசமூர்த்தி அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 14.06.2013 கீரிமலை ஸ்ரீ நகுலேஸ்வரன் புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக் கிருத்தியம் சபிண்டீகரணக் கிரியைகள் 16.06.2013 அன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.30 மணிக்கு எங்கள் இல்லத்திலும் இவற்றைத் தொடர்ந்து இல. 1229 கே.கே.எஸ் வீதி, பூநாறி, மரத்தடி, யாழ்ப்பாணத்தில் உள்ள செல்வ மஹால் மண்டபத்தில் மு.ப 11.00 மணிக்கு ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் மதிய போசன நிகழ்வும் நடைபெறும். இவற்றில் தாங்களும் வருகை தந்து கலந்து கொள்ள வேண்டும் என்று நன்றியுணர்வுடனும் அன்புரிமையுடனும் அழைக்கின்றோம்.


இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு வருகை தருமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

இங்ஙனம்
நன்றி
திரு.த். கணேசமூர்த்தி (கணவர்)
மற்றும் பிள்ளைகள்
குடும்பத்தினர்.

இல.60, சேர்.பொன் இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-3583)

# கண்ணீர் அஞ்சலி



## சரவணமுத்து பரம்சோதி

(வெங்கடேஸ்வரா ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)

*13.06.2013* அன்று காலமான வெங்கடேஸ்வரா ஸ்ரோர்ஸ் உரிமையாளர் சரவணமுத்து பரம்சோதி அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி

**இ.ச.பே. நாகரத்தினம் அன் சண்ஸ்**
54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 3096

(சி-3653)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுத்தமான போசணைமிக்க பசுப்பால் உற்பத்தி

(நேற்றைய தொடர்ச்சி)

2. நோய் அறிகுறிகள் வெளிக்காட்டி நோய் பீடிப்பு

இங்கு பால் சுரப்பு இழையங்களில் பாதிப்பு ஏற்படுகின்றது. இதன்போது கீழ் கூறப்படும் அறிகுறிகளை அவதானிக்க முடியும்.

1. பால் மடி வீங்கிக் காணப்படும்.

2.கறவைப் பசுக்கள் வலி காரணமாக பால் கறக்க அனுமதிக்காது.

3. பால் மடியின் உஷ்ணம் அதிகரித்துக் காணப்படும்.

4.நோய்ப்பட்ட மடியின் பாலில் பின்வரும் மாற்றங்கள் காணப்படும்.

a) பால் நீர்த்தன்மையாக காணப்படும் அல்லது

b)பால் தடித்து கட்டிகள் கொண்டதாகக் காணப்படும்.

c) பால் குருதி கலந்து சிவப்பு நிறத்தின் சாயலைக் கொண்டிருக்கும்.


d) பாலின் நிறத்தில் வேறுபாடுகள் காணப்படும்.

இந்நோய் உருவாகுவதற்கு முக்கியமான காரணம் பண்ணைப் பராமரிப்பில் உள்ள குறைபாடுகள் ஆகும். சுத்தமான கொட்டகை, ஒழுங்கமைக்கப்பட்ட தூய்மையான வடிகாலமைப்பு, ஒழுங்கான முறையில் பால் கறத்தல் செயற்பாடுகள் என்பன இந்நோய் ஏற்படுவதை ஓரளவு தடுக்கின்றன.

நோய்த் தாக்கத்திற்குள்ளான பசுக்களில் உற்பத்தி செய்யப்படுகின்ற பாலின் அளவு குறைவடைகின்றது. நோய் வெளித் தெரியாது பீடித்திருப்பின் 10-15% பாலின் உற்பத்தி குறைவடையும். அத்தோடு பாலில் உள்ள போசணைக் கூறுகளின் அளவு குறைவடைந்து தரமற்ற பால் உருவாகின்றது. அத்தோடு பாலில் கிருமிகள் காணப்படுவதனால் நீண்ட காலம் வைத்திருக்க முடியாது. நிறமாற்றம் காரணமாக பாலினை விற்பனை செய்ய முடியாது முழுப்பாலினையும் அப்புறப்படுத்த வேண்டிய நிலை ஏற்படும். சில வேளைகளில் பால் மடி முற்று முழுதாகப் பழுதாகுவதனால் பால் உற்பத்தி முற்றாக தடைப்படுகின்ற சந்தர்ப்பமும் ஏற்படும்.

மடியழற்சியால் பாதிக்கப்பட்ட கறவைப் பசுக்களை ஏனைய பசுக்களிலிருந்து தனிமைப்படுத்தி பராமரிக்க வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் பாதிக்கப்பட்ட பசுவின் பாலை ஏனைய பாலுடன் கலந்து விடக் கூடாது. நோய் வாய்ப்பட்ட பசுவிலிருந்து பாலை இறுதியாக வேறு ஒரு பாத்திரத்தில் சேகரித்து அகற்றி விட வேண்டும்.

2. பால் கறக்கும் இடம், பால் கறப்பவர் மற்றும் பாத்திரங்களின் சுத்தம்.



பால் கறக்கும் இடம் மற்றும் பாலைக்கையாளும் அறைகள் திறந்த வெளியாக இல்லாமல் கூரை கொண்டதாக இருக்க வேண்டும். அத்தோடு துப்புரவானதாகவும் நல்ல காற்றோட்டம் உள்ளதாகவும் இலகுவில் தூய்மைப்படுத்தக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும். இதனால் மழை மற்றும் காற்றிலிருந்து வரும் தூசிகள், ஈ, கொசு போன்ற பூச்சிகள் மூலமாக பால் மாசுபடுவது பெருமளவில் தவிர்க்கப்படுகின்றது.

பால் கறக்கும் தொழுவம்/ கொட்டகை மற்றும் பாலைக் கையாளும் அறைகளில் கொங்கிறீட் தரை அமைப்பது அவற்றை எழுதில் சுத்தம் செய்ய ஏதுவாகும். பால் நிலத்தில் சிந்தியோ அல்லது தவறுதலாக ஊற்றப்பட்டோ இருப்பின் அவை பூரணமாக அகற்றப்பட வேண்டும். தொழுவங்கள் சிறந்த கழிவு நீர் வடிகால் அமைப்பைக் கொண்டிருக்க வேண்டியது மிகவும் முக்கியமானதாகும்.

கழிவு நீர் தேங்காமல் கழிவு நீர்த்தாங்கியை அடையுமாறு ஒவ்வொரு நாளும் துப்புரவு செய்ய வேண்டும். இதனால் கழிவு நீர்களில் இலகுவாக பெருகக் கூடிய பூச்சிகளின் மூலம் பரவும் நோய்களைத் தடுப்பது மட்டுமன்றி அவற்றின் மூலம் பால் பழுதடையாமலும் பேணிப் பாதுகாக்கலாம்.

பால் கறப்பவர் மற்றும் பண்ணையாளர்கள் நோய்ப்பாதிப்பற்றவர்களாக குறிப்பாக காசநோய் இன்றி சுகதேகியாக இருத்தல் வேண்டும்.

நோயினால் பாதிக்கப்பட்டோர் கறவைப் பசுக்களைக் கையாளவோ அல்லது பால் கறப்பதனையோ தவிர்க்க வேண்டும். அத்தோடு பால் பண்ணைகளில் வேலை செய்வோர் மற்றும் பால் கறப்பவர்கள் தனி நபர் சுகாதாரப் பழக்க வழக்கங்களை பின்பற்றுபவராக இருத்தல் வேண்டும்.

பால் எடுத்தலின் போது பயன்படுத்தப்படும் அனைத்துப் பாத்திரங்களும் தூய்மையானதாகவும் தொற்றுக்கள் அற்றதாகவும் இருத்தல் வேண்டும். பால் எடுத்தலுக்கு முன்பாகவும் பால் கறந்த பின்னரும் பயன்படுத்தப்படுகின்ற அனைத்துப் பாத்திரங்களும் சுத்தமான நீரினால் நன்கு கழுவிய பின்னர் நன்கு உலர்த்த வேண்டும். இங்கு தொற்று நீக்கிகள் பயன்படுத்தப்படும் போது மேலதிகமான பாதுகாப்பு ஏற்படுத்தப்படுகின்றது.

சூரிய ஒளியில் நன்கு காய வைக்க முடியும். ஒழுங்காக கழுவாத பாத்திரங்களில் தேங்கும் பால் மீதிகளில் நுண்ணுயிர்கள் இலகுவாக வளர்ச்சியடைந்து காணப்படும். அப்பாத்திரங்களில் மீண்டும் நாம் பால் சேகரிக்கும் போது அவை பாலை மிக விரைவாகப் பழுதடையச் செய்து விடுகின்றன.

சுத்தமான நீர்ப்பாவனையானது சுத்தமான பால் உற்பத்தியில் அதிகளவில் செல்வாக்குச் செலுத்துகின்ற ஒரு முக்கியமான காரணியாகும். பால் பாத்திரங்கள், பால் கறக்கும் இடம் மற்றும் பால் மடிகளைச் சுத்தம் செய்வதற்கு போதியளவு நீர் பயன்படுத்தப்படுகின்றது. பயன்படுத்தப்படுகின்ற நீரானது தூய்மையானதாகவும் தொற்றுகள் அற்றதாகவும் இருக்க வேண்டும். இல்லாது விடின் நீரில் காணப்படும் கிருமிகள் பாலினைச் சென்றடைந்து அவற்றைப் பழுதடையச் செய்வது மட்டுமன்றி பால் மூலம் மனிதனை அடைந்து அவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றது. நீரின் தரத்தை பரிசோதனை மூலம் அறிந்து கொண்டு அவற்றிற்குரிய மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

3.பால் கறந்த பின்னரான பாதுகாப்பு முறைகள்

பால் கறந்த பின்னர் அதனைக் கூடிய விரைவில் பாற்சாலைக்கு கொண்டு செல்லுதல் வேண்டும். அல்லது நுகர்வோரைச் சென்றடையக் கூடிய வகையில் ஒழுங்கு செய்தல் வேண்டும். பாதுகாப்பற்ற முறையில் வைத்திருக்கும் போது காலம் செல்லச் செல்ல நுண்ணுயிர்களின் பெருக்கம் அதிகரித்து பால் முழுவதனையும் விரைவாகப் பழுதடையச் செய்து விடுகின்றன.

விரைவில் விற்பனை செய்து கொள்ள முடியாது விடின் பாலினை குளிரூட்டியில் வைத்து குளிரூட்டம் செய்வதன் மூலம் பக்றீரியாக்களின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தி ஓரளவு கூடிய காலம்/ நேரம் பாதுகாக்க முடியும். இதன்மூலம் பாலின் தரம் குறைவடையாமல் விற்பனை செய்ய முடியும். பாலினை கொண்டு செல்லும் பாத்திரம் அகன்ற வாயுடையதாகவும் தவாளிப்புகள் குறைந்ததாகும் மூடியுடையதாகவும் இருத்தல் வேண்டும். இப்பாத்திரங்களிலிருந்து பாலை விரைவாக மாற்றவும் மற்றும் இலகுவாக சுத்தமாக கழுவி காய விடவும் முடியும். இதன் மூலம் பால் தேக்கமடைவதால் ஏற்படும் இடையூறுகளைத் தவிர்க்க முடியும்.

எளிமையான, ஆரோக்கியமான நடைமுறைகளை பால் உற்பத்தியாளர்கள் கையாள்வதன் மூலம் சுத்தமான, தரமான பால் நுகர் வோரை சென்றடையச் செய்ய முடியும். சுத்தமான , தரமான பாலினை உற்பத்தி செய்வதன் மூலம் பண்ணையாளர்கள் தங்களின் பொருளாதாரத்தின் தளம்பல் நிலையை இல்லாதொழிப்பதோடு கறவைப் பசுக்கள் மற்றும் நுகர்வோரின் ஆரோக்கியத்திலும் கணிசமான பங்களிப்பை வழங்க முடியும். (முற்றும்)

சுகந்தி வைரமுத்து,
கால்நடை புலனாய்வு
நிலையம்,
யாழ்ப்பாணம்.

# எம்மை ஏன் கைவிட்டீர்!

## பாதிக்கப்பட்ட தொண்டராசிரியர்கள் கேள்வி

(மல்லாவி)

வன்னி மாவட்ட பாடசாலைகளில் கடமையாற்றிய தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கப்படவுள்ள நிலையில் யுத்தம் நடைபெற்ற காலத்தில் இருந்து இன்று வரை கடமையாற்றிய பல தொண்டர் ஆசிரியர்கள் இறுதிப் பட்டியலில் தமது பெயர்கள் இடம்பெறவில்லை என கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக பாதிக்கப்பட்டவர்கள் பூரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தாவிற்கும் மற்றும் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் உட்பட துறைசார்ந்த அதிகாரிகளுக்கும் தமது நிலைப்பாடு தொடர்பான கடிதங்களை அனுப்பி வைத்துள்ளனர்.

வன்னி மாவட்ட பாடசாலைகளில் கடமையாற்றிய 539 தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்க ஜனாதிபதி அனுமதி வழங்கியுள்ள போதும் அதற்கான இறுதிப் பட்டியல் வலயக் கல்வி அலுவலகங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் நீண்ட காலமாக பல இடங்களுக்கு மத்தியில் கடமையாற்றிய பலர் இந்த இறுதிப் பட்டியலில் இடம்பெறவில்லை. மேலும் இப்பட்டியலில் சேவைக்காலம் குறைந்த சிலர் முன்னுரிமை படுத்தப்பட்டுள்ளதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது, வன்னியில் இடம்பெற்ற போர் நடவடிக்கையின் போது பல ஆயிரக்கணக்கான மாணவர்களின் கல்விநிலை ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக பாதிக்கப்பட்டிருந்த வேளையில் எந்தவித கொடுப்பனவுகளும் இன்றி சேவைநோக்குடன் இவர்கள் சேவையாற்றினர். இவர்களில் சிலர் இறுதி யுத்த காலத்தில் தமது அவயவங்களையும் குடும்ப உறவுகளையும் இழந்து நிர்க்கதியாகவும் உள்ளனர்.

இவர்களுக்கு நியமனத்தைப் பெற்றுக் கொடுப்பதில் டக்ளஸ் தேவானந்தா உட்பட பலர், அரசியல் வேறுபாடு மற்றும் கட்சி வேறுபாடுகளின்றி செயற்பட்டதன் காரணமாக 539 தொண்டராசிரியர் இந்நியமனத்தில் உள்வாங்கப்படவுள்ள நிலையில் இறுதிப்பட்டியலில் அவர்களில் பலர் உள்வாங்கப்படவில்லை.

இவ்வாறு உள்வாங்கப்படாது விடப்பட்டவர்களையும் அப்பட்டியலில் உள்வாங்க வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ-3-15)

# தமிழ்த்தின தேசியநிலை போட்டிகள் கொழும்பில்

(பூந்தோட்டம்)

அகில இலங்கை தமிழ் மொழித்தின தேசிய நிலைப் போட்டிகள் கொழும்பு றோயல் கல்லூரியில் இடம்பெறவுள்ளதாக வடமாகாண கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா தெரிவித்துள்ளார்.

ஜுலை மாதம் 6 ஆம் திகதி சனிக்கிழமை எழுத்தாக்க போட்டி, வாசிப்பு, பேச்சு, ஆக்கத்திறன் வெளிப்பாடு, இசை யும் அசைவும், முஸ்லிம் நிகழ்ச்சி, சிங்கள மாணவர்களுக்கான நிகழ்ச்சி என்பனவும், மறுநாள் ஞாயிற்றுக்கி ழமை பேச்சு, பாவோதல், இசை தனி, மேடை நாடகம், தமிழ் அறிவு வினா விடை, விவாதம், இசை குழு, தனி நடனம், நாட்டார் பாடல் என்பனவும்14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நாட்டிய நாட கம், இசை குழு, நடனம் குழு , நடனம் தனி, வில்லுப் பாட்டு என்பனவும் இடம்பெறவுள்ளன என தெரிவித்துள்ளதுடன் போட்டியில் பங்குபற்றும் மாணவர்கள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் பங்கு கொள்ளுமாறும் அவர் மேலும் கேட்டுள்ளார். (அ-3-266)

# உற்சவம் தொடர்பான கலந்துரையாடல்

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கின் வெற்றிலைக்கேணி உணவத்தை கண்ணகை அம்மன் ஆலயத்தின் வருடாந்த திருக்குளிர்ச்சி பொங்கல் உற்சவம் நாளை திங்கட்கிழமை விளக்கு வைத்தலுடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 7 நாட்கள் பூசைகள் இடம் பெற்று இறுதி நாள் பொங்கல் உற்சவமும் வழி வெட்டல் நிகழ்வும் இடம்பெறும்.

இது தொடர்பான கலந்துரையாடல் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் திருலிங்கநாதன் தலைமையில் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் ஆலய முன்றலில் இடம் பெறவுள்ளது.

எனவே, இக் கலந்துரையாடலுக்கு பக்தர்கள் அனைவரும் வருகை தருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

(அ-3-64)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணம் ஒரு மலர். மொழி அதன் மொட்டு. செயல் அதன் கனி.

-பிச்சர்

வலம்புரி

T.P : 021 567 1530

website : www.valampurii.lk


## ராஜித போன்ற உத்தமர்கள் இருக்கும் வரை அதர்மத்தை அழிக்க அவதார புருஷர்கள் பிறப்பர்

13ஆவது திருத்த சட்டமூலத்தில் கைவைக்க எவரையும் அனுமதிக்க மாட்டேன். அவ்வாறு யாரேனும் கைவைத்தால் எனது பதவியைத் துறந்தேனும் 13ஆவது திருத்த சட்டமூலத்தைப் பாதுகாப்பேன். இவ்வாறு அமைச்சர் ராஜித சேனாரத்ன கூறியுள்ளார்.

அமைச்சர் ராஜித சேனாரத்னவின் பெருந்தன்மைகளைப் பற்றி இவ்விடத்தில் பல தடவைகள் குறிப்பிட்டுள்ளோம்.

அமைச்சர் ராஜித ஒரு சிங்களவராக-அமைச்சராக இருந்த போதிலும் இந்த நாட்டில் இன ஒற்றுமை ஏற்பட வேண்டுமென்பதில் திட சங்கற்பம் பூண்டவர்.

வட பகுதியில் நடந்த யுத்த அழிவுகளை வியட்னாம் போர் அழிவுக்கு ஒப்பிட்டு, இந்த அழிவுகளால் நாடு எதைச் சாதித்தது எனக் கேள்வியும் எழுப்பியவர்.

அவர் எழுப்பிய கேள்வி, இலங்கையைச் சேர்ந்த-ஒட்டுமொத்த அழிவுச் சிந்தனையும் கொண்டவர்களை நோக்கியதாக இருந்தது.

இந்த நாட்டின் ஆட்சியாளர்கள் எந்தெந்த வழிகளில் தமிழ் மக்களை நசுக்க முடியுமோ! அந்தந்த வழிகளில் தங்கள் கோரப் பற்களை நீட்டி தமிழர்களின் உடல்களைக் குதறி அவர்களின் குருதியைக் குடிக்கிறார்கள் என்ற உண்மைய அமைச்சர் ராஜித நன்றாகவே உணர்ந்துள்ளார்.

அந்த உண்மைகளை உணர்ந்தவர்கள் பலராக இருந்த போதிலும் தங்கள் பதவி, இனம், மதம் என்ற வரட்டுக் கௌரவத்திற்காகவும் சுயநலத்திற்காகவும் அவை பற்றியும் இம்மியும் வாய்திறக்காமல் மௌனிகளாக இருக்கின்றனர்.

ஆனால், அமைச்சர் ராஜித அப்படியானவர் அல்ல. அவர் உண்மையை, யதார்த்தத்தை வெளிப்படையாகக் கூறுபவர்.

இப்போது கூட 13ஆவது திருத்தச் சட்ட மூலத்தை கந்தறுக்க பேரினவாதக் கூட்டம் கங்கணம் கட்டி நிற்கின்ற இந்த வேளையில் அமைச்சர் ராஜித சேனாரத்ன, துணிச்சலோடு நேர்மைத் திறன் கொண்டு எனது பதவியை தூக்கியெறிந்து விடுவேன் எனக் கடும் எச்சரிக்கையைச் செய்துள்ளார்.

இவரின் எச்சரிக்கையால் சிங்கள பேரினவாதிகள் பயம் கொள்வார்களா என்ற கேள்வி தேவையற்றது.

மாறாக அரசாங்கத்தில் இடம்பெற்றுள்ள ஒரு அமைச்சர் 13ஆவது திருத்த சட்டமூலத்தை கந்தறுக்கக் கூடாது என்று கூறுவதை உலக நாடுகள் நிச்சயம் அவதானிக்கும்.

அந்த அவதானிப்பு இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக நடக்கும் நிட்டூரத்தை உறுதி செய்யும்.

அமைச்சர் ராஜித போன்ற உத்தமர்கள் இருக்கும்வரை இந்த உலகில், மாரி பெய்யும்.

கதிரவன், காற்று, பூமகள், அக்கினி என்ற இயற்கை கடவுளர்கள் எங்கள் மீது கருணை கொள்வர். அவதார புருஷர்களை புருசோத்தமன் படைப்பான். இது நிச்சயம்.

## ஆனந்தசங்கரிக்கு "அமுத விழா"

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரியின் 80-வது பிறந்த தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைக் காரியாலயத்தின் கட்சி ஆதரவாளர்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அமுத விழா நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு நாச்சிமார் கோவிலடியில் அமைந்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைக் காரியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இதேவேளை இன்று முற்பகல் 9மணிக்கு கிளிநொச்சி தமிழர்விடுதலைக் கூட்டணியின் அலுவலகத்தில் பிறந்த நாள் கொண்டாடப்படவுள்ளதுடன் கல்வி நிலையம் ஒன்றும் திறந்து வைக்கப்படவுள்ளது. (அ-5)

## பேராசிரியர் பாலகிருஷ்ணனின் இழப்பு ஈடு செய்ய முடியாதது

### முன்னாள் துணைவேந்தர் சண்முகலிங்கன்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் பொருளியல் தலைவரும் கலைப் பீடாதிபதியும் வவுனியா வளாகத்தின் தலைவருமான பொருளியல் பேராசிரியர் என்.பாலகிருஷ்ணனின் இழப்பு ஈடுசெய்ய முடியாதது. இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் என்.சண்முகலிங்கன் தெரிவித்துள்ளார்.

பேராசிரியர் என்.பாலகிருஷ்ணனின் மறைவு குறித்த இரங்கல் செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,



பொருளியல் பேராசிரியர் என்.பாலகிருஷ்ணனின் திடீர் மறைவுச் செய்தியால் நெஞ்சில் எழும் துயரம் கனமானது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தொடக்க காலம் முதல் பல்வேறு வளர்ச்சி நிலைகளில் அவரது பங்கும்பணியும் முக்கியமானவை.


இவர் தமிழை அறிவியல் மொழியாக்கும் எங்கள் கால முயற்சிகளில் முன்னோடியாக விளங்கியவர்.

பொருளியல் தலைவராக, கலைப் பீடாதிபதியாக, வவுனியா வளாகத்தின் தலைவராக; நேர்மை, பக்குவம், வெளிப்படைத்தன்மை, நிர்வாகத்திறன் என்பவை தனித்துவமாக அமைந்திருந்தன.

எமக்கெல்லாம் வழிகாட்டியாக இயங்கிய பேராசிரியரின் இழப்பு ஈடுசெய்ய முடியாதது எனவும் அவர் தெரிவித்தார். (அ)

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை

### ஓம் சிவாய நமவெனத் துதிப்போம்



ஓம்சிவாய நமவெனத் துதிப்போம்
நாம்சிவ மென்றுநெஞ்சில் பதிப்போம்
வீம்பிடும்பை யகங்காரம் விடுவோம்
போம்பினை யென்றுசொல்லித் தடுப்போம்
ஐம்பொறி வழிசெல்லாமல் தடுப்போம்
ஐம்பூதம்நா மல்லவென்று தொடுப்போம்
வெம்பகை விளையாமல் மடுப்போம்
நம்பொருள் சிவமெனப் படிப்போம்

## பிறரின் குற்றங்களை மன்னித்து மறப்போம் கடவுளின் அன்பின் பொருட்டு ஏற்றுக்கொள்வோம்

பரிசேயராகிய சீமோன் வீட்டில் இயேசு விருந்து உண்பதற்கு வருகிறார். அப்போது அங்கே அழையாத ஒரு விருந்தினர் வருகிறார். அது ஒரு பெண். அப்பெண் எந்தவொரு வார்த்தை கூடப் பேசவில்லை. ஆனால் அவர் செய்த செயல்கள் அற்புதமானவை.

இக்காலத்தில் பரிசேயர்கள் விருந்து உண்பதற்கு ஒரு மரபுமுறையை வைத்திருந்தார்கள். விருந்தினர் ஒரு மேசை முன் அமர்ந்து தலையணையில் சாய்ந்த நிலையில் இடது முட்டுக்கையை ஊன்றிக்கொண்டு வலது கையால் உணவை எடுத்து உண்பர். அப்போது விருந்தினரின் கால்கள் மடக்கப்பட்ட நிலையில் அவர்களின் காலடிகள் பின்புறம் தெரியும்.

### பரமபிதா காட்டிய பாதை

இதனால்தான் அந்தப் பாவியான பெண் இயேசுவுக்குப் பின்னால் கால் மாட்டில் அழுதுகொண்டே நின்றார். தன் வாழ்க்கை பாழாகிப் போனதே என்னும் மனக்கவலையால் அவர் அழுதாரா? புதியதொரு வாழ்வைத் தொடங்கவேண்டும் எனத் தீர்மானித்து தன் தவறுகளை நினைத்து மனம் வருந்தி அழுதாரா? தெரியவில்லை.

ஆனால் அவர் தேடி வந்தது இயேசுவைத்தான். அவரைக் கண்டு கொள்கிறார். உணவருந்திக்கொண்டிருந்த இயேசுவின் காலடிகளின் அருகில் நின்று அழுததால் கண்ணீர்த்துளிகள் இயேசுவின் பாதங்களை நனைக்கின்றன. நனைந்த இயேசுவின் காலடிகளைத் தன் கூந்தலால் துடைக்கிறார். இயேசுவின் பாதங்களை முத்தமிடுகிறார். தன் கையிலிருந்த படிகச் சிமிழிலிருந்து நறுமணத் தைலத்தை எடுத்து இயேசுவின் காலடிகளில் தாரிசனையோடு பூசுகின்றார்.

இச்சம்பவம் உண்மையிலேயே வியப்புக்குரியதுதான். விருந்து நடக்கும் போது அங்கே நுழைவதற்கு அப்பெண்ணுக்கு அனுமதியிருக்கவில்லை. அதுவும் சட்ட நுணுக்கங்களைத் துல்லியமாகக் கடைப்பிடித்த பரிசேயர் ஒருவர் அன்று பாவியான பெண்ணை வீட்டில் ஏற்பது நினைத்துப் பார்க்க முடியாத ஒன்று.

மேலும் இறைவாக்கினர் என மக்களால் கருதப்பட்ட இயேசுவிடம் சென்று அவருடைய காலடிகளை அப்பெண் தொட்டார் என்பது நினைத்துக்கூட பார்க்கமுடியாத இன்னும் ஒரு பெரிய தவறு எல்லை மீறல் ஆகும்.

ஆனால் இயேசு அப்பெண்ணின் இதயத்தில் புதைந்து கிடந்த சிந்தனைகளை நன்கறிந்திருந்தார். அப்பெண்ணின் உள்ளத்தில் எழுந்த அன்பும் நம்பிக்கையும் இயேசுவுக்கு வெளிச்சமாக இருந்தன. எனவே இயேசு பாவியான அப்பெண்ணைப் போற்றிப்பேசுகின்றார். இயேசுவை வீட்டுக்கு அழைத்துவிட்டு அவருக்கு உரிய மரியாதை காட்டாத சீமோன் எதையெல்லாம் செய்யாது விட்டாரோ அதையெல்லாம் அப்பெண் இயேசுவுக்குச் செய்வதை நாம் இங்கு பார்க்கின்றோம்.

அதாவது வீட்டுக்குள் நுழைவதற்கு முன் காலடிகளைத் தன் கண்ணீரால் கழுவித் தன் தலைமுடியால் துடைக்கிறார். விருந்தினரை முத்தமிட்டு வரவேற்பது வழக்கம். ஆனால் அப்பெண்ணோ இயேசுவின் காலடிகளையே முத்தமிடுகிறார். விருந்தினரின் தலையில் எண்ணெய் பூச வேண்டும். ஆனால் அப்பெண்ணோ தன்னையே தாழ்த்திக் கொண்டு இயேசுவின் காலடிகளைத் தொட்டு அவற்றில் நறுமணத்தைலம் பூசுகிறார். இவ்வாறு அவர் தன் அன்பை வெளிப்படுத்துகிறார்.

இயேசு அப்பெண்ணின் அன்பையும் நம்பிக்கையையும் பாராட்டியதோடு அவருடைய பாவங்களையும் மன்னித்து அவருக்கு மீட்பையும் அமைதியையும் வாக்களிக்கின்றார்.

மனித இதயத்தில் பல ஏக்கங்கள் உண்டு பிறர் நம்மை ஏற்று மனிதராக நம்மை மதிக்கவேண்டும் என்பது அடிப்படையான ஏக்கம். ஏதாவது தவறுகள் நேர்ந்து விட்டால் அவற்றைப் பிறர் மன்னித்து விடவேண்டும் என்பதும் மனித எதிர்பார்ப்புக்களில் ஒன்று.



அதுபோலவே கடவுளுக்கு நாம் ஏற்புடையவர்களாக் இருக்கவேண்டும் என்பதும் நம் உள்ளத்தின் அடிப்படையான வேட்கை. நாமாகவே முயன்று நம்மைக்


ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்


கடவுளுக்கு ஏற்புடையவர்களாக மாற்ற இயலாது. ஏனென்றால் நாம் பாவத்தின் விளைவாகக் கடவுளிடமிருந்து பிரிந்து போய்விட்டோம். தவறிச் சென்ற நம்மை மீண்டும் கண்டுபிடித்து நம்மைத் தம்மோடு உறவுகொண்டாட அழைத்து அதைச் செயற்படுத்தும் சக்தி கடவுளுக்கு மட்டுமே உண்டு.

கடவுளிடமிருந்து நாம் பெறுகின்ற மன்னிப்பு என்னும் அருளைவிடப் பெரிய கொடை இல்லை.

மனித உறவுகளில் விரிசல்கள் ஏற்படுவது இயல்பு. மன்னித்து ஏற்கும் பண்பு இல்லாவிட்டால் அந்த விரிசல்கள் விரிந்து கொண்டே போகும். பிறரிடம்தான் குறைகள் எல்லாம் உள்ளன. நம்மிடம் யாதொரு குறையும் இல்லை என நாம் நினைத்தால் முறிந்த உறவுகள் ஒரு நாளும் சரியாகி விட இயலாது.

மாறாக நம்மை மன்னித்து ஏற்கின்ற கடவுளின் இரக்கத்தை நாம் அனுபவிக்கும்போது அதேமுறையில் பிறரின் குற்றங்களை மன்னித்து அவர்களையும் கடவுளின் அன்பின் பொருட்டு ஏற்றுக் கொள்வோம். அப்போது நம் உள்ளத்தில் அமைதி ஏற்படும். அன்பு இருக்கும் இடத்தில் மன்னிப்புக்கு இடம் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஐ.பி.எல். கிரிக்கெட் சூதாட்டப் புகாரில் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி வீரர் ஸ்ரீசாந்த் நேற்று முன்தினம் கொச்சி அருகே திருப்பணித்துறையில் உள்ள பகவதி அம்மன் ஆலயத்துக்கு குடும்பத்தினருடன் சென்று தரிசனம் செய்தார். அங்கு தனது எடைக்கு சமமான சுமார் 85 கிலோ கதலி வாழைப் பழத்தை நிறுவைத் தராசின் உதவியுடன் காணிக்கையாக வழங்கினார்.

# விடிவுவேண்டி பிரார்த்தனை

ஸ்ரீசாந்தின் நெருங்கிய நண்பரும் பின்னணிப் பாடகருமாகிய மதுபால கிருஸ்ணன் வீட்டிலிருந்து சபரி மலைக்குச் செல்வதற்காக நைவேத்தியப் பொருட்களுடன் ஆயத்தமாகின்றார் ஸ்ரீசாந்த்.

## பாக்.அணியில் மாற்றங்கள் வேண்டும் ; மிஸ்பா உல் ஹக்

பாகிஸ்தான் அணிக்கு அவ்வணியின் துடுப்பாட்டம் ஒரு பிரச்சினையாகக் காணப்படுவதாக அவ்வணியின் தலைவர் மிஸ்பா உல் ஹக் தெரிவித்துள்ளார். சம்பியன்ஸ் கிண்ணப் போட்டிகளிலிருந்து அவ்வணி வெளியேற்றப்பட்டுள்ள நிலையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இத்தொடரில் தான் பங்குபற்றிய இரண்டு போட்டிகளிலும் சிறப்பான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தியிருக்காத பாகிஸ்தான் அணி, அவ்விரண்டு போட்டிகளிலும் தோல்வியடைந்ததன் காரணமாக இத்தொடரிலிருந்து வெளியேற்றப்பட்டது.

பாகிஸ்தான் அணியில் மாற்றங்கள் தேவையென்பதை அனைவராலும் பார்க்க முடியும் எனக் குறிப்பிட்ட மிஸ்பா உல் ஹக், பாகிஸ்தான் அணியின் துடுப்பாட்டம் ஒரு பிரச்சினையாகக் காணப்படுவதாகக் குறிப்பிட்டார்.

அது தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட வேண்டுமெனக் குறிப்பிட்ட மிஸ்பா உல் ஹக், எதிர்காலம் தொடர்பான கவனம் தேவை எனக் குறிப்பிட்டார்.

## அடுத்த போட்டியில் கிளார்க்?

சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் தொடரில் இலங்கை அணிக்கெதிராக நடைபெறவுள்ள போட்டியில் அவுஸ்திரேலிய அணித் தலைவர் மைக்கல் கிளார்க் விளையாடலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

உபாதை காரணமாக சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் தொடரில் அவுஸ்திரேலிய அணி பங்குபற்றிய முதலிரண்டு போட்டிகளிலும அவர் விளையாடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

அரையிறுதிச் சுற்றுக்கு முன்னேற வேண்டுமாயின் எதிர்வரும் 17 ஆம் திகதி நடைபெறவுள்ள இந்தப் போட்டியில் வெற்றிபெற வேண்டிய கட்டாயத்தில் இரண்டு அணிகளும் களமிறங்கவுள்ளன.

**சம்பியன்ஸ் கிண்ணம்**
**இன்றைய ஆட்டம்**
**இங்கிலாந்து Vs நியூசிலாந்து**


## பி.சி.சி.ஐ. எதிர்க்கும்

சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐசிசி) வருடாந்தக் கூட்டத்தில் டிஆர்எஸ் எனப்படும் நடுவரின் தீர்ப்பை மறுஆய்வு செய்யும் முறைக்கு எதிர்ப்பு தெரிவிக்க பிசி சிஜ முடிவு செய்துள்ளது. இத்தகவலை புதிதாக தேர்வு செய்யப்பட்டுள்ள பிசிசிஜ செயலர் சஞ்சய் படேல் தெரிவித்தார்.

ஐசிசியின் ஆண்டுக் கூட்டம் இலண்டனில் எதிர்வரும் 23ஆம் திகதி ஆரம்பமாகிறது. டெஸ்ட் போட்டி விளையாடும் அனைத்து அணிகளுக்கும் டிஆர்எஸ் முறையை அமலபடுத்துவது குறித்து ஐசிசி கூட்டத் தில் முடிவெடுக்கப்படும் என்று கூறப பட்டது.

இந்நிலையில், பிசிசிஜயின் தலைமை செயல் இயக்குநர்கள் கூட் டம் டில்லியில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட சஞ்சய் படேல் பின்னர் செய்தியாளர்களிடம் கூறுகையில், டிஆர்எஸ் முறைக்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை என்பதால் அதனை எதிர்க்க பிசிசிஜ செயற்குழுக் கூட்டத்தில் ஒருமனதாக முடிவு எடுக்கப்பட்டது. இதில் எவ்வித மாற்றமும் இல்லை என்று தெரி வித்தார்.

## காதல் வலையில் செரினா வில்லியம்ஸ்





செரினா வில்லியம்சின் தொடர் வெற்றிக்கு பின்னால், அவரது பயிற்சியாளர் பாட்ரிக் மவுரட்டோக்லு உள்ளார். இவரகளுக்கு இடையே காதல் மலர்ந்திருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்க டெனிஸ் வீராங்கனை செரினா வில்லியம்ஸ், 31. உலகின் 'நம்பர்-1' வீராங்கனையான இவர், இதுவரை ஒற்றையரில் 16, இரட்டையரில் 13 என மொத்தம் 29 கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றுள்ளார். கடந்த 2010இல் காலில் ஏற்பட்ட காயத்தால் பல மாதங்கள் விலகியிருந்த இவர, 2011 மார்ச் மாதம் களமிறங்கினார்.

**புதிய பயிற்சியாளர் :**

கடந்த ஆண்டு பிரெஞ்ச் ஓபன் டெனிஸ் முதல் சுற் றில் தோல்வியடைந்து வெளியேறினார். கிராண்ட்ஸ்லாம் தொடரில் முதன் முறையாக முதல் சுற்றில் வீழ்ந்ததால், பாட்ரிக்கை, 42, பயிற்சியாளர் ஆக்கினார். இவரது வருகை மீண்டும் வெற்றிப்பாதையை காட்டியது. 2012இல் விம்பிள்டன், லண்டன் ஒலிம்பிக், யு.எஸ்.ஓபன், 2013 இல் பிரெஞ்ச் [illegible] கடைசியாக பங்கேற்ற 31 போட்டிகளிலும் தொடர்ந்து வெற்றி பெற்றார்.

**புதிய உறவு:**

இந்நிலையில் சமீபத்தில் நடந்த விருந்து நிகழ்ச்சி ஒன்றில் பாட்ரிக், செரினா மிகவும் நெருக்கமாக காணப்பட்டனர். இது, இவர்கள் இடையிலான காதலை உறுதி செய்தது.

இதுகுறித்து செரினா கூறுகையில்,

டெனிஸ் குறித்து இருவருக்குமே தெரியும் என்பதால் தான், பெரும்பாலான விடயங்களில் எங்களுக்குள் ஒத்து போகிறது. நாங்கள் ஒருவருக்கு ஒருவர் துணையாக உள்ளோம். 11 ஆண்டுகளுக்கு பின் பிரெஞ்ச் ஓபனில் கோப்பை வென்றது மகிழ்ச்சி. என்றார்.

**பாட்ரிக் நழுவல்:**

பாட்ரிக் கூறுகையில், செரினா வெற்றிக்கு நான் தான் காரணம் என்று எப்படி கூற முடியும். செரினா களத்துக்கு வெளியிலும் மகிழ்ச்சியாக உள்ளதால் தான், போட்டிகளில் வெற்றி கிடைக்கிறது. பல்வேறு தொடர்கள் உள்ளதால், தேவையற்றதை பேசினால் செரினா கவனம் சிதறிவிடும், என்றார்

## ஐ.பி.எல். சூதாட்டத்துக்கு எதிராக மனுதாக்கல்

ஐபிஎல் கிரிக்கெட் மோசடி குறித்து சர்வதேச பொலிஸ் உதவியுடன் விசாரணை நடத்த உத்தரவிடக் கோரி சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மதுரையைச் சேர்ந்த வழக்குரைஞர் சாந்த முருகேசன், ஐபிஎல் சூதாட்ட மோசடியை சிபிஐ விசாரிக்க வேண்டும். கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை நிர்வாகத்தை மத்திய அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை வசம் ஒப்படைக்க உத்தரவிட வேண்டும் என ஏற்கனவே ஒரு மனுவை தாக்கல் செய்திருந்தார்.

அதில் இணைப்பு மனுவாக தற்போது அவர் தாக்கல் செய்துள்ள மனுவில் கூறியிருப்பதாவது:

ஐபிஎல் மோசடி விவகாரத்தில் சர்வதேச அளவில் விசாரணை நடத்த வேண்டிய அவசியம் எழுந்துள்ளது. ஏனென்றால் இதில் நிழல் உலக தாதா தாவூத் இப்ராஹிம் தொடர்பு உள்ளது.

சூதாட்டம் நடத்துவதற்காகவே ஐபிஎல் கிரிக்கெட் போட்டியை இந்த கும்பல் உருவாக்கியுள்ளது. இதற்காக 2006-2007 இல் காத்மாண்டு, லடாக் ஆகிய இடங்களில் இந்தி நடிகர்களுடன் தாவூத் இப்ராஹிம் ஆதரவாளர்கள் கூட்டம் நடத்தியுள்ளனர்.

ஐபிஎல் போட்டிகளை ஆரம்பித்து சட்ட விரோதமாக சம்பாதிக்க ஏற்பாடு செய்தவர் லலித்மோடி. சூதாட்டத்துக்கு அடிபணியாத வீரர்களை இந்த கும்பல் பழிதீர்த்துள்ளது.

இவை குறித்தும் விசாரிக்க சர்வதேச பொலிஸாரின் விசாரணை தேவை. எனவே ஐபிஎல் மோசடி குறித்து சர்வதேச பொலிஸ் துணையுடன் சிபிஐ பொலிஸ் விசாரிக்க உத்தரவிட வேண்டும் என மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா வெற்றி

இங்கிலாந்தில் நடந்துவரும் சம்பியன்ஸ் டிராபி லீக் தொடரில் தொடர்ச்சியாக 2 போட்டிகளில் வென்று ஏற்கெனவே அரை இறுதிக்கு தகுதி பெற்றுவிட்ட இந்தியா, தனது கடைசி லீக் ஆட்டத்தில் பாகிஸ்தானை எதிர்கொண்டது.

பர்மிங்காம் எட்ஜ்பாஸ்டன் மைதானத்தில் நேற்று நடந்த இப்போட்டி சம்பிரதாய ஆட்டமாக அமைந்தது.நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணி முதலில் பந்துவீசியது.

பாக். அணி 19 ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 70 ரன் எடுத்த நிலையில், கனமழை பெய்ததால் ஆட்டம் தடைப்பட்டது. மீண்டும் ஆட்டம் தொடர தாமதமானதால், தலா 40 ஓவர்கள் கொண்ட போட்டியாக நடுவர்கள் அறிவித்தனர். பாகிஸ்தான் 39.4 ஓவரில் 165 ரன்னுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

அடுத்து டக் வேத் விதிப்படி 40 ஓவரில் 168 ரன் என்ற இலக்குடன் இந்தியா களமிறங்கியது. 8.1 ஓவரில் 47 ரன் இருந்தபோது மழை குறுக்கிட்டது. மழை நின்றதும் 36 ஓவரில் 157 ரன் எடுத்தால் வெற்றி என இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

11.3 ஓவரில் 63 ரன் இருந்த போது மீண்டும் மழை குறுக்கிட்டது. தொடர்ந்து 22 ஓவரில் 102 ரன் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.. அணியின் ஸ்கோர் 78 ஆக இருந்தபோது தவான் 48 ரன் எடுத்திருந்தபோது ஆட்டமிழந்தார். இறுதியாக இந்தியா 19.1 ஓவரில் 2 விக்கெட் இழப்புக்கு இலக்கை எட்டி தொடர்ச்சியாக 3வது வெற்றியைப் பதிவு செய்தது.

---

## யுத்தத்திற்கு 30...

நேற்று கிளிநொச்சிக்கு விஜயம் செய்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அங்கு உரையாற்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறுகையில், கிளிநொச்சிக்கு பலமுறைநான் வந்துள்ளேன் அரச அமைச்சரவைக் கூட்டத்தினையும் இங்கு நாம் கூட்டியுள்ளோம்.

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவும் இங்கு அடிக்கடி வருகின்றார்.

அவர் மூலம் உங்களது பிரச்சினைகளையும், கஷ்டங்களையும் நான் அறிந்துள்ளேன்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் ஆகியோரும் உங்களது பிரச்சினைகளை எனக்குக் கூறியே வருகின்றனர்.

தற்போது இந்தப் பகுதி பாரிய அபிவிருத்தியடைந்துள்ளது நாளுக்கு நாள் வாழ்வினை சுபீட்சமாக்கக்கூடிய எல்லாவற்றினையும் நாம் செய்து வருகின்றோம்.

இன்று வடக்கும் தெற்கும் ஒரு நெருக்கமாக தருணத்தில் உள்ளதோடு எல்லா மக்களும் கைகோர்த்து வாழ வேண்டும் என்பதே எமது விருப்பபமாகும்.

அன்று துப்பாக்கிக்கும் அடக்கு முறைக்கும் அடிபணிந்திருந்தீர்கள்.ஆனால் இன்று அந்த நிலைமை மாறிவிட்டது.

எல்லா பிரச்சினைகளையும் ஒரே நாளில் தீர்த்து விடமுடியாது. 3 லட்சம் மக்களிற்கும் ஒரே நாளில் வீடு கட்டிக் கொடுக்க முடியாது எல்லா பாதைகளையும் ஒரே நாளில் திருத்திவிட முடியாது.

கிராமப் புறங்களில் இன்னும் அபிவிருத்திக்கு இடம் உள்ளது என்பதனை நான் நன்கு அறிவேன்

இவ் அபிவிருத்தியினை மாகாண சபைத் தேர்தலை நடத்தி மாகாண சபையினூடாக முன்னெடுக்கவுள்ளோம்.

இது மக்கள் கையிலேதான் உள்ளது. எனவே சரியான பக்கத்தினை தெரிவு செய்கின்ற சுதந்திரத்தினை உங்களிடம் நான் ஒப்படைக்கின்றேன்.

பல வருடங்களாக எவ்வித எதிர்பார்ப்புமின்றி வாழ்ந்த நீங்கள், இதனைப் பயன்படுத்தி வாழவேண்டும்.

அதனால்தான் எதிர்வரும் மாதங்களில் தொண்டராசிரியர்களிற்கு நியமனம் வழங்கவுள்ளோம். சமுர்த்தி உத்தியோகத்தர்கள், சிற்றூழியர்களிற்கு நியமனம் வழங்கியுள்ளோம்.

தென்னிலங்கையில் இருக்கின்ற அனைத்து சுதந்திரங்களும் உங்களுக்கு வழங்கப்படும்.கடந்த 30 வருடங்கள் நீங்களும் உங்கள உறவினர்களும் அனுவித்த துன்பம் எமக்கு தெரியும்.

யுத்தம் 30 வருடங்கள் நடைபெற்றது. அபிவிருத்தி 4 வருடங்கள் தான் நடைபெற்றது இரண்டிற்கும் வித்தியாசம் நிறையவே உள்ளது.

குறுகிய கால, இனவாத அரசியல் வேண்டாம். அவை ஆபத்தானவை. பொய்ப் பிரசாரங்களினை நம்ப வேண்டாம்.

எதிர்க் கட்சி என்ன சொன்னாலும் நாம் உங்களை மறக்க மாட்டோம். உங்கள் எல்லோருக்கும் வளமான எதிர்காலம் நிச்சியம் உருவாகும்.

கடந்த கால யுத்த சூழ்நிலைக்குள் வீழ்ந்தது போன்று மீண்டும் நீங்கள் வீழ்ந்து விடாதீர்கள். இரவு நேரத்தில் குழியில் வீழ்ந்தாலும் பகல் நேரத்தில் குழியில் வீழ்ந்து விடாதீர்கள் என அவர் தெரிவித்ததோடு, கடந்த கால யுத்த சூழ்நிலையினை மீண்டும் ஏற்படுத்தி நாட்டை குழப்ப முயற்சிக்கின்றனர் என புலம்பெயர் உறவுகளை கடுமையாகச் சாடியிருந்தார் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ.

முன்னதாக கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி இரணைமடுவில் இராணுவத்தினரால் புனரமைக்கப்பட்ட விமான ஓடுதளத்தை திறந்து வைத்தார். பின்னர் வட்டக்கச்சி மகா வித்தியாலயத்திற்கு சென்ற ஜனாதிபதி மாணவர்களுக்கான போசாக்கு உணவு வழங்கும் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

பிற்பகல் 1.30 மணியவில் கிளிநொச்சி நகரில் உள்ள மக்கள் வங்கிக் கட்டிடத்தை திறந்துவைத்துடன், அருகிலிருந்த பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட ஆலய கிராம மண்டபத்தில் ஜனாதிபதி உரைநிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என் டக்ளஸ் தேவானந்தா, கைத்தொழில் மற்றும் வணிகத்துறை அமைச்சர் ரிஷாத் பதியுதீன், நெடுஞ்சாலைகள் மற்றும் கட்டிடங்கள் நிர்மாணத்துறை அமைச்சர் திஸ்ஸ கொத்தலாவல, கல்வி அபிவிருத்தி அமைச்சர் திஸநாயக்க, வட மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி ,சீன பிரதித் தூதுவர் ரென்டான்துக், யாழ் அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், கிளிநொச்சி மாவட்ட கட்டளைத் தளபதி உதய பெரேரா, பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவரும் ,ஈ.பி.டி.பியின் உறுப்பினருமான முருகேசு சந்திரகுமார், ஈ.பி.டி.பியின் உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின், கிளிநொச்சி மாவட்ட சுதந்திரக் கட்சி அமைப்பாளர் கீதாஞ்சலி நகுலேஸ்வரன், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், வீதி அபிவிருத்தி சபை உத்தியோகத்தர்கள், சீன அதிகாரிகள், இராணுவ பிரதானிகள், மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள் என பல தரப்பினர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.(எ-4,8)

---

## தமிழக முதலமைச்சரால்...

உன்னிப்பாக அவதானித்து வருகின்றது. இதற்கு தமிழக அரசியலில் இலங்கைத் தமிழர் விவகாரம் மிக முக்கியமான அம்சமாக இருப்பதுதான் காரணம். குறிப்பாக, தேர்தல் காலங்களில் இலங்கை விவகாரம் அங்கு முக்கிய பங்கை வகித்திருந்தது.

அரசாங்கத்தை சர்வதேச ரீதியில் எதிர்க்க வேண்டும் என தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா இந்திய மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுத்து வருகிறார். இது இலங்கையின் பாதுகாப்புக்கும் இறையாண்மைக்கும் விடுக்கப்ப டும் பெரும் அச்சுறுத்தலாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான அமைப்புகளுக்கு தமிழகத்தில் இருந்து கிடைக்கும் ஆதரவுகள் கடல் மார்க்கமாக ஆயுதங்களைக் கடத்துவதற்கான வாய்ப்பை அதிகரித்துள்ளது. இது இலங்கை அரசாங்கத்துக்கு பெரும அச்சுறுத்தலாகும்.

அதேவேளை, இந்திய எல்லையில் காணப்படும் சீனாவின் பிரசன்னம் இலங்கைக்கு மறைமுகமாக ஆபத்தை ஏற்படுத்துவதாக அமையும். சீனாவின் அச்சுறுத்தலை எதிர்கொள்ள இந்தியா அமெரிக்காவின் ஆதரவை நாட வேண்டி இருக்கும். இந்நிலையில் இப்பிராந்தியத்தில் அமைந்துள்ள இலங்கைக்கு அது பெரும் பாதிப்பாக அமையும்.

அத்துடன், மாலைத்தீவில் படைத்தளம் அமைக்கும் அமெரிக்காவின் முயற்சி இப்பிராந்தியத்தில் அமைதியற்ற சூழலை உருவாக்கும்" என்றும் கோத்தபாய ராஜபக்ஷ தனதுரையில் மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)

# பொருளியல் துறை பேராசானை இழந்துவிட்டது

## பேராசிரியர் சிவநாதன் இரங்கல்

(யாழ்ப்பாணம்)

பொருளியல்துறைப் பேராசிரியர் என். பாலகிருஷ்ணனின் மறைவு பொருளியல் துறைக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கலைப்பீடாதிபதி பேராசிரியர் ப.சிவநாதன் தெரிவித்துள்ளார்.

பேராசிரியர் பாலகிருஷ்ணனின் மறைவு குறித்து பேராசிரியர் ப.சிவநாதன் விடுத்த இரங்கல் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கை மண்ணில் தமிழ்மொழி மூலம் பொருளியல்துறையைக் கட்டியெழுப்பியதில் பேராசிரியர் பாலகிருஷ்ணனின் வகிபங்கை, பொருளியல்துறை ஒருபோதும் மறந்துவிட முடியாது.

இலங்கையின் தமிழ்மொழி மூலமான பொருளியல்துறை இருக்கக்கூடிய பல்கலைக் கழகங்கள் அனைத்திலும் கடமையாற்றும் பொருளியல் துறை விரிவுரையாளர்கள் அனைவரும் பேராசிரியர் என்.பால கிருஷ்ணனின் மாணவர்கள் என்ற பெருமை அவரின் சான்றாண்மைக்கு எடுத்துக்காட்டாகும்.

அவரின் மறைவுக்கு பொருளியல்துறை ஆழ்ந்த அனுதாபத்தையும் அகவணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கின்றது.

இவ்வாறு பேராசிரியர் ப.சிவநாதன் விடுத்த இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். (ந)

## தமிழ் அரசியல் கைதிகளை வடக்கு -கிழக்குக்கு மாற்றக் கோரிக்கை

கொழும்புச் சிறைச்சாலையில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளை வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள சிறைச்சாலைகளுக்கு மாற்றுமாறு அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான அமைப்பு அரசாங்கத்தைக் கோரியுள்ளது.

இந்த தமிழ் அரசியல் கைதிகளில் பெரும்பாலானோர் வடக்கு- கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்தவர்கள் என்ற நிலையில், அவர்களைப் பார்வையிடுவதற்காக அவர்களது உறவினர்கள் கொழும்பு வர பல சிரமங்களை எதிர்கொள்வதுடன், சிறைச்சாலை அதிகாரிகளின் கெடுபிடிகளுக்கும் அவர்களது குடும்பத்தினர் ஆளாவதாக, அந்த அமைப்பின் தலைவரான சட்டத்தரணி நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்தக் கைதிகளின் குடும்பத்தினர் பெரும் பொருளாதாரச் சிக்கல்களையும எதிர்கொள் வதாகவும் தெரிவித்துள்ள அவர், ஆகவே அந்த கைதிகளை அவர்களது குடும்பத்தினர் வாழும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள சிறைகளுக்கு மாற்ற வேண்டும் என்றும் கேட்டிருக்கிறார்.

இது தொடர்பாக தாம் பல தடவைகள் நீதிமன்றங்களைக் கேட்டிருக்கின்ற போதிலும், அவை தம்மை இது தொடர்பில் சிறைச்சாலை நிர்வாகங்களிடம் பேசுமாறு கூறியிருப்பதாகக் கூறியுள்ள நாமல் ராஜபக்ஷ, ஆனால் சிறைச்சாலை அதிகாரிகள் இந்தக் கோரிகைக்கு இதுவரை செவிசாய்க்கவில்லை என்றும் கூறியுள்ளார்.

ஆகவே இது தொடர்பாக அரசாங்கம் ஒரு கொள்கை முடிவை எடுத்து அறிவிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

---

## மணிவண்ணன்...

கவும் குணச்சித்திர நடிகராகவும் பரிமளித்தவர் மணிவண்ணன்.

பாரதிராஜாவிடம் உதவி இயக்குநராகவும், கதாசிரியராகவும் வசன கர்த்தாவாகவுமாக இருந்த மணிவண்ணன் கோபுரங்கள் சாய்வதில்லை என்ற படத்தை முதலில் இயக்கினார்.

ஜல்லிக்கட்டு, சின்னதம்பி பெரிய தம்பி, இருபத்து நான்கு மணி நேரம் உள்ளிட்ட பல வெற்றிப் படங்களையும் இவர் இயக்கியுள்ளார்.

கொடி பறக்குது படத்தில் நடிப்பு வாழ்க்கையை ஆரம்பித்த மணிவண்ணன், 600க்கும் மேற்பட்ட படங்களில் குணச்சித்திர வேடங்களில் தோன்றியுள்ளார்.

திரையுலகைச் சேர்ந்த தமிழ் உணர்வாளர்களில் ஒருவராகவும் அறியப்பட்டவர் இவர். இலங்கை தமிழர்களுக்கான போராட்டத்துக்கு ஆதரவு வழங்கி வந்த அவர், விடுதலைப்புலிகள் அமைப்பின் கணிசமான ஆதரவாளராகவும் திகழ்ந்ததாக அவருக்கு நெருக்கமானவர்கள் தெரிவித்துள்ளனர்.

அவர் முன்னர் கேட்டிருந்ததற்கு இணங்க அவரது உடலுக்கு விடுதலைப்புலிகளின் கொடி போர்த்தப்பட்டிருக்கிறது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (எ-11)

---

## கூட்டமைப்புக்...

மற்றும் இராஜதந்திரிகளுடனும், 13வது திருத்தத்தை பலவீனப்படுத்தும் இலங்கை அரசின் முயற்சிகள் குறித்து கலந்துரையாடவுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரான சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

13-வது திருத்தச் சட்டத்தைப் பலவீனப்படுத்தும் 19-வது அரசியலமைப்புத் திருத்த சட்ட மூலத்தை வரும் 18-ம் நாள் நாடாளுமன்றத்தில சமர்ப்பிக்கப் போவதாக இலங்கை அரசு அறிவித்துள்ள நிலையில், இந்த அவசர சந்திப்பு இடம்பெறவுள்ளது குறிப்பிடத்தக்கது. (எ-11)

---

## பேராசிரியர்...

பல்கலைக்கழகத்தில் பொருளியல்துறை விரிவுரையாளராக இணைந்து கொண்ட இவர்,

1979களில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இணைந்து 2003 வரை பொருளியல்துறைப் பேராசிரியராகக் கடமையாற்றினார். தமிழ்மொழியில் பொருளியல் துறையைக் கட்டியெழுப்பியதில் பெரும்பங்காற்றியவர் இவர்.

வடமராட்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட பேராசிரியர் பாலகிருஷ்ணனின் இறுதிக் கிரியைகள் இன்று கொழும்பில் இடம்பெறும். (ந)

---

## கிளி. நகரில்...

சல்லையிடப்பட்டு சோதனையிடப்பட்டன. பாதுகாப்பு கமராக்களும் மண்டபத்தை சூழ பொருத்தப்பட்டிருந்தன.

ஜனாதிபதியால் திறந்து வைக்கப்பட்ட மக்கள் வங்கி கிளையிலிருந்து முன்னும் பின்னுமாக உள்ள ஐந்து கிலோமீற்றர் தூரம் வரையான ஏ-9 வீதி முழுவதும் வர்ண கொடிகளாலும், மாலைகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

வீதியின் இருபுறங்களிலும் இரண்டு அடுக்குகளில் பொலிஸாரும் இராணுவத்தினரும் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டிருந்தனர்.

குறிப்பிட்ட தூரம் வரையான வீதிப் பகுதிகளில் நிகழ்வுக்குரிய வாகனங்களில் மட்டும் பயணிக்க அனுமதிக்கப்பட்டன. ஏனைய வாகனங்கள் பயணிக்க மாற்று வீதி ஒழுங்குகளும் அங்கு ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது.

நிகழ்விற்கு வருகை தந்திருந்தவர்களில் விசேட பிரமுகர்களைத் தவிர அனைவரும் பொலிஸ் தேடுதல் பிரிவினரால் உடல்சோதனை செய்யப்பட்டே உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

ஜனாதிபதியின் நேற்றைய கிளிநொச்சி நிகழ்வுகளிற்காக ஒரு கிழமைக்கு முன்னதாகவே அப்பகுதியெங்கும் புலனாய்வுப் பிரிவினரும், இராணுவத்தினரும் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

சுமார் இரண்டாயிரத்திற்கும் அதிகமாக பொதுமக்கள் கலந்துகொண்ட கிளிநொச்சி ஏ-9 வீதி திறப்பு விழாவில் மக்களுக்கான குடிநீர் மற்றும் உணவு வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-4,8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு மீற்றருக்கு...

இப்புனரமைப்பு பணி ஒப்பந்த காலத்திற்கு மூன்று மாதங்கள் முன்னதாக கடந்த மாதம் 30-ம் திகதி முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

இவ் வீதி புனரமைப்பு ஒப்பந்தத்தினை சீனாவின் சயினா நஷனல் ஏரோ ரெக்னோலஜி மற்றும் இன்ரநஷனல் இன்ஜினியறிங் கோப்பறேஷன் ஆகிய நிறுவனங்கள் பொறுப்பு ஏற்றிருந்தன.

சுமார் 9 மீற்றர் (30 அடி) அகலத்தை உடையதாக அமைக்கப்பட்ட இக் காப்பற் வீதியில் 35 பாலங்களும், 273 மதகுகளும் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

இச் செலவினங்களின் அடிப்படையில் 9 மீற்றர் அகலம் உடைய ஏ-9 வீதியின் ஒரு மீற்றரைப் புனரமைப்பதற்கு சுமார் ஒரு இலட்சம் ரூபாய் அளவில் செலவாகியுள்ளமை தெரியவருகின்றது. (எ-4,8)


## காணி விற்பனைக்கு

கோப்பாய் மானிப்பாய் வீதியில் கலைவாணி தனியார் கல்வி நிலையத்துக்கு எதிர் ஒழுங்கையில் 1 1/2 பரப்பு காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு

வீடு 1075 சதுரஅடி

236/4 மாக்கம்பரை ஒழுங்கை
0772442663 (3051)

## கார் வாடகைக்கு or விற்பனைக்கு

Toyota Carina Car Hand to 210000
**Full payment:-690,000/=**
நாள் வாடகைக்கு:-1500/=
தொடர்பு:-0772259030
(3054)

## கட்டிட நிர்மாணத்துறையில்

தேர்ச்சி மிக்கவரா?

கொழும்புப் பிரதேசங்களில் மேசன்/கையுதவியாளர்/ பிளம்பர்/இலற்றீசன்/பெயின்டர் உடனடியாகத் தேவை.

சம்பளம் 20,000/=, 45,000/= உணவு, தங்குமிடம்...

விரைவாக அழையுங்கள்
0775561883, 0778430179
(C-3549)

## வீடு வாடகைக்கு உண்டு

யாழ்ப்பாணம் நாவலர் வீதி, அன்ன சத்திரலேனில் 7 அறையுடன் கூடிய A/C வசதியுள்ள வாகனத்தரிப்பிடத்துடன் அமைந்த புதியமாடி வீடு உடன் வாடகைக்கு உண்டு.

தொடர்பு:-0770476299
0770474116
(3055)

## இலவச இணையக் கற்கைநெறி நிறுவகம்
## SERVE e- Learning Institute

T.P: 021 225 6206 பதிவு எண்:1100

கற்கைநெறி:-
இலவச Diploma In Information Communication Technology
(ICT)
(4 மாதங்கள்)

தகைமைகள்:
- * க.பொ.த (உ/த) பரீட்சைக்கு தோற்றிப் பல்கலைக்கழக அனுமதியை எதிர் நோக்குவோர்.
- * க.பொ.த (உ/த) பரீட்சையில் சித்தியடைந்து வேலை தேடுவோர் or வேறு தொழில் பயிற்சிகளை மேற்கொள்வோர்.
- * க.பொ.த (சா/த) பரீட்சைக்குத் தோற்றியோர்.

பாடங்கள்: தகவல் தொழில்நுட்பம் (ICT)
ஆங்கிலம் (English)
தட்டச்சுப் பயிற்சி (Computer Typing)

**விண்ணப்ப முடிவு திகதி: 25.06.2013**

மேலதிக விபரங்களுக்கு:
No.66, கட்டைப்பாலி ஒழுங்கை, ஆனைக்கோட்டை. தொலைபேசி:0212256206

மேலதிக விபரங்களுக்கு நேரில் வரவும்
பதிவாளர்
SERVE e-Learning Institute
(அ-3626)

## "நீங்களும் சிறந்த முதலீட்டாளராகலாம்"

பங்குச்சந்தை முதலீட்டாளர்களுக்கான
'2ம் நிலைப் பயிற்சிப் பட்டறை
(நிதிக்கூற்றுக்களின் பகுப்பாய்வு FSA)
எதிர்வரும் 22.06.2013 சனிக்கிழமை முதல் வார இறுதி நாட்களில்
(மாலை 3.00 – 6.00)

இடம்: பங்குப்பரிவர்த்தனை கேட்போர் கூடத்தில்
பதிவுகளுக்கு: 0777 822 014 & www.cse.lk
(C-3645)

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

French மொழி கற்பிப்பதற்கு French Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட வட மாகாணத்திலுள்ள ஒரேயொரு நிறுவனம் Alliance Francaise de Jaffna மட்டுமே. இது ஓர் அரிய சந்தர்ப்பம். மேலும் தரமான Certificate ஐ பெறுங்கள்.

புதிய வகுப்புகள் விரைவில்... T.P: 0212228093
61, Kachchery-Nallur Road, Jaffna.
(றக்கா வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில்)
(3039)

## உயர்ந்த சம்பளத்துடன் நிரந்தர வேலை வாய்ப்புகள்.

விமானத் துறையிலும் துறைமுகத்திலும் (தனியார்) வேலை வாய்ப்புகள். விமான நிலையம் (தனியார்) சுத்திகரிப்பாளர்/துறைமுகத்தில் (தனியார்) சாதாரண ஊழியர்கள்/பெயின்டர்/வெல்டிங்/தச்சு போன்றவற்றுக்கு வெற்றிடம் உண்டு. 18-50 வயதான ஆண்-பெண் இருபாலாரும் தேவை.

சம்பளம் 18,000/=, 35,000/=, 40,000/= (தொழில் அடிப்படையில் சம்பளம்) உணவு, தங்குமிடம் சகாய விலைகளில்.

வருகை தரும் நாளிலே வேலை.

தொடர்பு- 0775561883, 0778430179
(C-3650)

## புதிய வேலை வாய்ப்புகள்

### இதோ அரிய சந்தர்ப்பம் அழையுங்கள்!

சம்பளம் 18,000/=, 25,000/=, 32,000/= வரையான கவர்ச்சிகரமான சம்பளத்துடன் நிரந்தர தொழில் உங்களுக்கு கல்வி அறிவு அவசியமில்லை. 'கொழும்பை' அண்மித்த பிரதான தொழிற்சாலைகளான ஜேம்/கோயெல், ஆடைத்தொழிற்சாலை, PVC, கிளவுஸ், பொலீதீன் போன்றவற்றுக்கு உற்பத்தி உதவியாளர்/லேபல்/ பொதியிடல்/தரம் பிரித்தல் பிரிவுக்கு ஆண்-பெண் 18-50 வயதினர் தேவை. உணவு தங்குமிடம் சகாய விலைகளில் (நண்பர்கள்/குழுக்கள்/ தம்பதியினர் ஒரேத் தொழிற்சாலைகளில்) தொடர்பு: 0775561883, 0778430179

103/1, Station Road, Vavuniya. (C-3651)

## உயர்கல்வியை வெளிநாட்டில் தொடரும் மாணவர்களுக்கான கல்விக்கண்காட்சி



அனுமதி இலவசம்

ஜீன் 22ஆம் திகதி 2013 (சனிக்கிழமை) இலங்கை
தாஜ் சமுத்திரா ஹோட்டலில்

### உடன் அனுமதி

காலை 10.30 மணி தொடக்கம் மாலை 7.00 மணி வரை

வாருங்கள் எமது கல்விக்கண்காட்சிக்கு விஜயம் செய்து UK, Canada, Australia, New Zealand மற்றும் Malaysia போன்ற நாடுகளிலுள்ள பல்கலைக்கழகங்களின் பிரதிநிதிகளுடன் உங்களுக்கு தேவையான அனைத்து விபரங்களையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

- புலமைப்பரிசில்கள்
- மாணவர்களின் எதிர்காலம்

CIM, CIMA, ABE, NCC, BCS, HND, ACCA மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தகைமையுடைய மாணவர்களுக்கு உயர்தர அனுமதி

இப்பொழுதே முன்பதிவுகளை செய்து
www.oecsl.lk
வியத்தகு பரிசில்களை வெல்லுங்கள்

CALL - 021 7306000 , 077 3013060
(C-3553)

Anglia Ruskin University Cambridge & Chelmsford | University of Bedfordshire | University of Bolton Professionals in Practice | University of Chester | UEL London | UK
University of Hull | Oxford Brookes University | University of South Wales Prifysgol De Cymru | Swansea University Prifysgol Abertawe | Teesside University

Gold Sponsor
Java Institute for Advanced Technology

Organised by
OEC Overseas Education Centre (Pvt) Ltd. | CDUK Campus Direct UK Your Trusted Partner in Education

கல்விக்கண்காட்சிக்கு விஜயம் செய்யும்போது உங்களுடைய மூலப்பிரதிகளையும் (Original Certificate), பிரதிகளையும் (Photocopies) கொண்டு வரவும்.

## ஒடுகள், செங்கற்கள் விற்பனைக்கு.

தரமான ஓடுகள் (டபிள் நந்தி மார்க், நூறாணி மார்க், பெப்ஸி மார்க், ஸ்டார் மார்க்) போன்ற ஓடுகள் யாழ், வன்னி ஆகிய இடங்களுக்கு விநியோகம் செய்துதரப்படும்



தொடர்புகளுக்கு - 077 3818799



(C-3646)

பிரணவன் என்ரபிறைசஸ்
இல. 35, பருத்தித்துறை வீதி, நல்லூர் யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.06.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.